மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION

TIRUNELVELI

# அகராதியியல்

**JNTA41**

முதுகலை இரண்டாமாண்டு

நான்காம் பருவம்

**2025**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012

அகராதியியல்

அலகு 1

அகராதி விளக்கம்

அகராதி - அகராதியியல் விளக்கம் - சொற்பொருண்மை - ஒரு பொருட் பன்மொழிகள் - பலபொருள் ஒரு சொல் - சிறப்புப் பொருள் (connotation) பொருள் வழக்கு வரையறை எதிர்ச்சொற்கள் முதலியவை.

அலகு 2

பண்டைய அகராதி

இலக்கணமும் அகராதியும் தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகள் நிகண்டுகளுக்கு முந்தைய குறிப்புகள்.

அலகு 3

தமிழ் நிகண்டுகள்

நிகண்டு -விளக்கம் - தமிழ் நிகண்டுகளின் வளர்ச்சி வரலாறு நிகண்டுகளின் பொது அமைப்பு-நிகண்டுகளின் யாப்பு, பொருட்பாகுபாடு.

அலகு 4

தமிழ் அகராதிகள்

தமிழில் அகராதிகளின் தோற்றம் தமிழ் அகராதிகளின் வளர்ச்சி வரலாறு -சதுரகராதி - சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) அமைப்பு - க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, துறைசார் அகராதி, கலைச்சொல் அகராதி போன்றவை.

அலகு 5

தொகுப்புப் பணிகள்

அகராதி வகைகள் - அகராதியால் விளையும் பயன்கள் - அகராதி - கலைக்களஞ்சியும்-பேரகராதி ஒற்றுமை வேற்றுமைகள் - தற்காலத்தில்

நிகழ்ந்துவரும் பல்வேறு அகராதி தொகுப்புப் பணிகள் (வட்டாரச் சொல்லகராதி, பழமொழி, விடுகதை, மரபுத் தொடர் அகராதி) போன்றவை.

# அலகு 1

# அகராதி விளக்கம்

## அகராதி

அகராதி என்பது, ஒரு மொழியில் உள்ள சொற்களை அகர வரிசையில் தொகுத்து, அவற்றின் பொருளை, அதே மொழியிலோ அல்லது பிற மொழியிலோ விளக்கும் நூல் ஆகும். அகராதியியல் என்பது அகராதிகளின் ஆய்வு மற்றும் அகராதிகளைத் தொகுக்கும் கலை ஆகும்.

அகராதி என்பது சொற்களை அகரம்முதலாக வரிசைப் படுத்தி அச் சொற்களுக்குரிய பொருளை விளக்கும் நூல் ஆகும். ' அகர வரிசை ''அகர முதல் ' என்பன போன்ற சொற்கள் அகராதியைக் குறிக்கும். பழைய காலத்தில் சொற் பொருள் கூறுபவையாக 'நிகண்டு'. 'உரிச்சொல்' 'உரிச் சொற் பனுவல்' 'கூட்டம்' போன்றவை உள்ளன. சொல்லுக்குப் பொருள் கூறும் முறையைத் தமிழ் இலக்கண நூலாக இன்று நமக்குக் கிடைத்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள உரியியலில் காணலாம்.

ஒரு மொழியில் உள்ள சொற்கள் அகரவரிசையில் அடுக்கிப் பொருள் (அர்த்தம்) கூறப்பட்டிருப்பதற்கு அகராதி என்று பெயராம். அஃதாவது, ஆனி, அறம், ஆடு, அணில் என்னும் சொற்களை எடுத்துக்கொண்டால், தமிழ் எழுத்துக்களுள் முதலெழுத்தாகிய 'அ' என்னும் எழுத்தில் தொடங்கும் அறம், அணில் என்னும் சொற்களை முதலிலும், அடுத்த எழுத்தாகிய 'ஆ' என்னும் எழுத்தில் தொடங்கும் ஆனி, ஆடு என்னும் சொற்களை அடுத்தபடியாகவும் நிறுத்த வேண்டும்; அறம், அணில், என்னும் சொற்களுள்ளும் இரண்டாவது எழுத்துக்களை நோக்கின், 'ற' என்பதனினும் 'ணி' என்பது எழுத்து வரிசையில் முதன்மையான தாதலின் அணில் என்னும் சொல்லை முதலிலும், அறம் என்னும் சொல்லை அடுத்தபடியாகவும் நிறுத்த வேண்டும்; அது போலவே, ஆனி, ஆடு என்னும் சொற்களுள்ளும் இரண்டாவது எழுத்துக் களுள் 'னி' என்பதனினும் 'டு' என்பது முதன்மையானதாதலின் ஆடு என்னும் சொல்லை முன்னும், ஆனி என்னும் சொல்லைப் பின்னும் அமைக்க வேண்டும்; இவ்வாறே இன்னும் மூன்றாவது -நான்காவது-ஐந்தாவது

எழுத்துக்களையும் ஐந்திற்கும் மேற்பட்ட எழுத்துக்களையும் நோக்கிச் சொற்களை வரிசைப்படுத்தி அவற்றிற்கு நேரே பொருளும் கொடுக்கப்பட்டிருக்கும் சுவடிக்குத் தான் அகராதி என்பது பெயர்.

அகரம்+ஆதி-அகராதி அகரம் என்றால் அ'. (அகரம் என்பதில் உள்ளகரம்' என்பது சாரியை எனப்படும்) ஆதி என்றால் 'முதல் அ என்னும் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கிச் செல்வதால் அகராதி எனப்பட்டது. இதனை 'அகர வரிசை என்னும் பெயராலும் இன்று அழைக்கின்றனர். அகரத்தை முதலாகக் கொண்டு அ. ஆ இ ஈ என்ற வரிசையில் சொற்கள் செல்வதால் 'அகர வரிசை என இக்காலத்தில் தனித்தமிழ்ப் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த அகர வரிசை முறையை ஆக்கிலத்தில் 'ஆல்பாபெடிகல் ஆர்டர்' (Alphabetical Order) என்பர். இப்பெயர் 'கிரீக்' (Greck) மொழியிலிருந்து வந்ததாகும். Alpha என்பது ஒரு சொல், Beta என்பது மற்றொரு சொல். Alpha என்பது A என்னும் எழுத்தில் தொடங்குகிறது; Beta என்பது B என்னும் எழுத்தில் தொடங்குகிறது. A என்பது கிரீக் மொழியின் முதல் எழுத்து. B என்பது அம்மொழியின் இரண்டாம் எழுத்து. கிரீக் எழுத்துக்களிலிருந்து தான் இலத்தீன் எழுத்துக்கள் தோன்றின. இலத்தீன் எழுத்துக்களால் தான் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி முதலிய ஐரோப்பிய மொழிகள் எழுதப்படுகின்றன. எனவே, ஐரோப்பிய மொழிகளில் A,B,C,D வரிசை என்று சொல்வதற்குப் பதிலாக, Aயில் தொடங்கும் Alpha என்னும் சொல்லையும், Bயில் தொடங்கும் Beta என்னும் சொல்லையும் இணைத்து Alphabet வரிசை என்கின்றனர். அ, ஆ வரிசை என்பதற்குப் பதில் 'அணில் ஆடு வரிசை' என்று சொல்வது போன்றதாகும் இது. A, B என்னும் எழுத்துக்களை அறிமுகஞ் செய்ய Alpha, Beta என்னும் சொற்கள் பயன்படுத்தப்படுவதைப் போல, இந்தக் காலத்தில் முதல் வகுப்பு மாணவரின் சுவடியில், அ. ஆ என்னும் எழுத்துக்களை அறிமுகப் படுத்த அணில், ஆடு என்னும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. வன்றோ? எனவே ஆங்கிலத்தில் Alphabetical Order என்பது போல, தமிழில் 'அணிலாடுவரிசை' என ஒரு புதுப்பெயர் படைத்துக் கொண்டு வழங்கி வரலாம். அல்லது, சுருக்கமாக 'அ-ஆ வரிசை என்று அழைக்கலாம். அதன் சுருக்கமே 'அகர வரிசை' என்பது ஆகும்.

அணிலாடு வரிசை முறையில் சொற்கள் அடுக்கப்பட்டுப் பொருளும் கூறப்பட்டிருக்கும் சுவடி 'அகராதி' என அழைக்கப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'டிக்ஷனரி' (Dictionary) என்கின்றனர்.

**அகராதியியல் விளக்கம்:**

அகராதித் தொகுப்புக்கலை ஆய்வுகளும் வளர்ந்துவரும் இன்றைய சூழலில் அகராதித் தொகுப்புமுறை குறித்த ஆய்வுகளும் அகராதியில் இடம் நெறிகளும் அகராதி பெறும் ஒருபொருட்பலசொல் (Synonym), பல் பொருட் சொல் (Polysemous word), ஒப்புருச்சொல் (Homonym), எதிர்சொல் (Antonym) பற்றிய அறிமுகங்களும் ஆய்வுகளும் மொழியியல் ஆய்வின் தாக்கத்தால் மெல்ல மெல்ல வளர்ந்து வருகின்றன. இவ்வாய்வுகளினூடே இவை பற்றிய கலைச்சொற்களும் ஆக்கம்பெற்று வருகின்றன. அகராதித் தொகுப்பு முறை பற்றிய லெக்சிகோகிராபி (Lexicography) அகராதியில் இடம் பெறும் மேற்குறிப்பிட்ட பல்வகைச் சொற்கள், அவற்றின் பொருளுறவு அடிப்படைகள், அவை தோன்றுவதற்கான மொழிச் சூழல்கள் பற்றிய லெக்சிகாலஜி (Lexicology) எனும் இரு சொற்களுக்கும் இணையான கலைச்சொற்களும் படைப்பாக்கம் பெற்று வருகின்றன. இவ்விரு சொற்களுமான சொல்வரலாறும் சொற்பொருளும் இணையான தமிழ்ச்சொல் உருவாக்க வரலாறும் இவ்விரு துறைகளும் ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள தொடர்பும் பிறதுறைத் தொடர்புகளும் இவ்வியலில் விரிவாய் ஆராயப்படுகின்றன.

லெக்சிகோகிராபி, லெக்சிகாலஜி எனும் இரு கூட்டுச் சொற்களும் முதற்கூறில் தம்முள் ஒத்தனவாய் உள்ளன. 'லெக்சிகோ' எனும் இச்சொல்லின் மூலச்சொல் Lexiko எனும் கிரேக்கச் சொல்லாகும். பெயரடைச் சொல்லான Lexiko என்பதன் மூலச்சொல் Lexis என்பதாகும். இச்சொல் பேச்சு, பேசுமுறை, சொல் எனும் பொருளுடையது.எனவே லெக்சிகோகிராபி. லெக்சிகாலஜி எனும் இரு இயல்களும் சொற்களையே ஆய்வுக்களமாகக் கொண்டுள்ளன. சொற்களை ஆராயும் இவ்விரு துறைகளும் இருவேறு நிலைகளில் அவற்றை அணுகுகின்றன. சொற்களை அணுரும் அணுகு

முறை வேறுபட்டிருந்தாலும் இவ்விரு துறைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன.

லெக்சிகோகிராபி எனும் சொல் லெக்சிகோ (Lexico). கிராபி (graphy) எனும் இரு சொற்களாலான கூட்டுச்சொல். 'லெக்சிகோ என்பதற்குச் 'சொல்' என்பது பொருள், 'கிராபி என்றால் 'எழுதுதல்' என்று பொருள். எனவே, லெக்சிகோ கிராபி என்பதற்குச் சொற்களை எழுதுதல்' என்பது சொற் பிறப்பியல் அடிப்படையிலான பொருளாயுள்ளது. இதனடிப் படையில் பார்க்கின்றபொழுது லெக்சிகோகிராபி என்பது 'சொற்களை அகராதி வடிவில் எழுதுதல்' எனப் பொருள் தருகிறது. இதன் மறுபுறத்தே 'லெக்சிகாலஜி' எனும் சொல்லின் பின்கூறான 'Logy' என்பதன் மூலச்சொல்லான 'Logos என்பதற்கு அறிதல், சுற்றல் (Learning) அல்லது அறிவியல் (Science) என்பது பொருள். எனவே லெக்சிகாலஜி என்பதற்குச் 'சொற்களைப் பற்றிய அறிவியல் (அல்லது) அறிவியலாய்வு' என்பது பொருள்.

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி லெக்சிகோகிராபி என்பதற்கு 'அகராதி அல்லது பேரகராதி தொகுத்தல் அல்லது எழுதுதல் ; அகராதி தொகுக்கும் கலை அல்லது பயிற்சி' எனப் பொருள் தந்துள்ளது. இச்சொல் ஆங்கில மொழி வரலாற்றில் 1680-இல் கையாளப்பட்டிருத்தலையும் இவ்வகராதி குறிப் பிட்டுள்ளது. லெக்சிகாலஜி என்பதற்குச் 'சொற்கள், அவற்றின் வடிவம், வரலாறு, சொற்பொருள் ஆகியவற்றை ஆராயும் அறிவியல்புலம்' எனப் பொருள் தந்துள்ளது. இச்சொல் 1830 இல் கையாளப்பட்ட வரலாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரு துறைகளும் பொதுநிலையில் சொல் பற்றிய ஆய்வுகளாக இருந்தாலும் சொற்களை அணுகும் முறையில் அடிப்படை வேறுபாடுகளை உடையனவாய் உள்ளன.

லெக்சிகாலஜி, மொழிவேறுபாடின்றிப் பொதுநிலையில் சொற்களை அணுக, லெக்சிகோகிராபி குறிப்பிட்ட மொழி பற்றியதாயுள்ளது. குறிப்பிட்ட மொழி மரபு சார்ந்ததாய் உள்ளது.

லெக்சிகாலஜி கொள்கை அடிப்படையிலானதாய் அமைய, இலக்சிகோகிராபி அகராதி உருவாக்க நடைமுறை பற்றியதாயுள்ளது.

லெக்சிகாலஜி சொல்லைக் குறிப்பிட்டதோர் ஒருங்கின் (System) ஒரு கூறாய்க் கொள்ள லெக்சிகோகிராபி ஒவ்வொரு தனிச்சொல்லையும், அதன் பொருளையும், வரலாற்றையும், இலக்கணப்பொருளையும். ஒலிப்பு முறையையும் ஆராய்ந்து தனித்தனிப் பதிவாய் அமைக்கிறது

லெக்சிகாலஜி சொற்களின் பொதுப் பண்பு பற்றிய ஆய்வு ; லெக்சிகோகிராபி ஒவ்வொரு தனிச்சொல்லின் தனிப் பண்பு பற்றிய ஆய்வு

லெக்சிகாலஜி உலகமொழிகளின் பொதுப்பண்பை ஆராய்வதால், கொள்கை பற்றிய ஆய்வாய் இருத்தலால் இங்குத் தனிமனித விருப்பு வெறுப்புகள் இடம்பெற வாய்ப்பே இல்லை. இது சொற்பொருளியல், சொல்லாக்கம் எனும் இரண்டன் கொள்கை அடிப்படையில் சொற்களை அணுகுவதால் தனிமனித உணர்வுகள் இடம்பெறுவதில்லை. ஆனால் லெக்சிகோகிராபியில் தனிமனித விருப்பு வெறுப்புகள் இடம்பெற மிகுதியும் வாய்ப்புள்ளது. ஒரு சொல்லின் சொற் பொருளை விளக்குவதில் அகராதிக் கலைஞரின் உணர்வே மிகுதியும் இடம்பெறுகிறது. சொற்பொருள், இலக்கணக்குறிப்பு இரண்டிலும் தனிமனித உணர்வை மிகுதியும் காணலாம். இவ்வகையில் லெக்சிகாலஜி கொள்கை சார்ந்த முடிவுகளை எடுக்கும் அதே வேளையில் லெக்சிகோகிராபி பெரிதும் தனிமனித விருப்பு வெறுப்பு சார்ந்ததாய் உள்ளது.

இவ்வாறு இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டனவாய் இருந்தாலும்கூட இரண்டும் ஒரு நிலையில் தொடர்புடையனவாய் உள்ளன. லெக்சிகாலஜி சொற்பொருள் பற்றி உருவாக்கும் கொள்கைகளின் அடிப்படையில் அகராதியில் சொற்பதிவுகள் அமைக்கப்படுகின்றன. ஒரு பொருட்பலசொல், பல்பொருட்சொல், ஒப்புருச்சொல் என்ப மொழியில் உருவாகும் சூழல்களையும் அவற்றைக் கண்டறி வதற்கான அடிப்படை நெறிமு றைகளையும் அவற்றின் வகைப் பாட்டு முறைகளையும் லெக்சிகாலஜி பொதுநிலையில் விளக்கு வதால் அவற்றின் அடிப்படையில்

அகராதித் தரவுகள் ஆராயப்பட்டு ஒவ்வொரு வகைச் சொற்களுக்குமான பதிவ மைப்பு நெறிமுறைகளும் வகுத்துக் கொள்ளப்படுகின்றன.

அகராதித் தொகுப்புப் பணி மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. சொற்பொருண்மை ஆய்வுகள் காலத்தால் பிற்பட்டன. நடைமுறைகளிலிருந்தே கொள்கைகள் உருவாக்கம் பெறுகின்றன. அகராதித் தொகுப்பு நெறிமுறைகளிலிருந்தே பின்னாளில் கொள்கைகள் உருவாகியிருக்கின்றன. இதனால் தான் டொரோஸ்கி (Doroszewski) என்பார், 'குறிப்பிட்ட பொருளில் லெக்சிகோகிராபி, லெக்சிகாலஜிக்கான மேம் பட்ட நெறியாக/ இயலாகக் கருதப் பெறுகின்றது. உட்கோள்களை உள் எண்ணங்களைவிட முடிவுகள் மிக முக்கியமானவை. முடிவுகளின் அடிப்படையிலேயே கொள்கை விதிகளின் தகுதிப்பாடுகள் மதிப்பிடப் பெறுகின்றன. எனவே நடை முறைச் செயலுக்கான லெக்சிகோகிராபி கொள்கை பற்றிய லெக்சிகாலஜிக்கு அடிப்படையாகிறது' (1973:36) என இருதுறைகளின் வேறுபட்ட உறவுகளையும் குறிப்பிடுகிறார்.

தமிழ் அகராதி வரலாற்றைப் பொருத்தமட்டில் அகராதித் தொகுப்புக்கலை நெறிமுறைகள் வளர்ந்துள்ள அளவுக்குச் சொற்பொருள் ஆய்வுகள் வளரவில்லை. பல்பொருட்சொல், ஒப்புருச்சொல் பதிவமைப்புகளின் வழி அவை பற்றிய கொள்கைகளை உருவாக்கும் அளவிற்குப் பதிவமைப்பு நெறி வளர்ந்துள்ளது. மொழித் தரவுகளுடன் அகராதித் தரவு களையும் அடிப்படையாய்க் கொண்டு சொற்பொருளியல் ஆய்வுகளைத் தமிழில் வெளிக்கொணரவேண்டும்.

- **அகராதி**:

- ஒரு மொழியின் சொற்களை அகர வரிசையில் தொகுத்து, அவற்றின் பொருளை விளக்கும் நூல்.

- **அகராதியியல்**:

- அகராதிகளின் ஆய்வு மற்றும் அகராதிகளைத் தொகுக்கும் கலை. இது ஒரு மொழியின் சொற் தொகுப்பை ஆராய்ந்து, சொற்பொருளியல் தொடர்புகளை விளக்கும் துறையாகும்.

- **நடைமுறை அகராதியியல்:**
- அகராதிகளைத் தொகுத்தல், எழுதுதல், திருத்துதல் போன்ற செயல்களுடன் தொடர்புடையது.
- **கோட்பாட்டு அகராதியியல் (Metalexicography):**
- அகராதி பற்றிய ஆராய்ச்சி மற்றும் கோட்பாடுகளைக் கையாளும் துறை.
- **அகராதிக்கலைஞர்:**
- அகராதியியலில் ஈடுபட்டுள்ள ஒருவர்.
- அகராதியியலின் நோக்குநிலைகள்:
- சொற்களின் பொருள், ஆர்த்தோகிராபி, தொடரியல், முன்னுதாரணங்கள் போன்றவற்றை ஆய்வு செய்தல்.
- அகராதி தரவை இணைக்கும் கூறுகள் மற்றும் கட்டமைப்புகளின் கோட்பாடுகளை ஆராய்தல்.
- பயனர் நட்பு அகராதிகளை உருவாக்குதல்.

**அகராதி சொற்பொருண்மை**

**அகர வரிசை:**

அகராதியில் சொற்கள் அகர எழுத்து வரிசையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**சொற்பொருள்:**

ஒவ்வொரு சொற்றிற்கும் அதன் பொருளை விளக்கும் விளக்கம் தரப்படுகிறது.

**பொருள்திறன்:**

அகராதி சொற்களின் பொருளை விளக்குவதோடு, அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் காண்பிக்கிறது.

**வகுப்பு**:

அகராதி சொற்களை பல்வேறு வகைகளாக (கலைச்சொற்கள், வழக்குச்சொற்கள், முதலியன) வகைப்படுத்தலாம்.

**மின்னணு அகராதி**:

டிஜிட்டல் வடிவத்தில் அகராதிகள் கிடைக்கின்றன, அவை பல ஊடகங்கள் மூலம் அணுகப்படலாம்.

**ஒரு பொருட் பன்மொழிகள்**

அகராதி என்பது ஒரு மொழியின் சொற்களை எழுத்து வரிசையில் தொகுத்து, அவற்றுக்கான பொருள்களை விளக்கும் ஒரு நூலாகும். ஒரு பொருட் பன்மொழி என்பது ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பல சொற்கள் ஆகும். அகராதிகள் பெரும்பாலும் ஒரு மொழி அகராதிகளாகவோ, இரு மொழி அகராதிகளாகவோ, அல்லது பன்மொழி அகராதிகளாகவோ இருக்கும்.

**அகராதி (Dictionary):**

- அகராதி என்பது ஒரு மொழியின் சொற்கள், அவற்றின் பொருள், உச்சரிப்பு, வாக்கியங்களில் பயன்பாடு போன்ற விவரங்களை வழங்கும் ஒரு குறிப்பேடு.
- அகராதிகள் எழுத்து வரிசையில் (அகர வரிசையில்) ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும், இதனால் சொற்களை எளிதாகக் காணலாம்.
- அகராதிகள் மொழி அகராதிகளாகவோ, இரு மொழி அகராதிகளாகவோ, அல்லது பன்மொழி அகராதிகளாகவோ இருக்கலாம்.

ஒரு பொருட் பன்மொழி (Synonyms):

- ஒரு பொருட் பன்மொழி என்பது ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பல சொற்கள் ஆகும்.

- எடுத்துக்காட்டாக, "கமலம்", "கஞ்சம்", "முளரி" ஆகிய சொற்கள் தாமரை என்னும் ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுகின்றன.

- ஒரு சொல் பல பொருள்களைக் கொண்டிருக்கலாம், அதே போல ஒரு பொருளைக் குறிக்க பல சொற்களும் இருக்க முடியும்.

அகராதியில் ஒரு பொருட் பன்மொழிகள்:

- அகராதிகள் பெரும்பாலும் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பல சொற்களையும் (ஒரு பொருட் பன்மொழிகள்) குறிப்பிடும்.

- நிகண்டுகள் என்ற அகராதிகள், சொற்களைக் கருத்துருக்கள், தலைப்புகள் அல்லது பாடப் பொருள்களின் அடிப்படையில் பாகுபாடு செய்து, ஒரு பொருட் பன்மொழிகளையும் தொகுத்து வழங்கும்.

- அகராதிகள் ஒரு சொற்களஞ்சியமாக செயல்பட்டு, ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பல சொற்களைக் காண்பிப்பதன் மூலம், மொழி அறிவை வளர்க்க உதவுகின்றன.

- **அகராதி:**

அகராதி என்பது ஒரு சொல்லின் பொருள், உச்சரிப்பு, மற்றும் பிற மொழி சொற்களின் மொழிபெயர்ப்பை வழங்கும் ஒரு புத்தகம் அல்லது ஒரு கணினி பயன்பாடு.

- **பலபொருள் ஒரு சொல்:**

ஒரு சொல் பல பொருள்களைக் குறிக்கும்போது, அது பலபொருள் ஒரு சொல் எனப்படும். எடுத்துக்காட்டாக, "மலர்" என்ற சொல் பூவை குறிக்கும், அதே போல் ஒரு பொருளை குறிக்கும்.

"கரம்" என்ற சொல் கை, சாரி, மற்றும் சாரி என பல பொருள்களைக் குறிக்கும்.

அகராதிகள் பலபொருள் ஒரு சொற்களை எவ்வாறு கையாளுகின்றன:

- அகராதிகள் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் பட்டியலிடுகின்றன.
- பொருள்களைப் பிரித்தறிய, சொற்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கான எடுத்துக்காட்டுத் தொடர்களை வழங்குகின்றன.
- பலபொருள் ஒரு சொற்களின் பயன்பாட்டைப் புரிந்துகொள்ள, தொடர்புடைய சொற்கள் மற்றும் சொற்றொடர்களைக் கொண்டு விளக்கமளிக்கின்றன.

பலபொருள் ஒரு சொல் வகைகளின் முக்கியத்துவம்:

மொழி வளத்தை வெளிப்படுத்துகின்றன, மொழியைப் புரிந்துகொள்வதையும் பயன்படுத்துவதையும் சிக்கலாக்குகின்றன, மொழிபெயர்ப்பை கடினமாக்குகின்றன, இலக்கண ரீதியிலான புரிதலை மேம்படுத்துகின்றன.

அகராதிகள் பலபொருள் ஒரு சொற்களை வரையறுப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், மொழி புரிதலை மேம்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான கருவியாக உள்ளன

**சிறப்புப் பொருள் (connotation)**

அகராதிகள் சொற்களின் அகர வரிசைப்படி தொகுக்கப்பட்ட விளக்கவுரை நூல்களாகும். இதில் சொற்களின் பொருள்கள், அவற்றின் பயன்பாடுகள், சொற்பிறப்பியல், மற்றும் பிற தகவல்கள் இடம்பெறும். சிறப்புப் பொருள் அல்லது குறிப்பீடு (connotation) என்பது ஒரு வார்த்தையின் அகராதி வரையறைக்கு அப்பால், அது தூண்டும் உணர்வுகளைக் குறிக்கும். உதாரணமாக, "வீடு" என்ற சொல்லின் பொருள் ஒரு கூரை மற்றும் சுவர்களால் ஆன ஒரு கட்டிடம். ஆனால் "வீடு" என்ற சொல்லின் குறிப்பீடு (connotation) பாதுகாப்பு, வசதி, மற்றும் குடும்பம் போன்ற உணர்வுகளைத் தூண்டும்.

அகராதிகள் சொற்களின் வரையறையைத் தர, குறிப்பீடுகளைத் தரா. சொற்களின் குறிப்பீடுகள், மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பொறுத்து வேறுபடும்.

அகராதிகள் மற்றும் குறிப்பீடு:

- **அகராதிகள்**:
- ஒரு சொல்லைப் பற்றி அகராதி வரையறையைத் தருவது.
- **குறிப்பீடு**:
- ஒரு சொல்லைப் பார்க்கும்போது, அது தூண்டும் உணர்வுகள்.
- எடுத்துக்காட்டுகள்:
- **வீடு (house):**
  - **பொருள் (denotation):** ஒரு கூரை மற்றும் சுவர்களால் ஆன கட்டிடம்.
  - **குறிப்பீடு (connotation):** பாதுகாப்பு, வசதி, குடும்பம்.
- **மரம் (tree):**
  - **பொருள் (denotation):** ஒரு உயிருள்ள தாவரம், வேர், தண்டு, கிளைகளுடன்.
  - **குறிப்பீடு (connotation):** நிலைத்தன்மை, வலிமை, இயற்கை.
- **எச்சரிக்கை (warning):**
  - **பொருள் (denotation):** ஆபத்து அல்லது கஷ்டத்திலிருந்து எச்சரிக்கும்.
  - **குறிப்பீடு (connotation):** பதட்டம், பீதி, எச்சரிக்கை.

## பொருள் வழக்கு வரையறை எதிர்ச்சொற்கள்

சிறப்புப் பொருள் (connotation) என்பது ஒரு சொல்லின் நேரடி பொருள் அல்லாத, அதனுடன் தொடர்புடைய உணர்வுகள், கருத்துக்கள் அல்லது யோசனைகள் ஆகும். வழக்கு (usage) என்பது ஒரு சொல்லைப் பயன்படுத்துவதைக் குறிக்கும், மேலும் அது இலக்கண நெறிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும் அல்லது இல்லாமலும் இருக்கலாம். வரையறை (definition) என்பது ஒரு சொல்லின் பொருள் அல்லது கருத்தை விளக்குவது, மேலும் எதிர்ச்சொற்கள் (antonyms) என்பது ஒரு சொல்லுக்கு எதிர் பொருளாக இருக்கும் சொற்கள்.

1. சிறப்புப் பொருள் (Connotation):

- ஒரு சொல்லின் நேரடி பொருள் (denotation) தவிர, அதனுடன் தொடர்புடைய உணர்வுகள், கருத்துக்கள், அல்லது யோசனைகள்.
- உதாரணமாக, "வீடு" என்ற சொல் ஒரு கட்டடத்தைக் குறிக்கிறது, ஆனால் அது பாதுகாப்பான இடம், குடும்பம் போன்ற உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது.
- "கலை" என்ற சொல் ஒரு செயல்திறனை (skill) குறிக்கலாம், ஆனால் அது வெளிப்பாடு, ஆழம் போன்ற உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது.

2. வழக்கு (Usage):

- ஒரு சொல்லைப் பயன்படுத்துவதைக் குறிக்கும், அது இலக்கண நெறிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.
- உதாரணமாக, "அவன் போயிருந்தான்" என்பது இலக்கணப்படி சரி, ஆனால் "அவன் போயிருந்தான்" என்பது இன்னும் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படுகிறது.

- "செய்யுள் வழக்கு" என்பது செய்யுள்களில் பயன்படுத்தப்படும் சிறப்பு சொற்களையும், சொற்றொடர்களையும் குறிக்கும்.

3. வரையறை (Definition):

- ஒரு சொல்லின் பொருள் அல்லது கருத்தை விளக்குவது.
- உதாரணமாக, "கால்" என்பது ஒரு விலங்கின் உடலின் ஒரு பகுதியைக் குறிக்கிறது, மேலும் அது நடப்பதற்குப் பயன்படுகிறது.
- "பொருத்தம்" என்பது ஒரு பொருளின் நிலை, அமைப்பு, அல்லது பண்பு, இன்னொரு பொருளுக்கிடையில் சரியாக பொருந்துதல் அல்லது ஒத்திருத்தல்.

4. எதிர்ச்சொற்கள் (Antonyms):

- ஒரு சொல்லுக்கு எதிர் பொருளாக இருக்கும் சொற்கள்.
- உதாரணமாக, "நல்லது" என்ற சொல்லின் எதிர்ச்சொல் "கெட்டது".
- "பெரியது" என்ற சொல்லின் எதிர்ச்சொல் "சின்னது".

5. சிறப்புப் பொருளும், வழக்கினையும் தொடர்புபடுத்தி:

- சிறப்புப் பொருள் என்பது ஒரு சொல்லின் பயன்பாட்டில் (வழக்கில்) வெளிப்படும், அந்த சொல்லின் நேரடி பொருள் தவிர.
- எடுத்துக்காட்டாக, "மரம்" என்ற சொல் ஒரு தாவரத்தைக் குறிக்கிறது (வரையறை), ஆனால் அது மரத்தின் நிழல், பலன், மரத்தின் மூலம் கிடைக்கும் காற்று போன்ற உணர்வுகளையும் (சிறப்புப் பொருள்) சேர்த்து, அதைப் பயன்படுத்துகிறோம் (வழக்கு).

எடுத்துக்காட்டு:

"துணி" என்ற சொல்லுக்கு நேரடிப் பொருள் (வரையறை) ஒரு ஆடைக்கு பயன்படும் பொருள். ஆனால், "துணி" என்ற சொல்லின் சிறப்புப் பொருள் ஒருவரின் செயலில் துணிச்சலும், தைரியமும் இருக்கும் என்ற உணர்வையும் வெளிப்படுத்தும்.

## அலகு 2

## பண்டைய அகராதி

### அகராதிகள்

பண்டைய அகராதிகள் என்பது அகராதிகளின் ஒரு வகையாகும், அவை பெரும்பாலும் சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்ற பழங்கால இலக்கிய நூல்களிலிருந்து பெறப்பட்ட சொற்களைக் கொண்டுள்ளன. அகராதி அகராதி என்பது அகரவரிசைப்படி சொற்களைக் கொண்டு அவை பயன்படும்போது அவற்றின் பொருளைக் கொடுக்கும் நூலை குறிக்கும்.

பண்டைய அகராதிகளின் வகைகள்:

1. **1. சதுரகராதி:**

வீரமாமுனிவர், 1732 இல் உருவாக்கிய முதல் தமிழ்-தமிழ் அகராதி.

2. **2. கழகத் தமிழ் அகராதி:**

திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் 1964 இல் தொகுத்து வெளியிடப்பட்டது.

3. **3. தமிழ் இலக்கிய அகராதி:**

வித்துவான் பாலும் கண்ணப்ப முதலியாரால் தொகுக்கப்பட்டது.

4. **4. பண்டைய இலக்கிய இலக்கணச் சொற்கள்:**

சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்ற நூல்களில் உள்ள சொற்கள்.

5. **5. நிகண்டுகள்:**

சொற்களின் பொருளை விளக்கும் நூல்கள்.

பண்டைய அகராதிகளின் முக்கியத்துவம்:

- பண்டைய தமிழ் சொற்களின் பொருள் மற்றும் பயன்பாட்டை அறிய உதவுகின்றன.

- தமிழிலக்கியத்தை படிப்பவர்களுக்கு ஒரு சிறந்த கருவியாக அமைகின்றன.
- பழைய நூல்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ள உதவுகின்றன.
- தமிழின் சொல்வளம் மற்றும் இலக்கியத்தை அறிய உதவுகின்றன.

**இலக்கணமும் அகராதியும்**

புளும்ஃபீல்டு (Bloomfield) அகராதியை 'இலக்கணத்தின் பின்னிணைப்பு', முறையற்ற வடிவங்களின் பட்டியல் என்கிறார் (1933:974). இலக்கணம் தனித்தனிச் சொற்களின் இயல்பு பற்றிப் பேசாமல் குறிப்பிட்ட இலக்கணக்கூறுகள் பற்றிய இலக்கணத்தை வரையறுக்கின்றது. தமிழ் இலக்கண மரபில் பெயர், வினை, இடை, உரிகளின் பொது இலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் இயல்பு மீறிய வடிவங்கள் குறிப்பிடப்படவில்லை. இதைப் போலவே வினைகளின் சொல்விரிவுகள் பற்றியோ, ஆக்கச் சொற்களின் (Derivatives) உருவாக்க நெறிமுறை குறித்தோ இலக்கண வரையறை செய்யப்படவில்லை. இவை அனைத்தும் அகராதியில் இடம் பெற்றுள்ளன.

இலக்கணம் மொழி ஒருங்கில் இடம்பெறும் இலக்கணக் கூறுகளை வரன்முறைப்படுத்தி விதிவகுப்பது. இவை குறிப்பிட்ட மொழியின் நிலைத்த இலக்கண வரையறைகள். எனவே, இலக்கணம் மூடிய முடிவினது (Closed end எனப்பெறுகிறது. ஆனால் அகராதியோ ஒவ்வொரு தனிச் சொல்லில், அதன் பொருள்விரிவில் கவனம் காட்டுவதாய் உள்ளது. இதனால் அகராதியில் இடம்பெறும் சொற்களும் பொருட்களும் நாளும் நாளும் பெருகிவருகின்றன. இதனால் அகராதிப்பதிவுகள் மாறிவரும் இயல்பினவாய் உள்ளன. எனவே, அகராதி இத்திறந்த தன்மையால் திறந்த முடிவு (Open end) எனப்பெறுகின்றது. இலக்கணம் வினை, வினையெச்சம், பெயரெச்சம், பெயர், வினைமுற்று எனும் இலக்கணக் கூறுகள் (Classes) பற்றியதாய் அமைய அகராதியோ தனியன் கள் (Members) பற்றியதாய் அமைகின்றது. எனவே இலக்கணம் கட்டுடையதாயும் (Bound) அகராதி கட்டிலாததாயும் (Free) இயங்குகின்றன.

அகராதி இலக்கண மரபோடு தொடர்புடையது. அடிப்படை மொழியமைப்பு பற்றிய கருத்துகளில் இருவித வேறுபாடுகள் உண்டு.

முதலாவது கருத்து அமைப்பு மொழியியல் அல்லது பகுப்பு மொழியியல் (Structural of Taxonomic Linguistics) பற்றியதாய் உள்ளது. இரண்டாவது கருத்து மாற்றிலக்கண மொழியியல் (Transformational Generative Linguistics) சார்ந்ததாய் அமைகின்றது. இவ்விரு மொழியியல் அணுகுமுறைகளும் மும்மூன்று பகுதிகளை உடையன. அமைப்பு மொழியியல் வடிவமைப்பு (Structure of expression). பொருளமைப்பு (Structure of Content) எனும் இரு பகுதிகளுடன் சொற்களஞ்சியம் (Vocabulary) எனும் மூன்றாவது பகுதியையும் கொண்டது. 'இதில் இறுதியாய் உள்ள சொற்கோவையே வடிவமைப்பையும் பொருளமைப்பையும் தொடர்பு படுத்துவது. அதாவது சொற்களையும் அவற்றின் பொருள்களையும் பற்றிப் பேசுவது (ஒ. நோ. Gleason, 1961:6) என்கிறார் க. பாலசுப்பிர மணியன் (1989:56).

அமைப்பு மொழியியலைப் போலவே மாற்றிலக்கண மொழியியலும் தொடரியல் (Syntax), பொருளியல் (Semantics), ஒலியனியல் எனும் மூன்று பகுதிகளைக் கொண்டது. இவற்றில் இரண்டாவது பகுதியில் அடங்கும் இருபிரிவுகளுள் அகராதியும் ஒன்று. ஆக இதிலேயும் சொற்பொருள் கூறும் பகுதி உள்ளது.

'இவ்விரண்டையும் ஒப்பிடும் பொழுது ஒன்று தெளிவாகிறது. மொழியமைப்பைப் பற்றிய கண்ணோட்டத்தில் வேறுபாடு இருப்பினும் அகராதி அல்லது சொற் களஞ்சியமும் அவற்றின் பொருள் விளக்கமும் இலக்கணத்தின் பகுதியாகக் கருதப்படுகின்றன என்பது அது. இவ்வாய்வு தனிப்பகுதியாக அமைகின்றதா இன்னொரு பகுதியின் உட்பிரிவாக அமைகின்றதா என்பதிலும் பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடத்திலுமே வேறுபாடுகள் உள்ளன* (க. பாலசுப்பிர மணியன், 1989:54) எனும் கருத்து மொழியியலின் ஒரு பகுதியாய் அகராதி இருந்ததை வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பியத்தில் இடையியல், உரியியல், மரபியல் எனும் மூன்று இயல்களிலும் சொற் பொருள்கள் தரப்பட்டுள்ளன. இடையியலில் பல இடைச் சொற்களின் பொருள்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. மரபியலில் சொற்களின் மரபு பற்றிய சொற்பொருட் செய்திகள் பேசப்பட்டுள்ளன. இவ்விரண்டினின்றும் வேறுபட்டு உரியியல் முழுக்க முழுக்கச் சொற்பொருள்

கூறும் கருவிநூலாய் அமைந்து சிறு அகராதியாகவே உள்ளது. ஒருபொருட்பலசொல். பல்பொருட் சொற்களின் பொருட்கள் தரப்பட்டிருப்பதுடன் சொற்பொருள் விளக்க நெறிமுறைகள் சிலவும் கூறப்பட்டுள்ளன. இவ்வியலில் இடம்பெற்றுள்ள பலசொற்களும் குறிப்பிட்ட ஒரு இலக்கண வகையைச் சார்ந்தவையல்ல. இவ்வியலில் ஆக்கப்பெயர், பண்புப்பெயர் ஒட்டுப்பெயர், வினையடி, தொழிற்பெயர், தொழில் ஆக்கப் பெயர் (ஆக்கச் சொற்கள்), எதிர்மறைத் தொழிற்பெயர். பெயரடை, வினையடை எனும் பலவகைச் சொற்களும் பதிவுகளாய் இடம்பெற்றுள்ளதை ஆய்வறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர் (கி. நாச்சிமுத்து, n.d. பக்.2,3). எனவே இவை அனைத்தையும் உரிச்சொல் எனும் இலக்கணக் கலைச்சொல்லால் குறிப்பிடவியலாது. உரியியல் அகராதி என்பதால் இங்குப் பலவகைச் சொற்களும் அகராதிச் சொற்களாய்த் தரப்பட்டுள்ளன. எனவே உரிச்சொல் என்பதை இக்கால வழக்கில் நாம் பயன்படுத்தும் 'அகராதிச்சொல்' என்பதற்கு இணையான சொல்லாய்க் கருதலாம்.இவ்வாறு உரியியல் அகராதியாய் இருந்ததோடு ''எழுத்ததிகாரத்திலும் பொருள் வேற்றுமையின் அடிப்படையில் புணர்ச்சி வேற்றுமை அமை வதை விளக்குகிறார் ..உரிச்சொல் பற்றிப் பேசுமுன்பே, சொற்பொருண்மை இலக்கண அமைப்பைப் பாதிப்பதையும் அதனால் பாதிக்கப்படுவதையும் காட்டியிருப்பது சொற் பொருண்மைக்கு இலக்கணத்தில் உள்ள பங்கை அவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதையும் அதனை இலக்கணத்தின் கூறாகவே கருதினார் என்பதையும் புலப்படுத்துகின்றது' (க. பாலசுப்பிரமணியன், 1989:58) எனும் நிலையில் தொல்காப்பியம், இலக்கணத்தில் சொற் பொருட்கு முக்கியத்துவம் கொடுத்ததும் பெறப்படுகின்றது.

மொழியியலின் ஒரு பகுதியாய் இருந்த சொற்களஞ்சியம் தனி இயலாய் வளர்ந்ததை போல் மரபிலக்கணத்தின் ஒரு கூறாய் இருந்த உரியியல், நிகண்டு எனும் தனி நோக்குநூலாய் (Reference Book) வளர்ந்துள்ளது.

தமிழ் ஒருமொழி அகராதிகள் பலவற்றுள்ளும் பெயரடை, வினையடைச் சொற்கள் பரவலாய் இடம்பெற்று வந்துள்ளன. இலக்கணக் குறிப்பு ஏதும் இன்றி இவை பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இருமொழி அகராதிகளில் இவை பெயரடை, வினையடை எனும் இலக்கணக் குறிப்புடன் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இவ்விருமொழி அகராதிகளில் வினையின

சொல்விரிவுக் குறிப்புகளும், வினைவகைப் பாடும், செயப்படுபொருள் குன்றிய, குன்றா இயல்புகளும், தன்வினை, பிறவினைக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. இவை மரபிலக்கணங்களில் இடம்பெறாத இலக்கணக் குறிப்புகள். இலக்கணங்களில் இவை இடம்பெறாத நிலையில் சொற்களின் பெயரடை, வினையடைச் செயற்பாட்டையும் வினையின் மேற்குறிப்பிட்ட இலக்கணத் தகவல்களையும் பெற இவ்வகராதிகளே துணையாகின்றன. இந்நிலையிலும் அகராதிகள் இலக்கணத்தின் பின்னிணைப்புகளாகின்றன.

தமிழ் அகராதிமரபு புதிய இலக்கண உருவாக்கத்திற்கும் வித்திட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் ஒவ்வொரு வினையும் வினைவகைப்பாட்டு எண்ணுடன் (Number of Conjugation) பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் முன்னோடியாய் அமைவது கிரௌல் (Graul) என்பார் 1855-இல் உருவாக்கிய Outline of Tamil Grammar எனும் நூலில் இடம்பெற்ற வினைவகைப்பாடே ஆகும். இவ்விலக்கணத்திலிருந்து அகராதியில் இடம்பெற்ற வினைவகைப்பாட்டுக் குறிப்பு பின்னாளில் வினைத்திரிபு (Conjugation of verb) பற்றிய இலக்கணம் விரிவான நிலையில் உருவாக வித்திட்டது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் தரப் பட்ட வினைப்பதிவுத் தரவுகளை அடிப்படையாய் கொண்டு 1958-இல் மு. இராகவையங்கார் 'வினைத்திரிபு விளக்கம்' எனும் இலக்கண நூலை எழுதியுள்ளார். இவ்விலக்கணத்தில் பன்னிரண்டு வகை வினைகளும் அவ்வகைகளும் அடங்கும் வினை ஈறுகளும் விதிமுறைப் படுத்தித் தரப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு வகையுள் அடங்கும் வினைகளும் ஈறுவாரியாகப் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன. தமிழ் மரபில் இவ்வாறு இலக்கணமும் அகராதியும் தொடர்ச்சியாய்த் தொடர்பு கொண்டு வளர்ந்து வந்துள்ளன. எதிர்காலத்தில் பெயரடை, வினையடைகளுக்குத் தரவோடு கூடிய இலக்கணத்தை உருவாக்க ஏற்றவகையில் பேரள விலான தரவுகள் தமிழ் அகராதிகளில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அகராதிகள் பின்னிணைப்புகளாய் மட்டுமல்ல ஒரு இலக்கண உருவாக்கத்திற்கான தரவு மூலங்களாயும் அமைந்துள்ளன.

## தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகள்

தொல்காப்பியரது காலத்தைத் திட்டவட்டமாக உறுதிப் படுத்துவதற்குரிய அகச்சான்று யாதொன்றுமிலது. நம் முன்னோர்கள்

முறையாக வரலாற்றை எழுதி வைக்காததால் நேர்ந்த பெருங்குறையே இது. இதனால், பெரும்பாலான மன்னர்கள், புலவர்கள் முதலியோர்தம் காலத்தை இன்னமும் சரியாக வரையறுத்துக் கூற முடியவில்லை. கால வாராய்ச்சி ஓரளவு உய்த்துணர்வின் வாயிலாகவே செய்யப்படுகிறது. இந்நிலையில் தொல்காப்பியக் காலமும் உய்த்துணர்ந்தே (யூகித்தே) உரைக்கப் படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய கடைச் சங்கப் புலவர்களேயன்றி, அதற்கும் முன்தோன்றிய இடைச் சங்கப் புலவர்களும் இந்தத் தொல்காப்பியத்தைப் பயன்படுத்தினர். தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட பேரவைக்குத் தலைமை தாங்கிய நிலந்தரு திருவிற் பாண்டியனும் தலைச்சங்க காலத்தைச் சேர்ந்தவனாக ஆராய்ச்சியாளர் சிலரால் அறிவிக்கப்பட்டுள்ளான். எனவே, எது எது எப்படியிருந்த போதிலும், இற்றைக்கு இரண்டா யிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முந்தியது தொல்காப்பியம் என உறுதியாகக் கூறலாம்; ஒரு தோற்றமாக மூவாயிரம் ஆண்டுகட்கு முந்தியது என்று மொழியலாம்; எனவே, தொல்காப்பியத்தின் காலம் ஏறத்தாழ கி.மு. 1000 ஆகும். ஐயாயிரம் ஆண்டுகட்கு முந்தியது என்று மொழிவாருமுளர்.

**நூலின் அமைப்பு**

தொல்காப்பியம் நூற்பா (சூத்திர) நடையாலானது இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையுடையதென்பது முன்னரே கூறப்பட்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் (உட்பிரிவுகள்) உள்ளன. ஆக மொத்தம் (3×9=27) இருபத்தேழு இயல்களையுடையது தொல்காப்பியம்

எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணமும், சொல்லதிகாரத்தில் சொல்லிலக்கணமும், பொருளதிகாரத்தில் வாழ்வியல் இலக்கணமும் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் சொல்லப் பட்டுள்ளமை ஈண்டு மீண்டும் நினைவுகூரத் தக்கது.

சொல்லதிகாரத்திலுள்ள இடையியல் உரியியல் என்னும் இரு பகுதிகளிலும், பொருளதிகாரத்திலுள்ள ள்ள மரபியல் என்னும் பகுதியிலும் சொற்பொருள் கூறும் அகராதிக் கூறு அமைந்துள்ளது. இனி முறையே அம்மூன்று இயல்கள் குறித்து ஆய்வாம்:

**இடையியல்**

இடையியலில், மன், தில், கொன், உம், ஓ, ஏ,ன,என்று. மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர் குரை,மா,மியா, இக, மோ, மதி, இகும், சின். அம்ம, ஆங்க, யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, ஆக, ஆகல்,என்பது,ஔ, எனா, என்றா, ஓடு - முதலிய இடைச்சொற்கட்கு உரிய பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சில சொற்களின் பொருள்கள் வருமாறு: இடைச்

'கொன்' என்னும் இடைச்சொல், அச்சம், பயன் இல்லாதது, காலம், பெருமை என்னும் நான்கு பொருள் உடையதாம்;

"அச்சம் பயிமிலி காலம் பெருமையென்று

அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே."

என்பது தொல்காப்பிய நூற்பா. 'மன்ற' என்னும் சொல்லுக்குத் தேற்றம் (தெளிவு) என்று பொருளாம். 'தஞ்சம்' என்னும் சொற்கு எண்மை (எளிமை) என்று பொருளாம். 'கொல்' என்னும் சொற்கு ஐயம் (சந்தேகம்) என்று பொருளாம்:

"மன்ற என்கிளவி தேற்றம் செய்யும்."

"தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே"

"கொல்லே ஐயம்."

என்பன நூற்பாக்கள் இவ்வாறே மற்ற இடைச்சொற்களின் பொருள்களையும் தொல்காப்பிய இடையியலில் கண்டு கொள்க எல்லா இடைச் சொற்களையும் எல்லாப் பொருள்களையும் ஈண்டுக் கூறமுடியாது என்று தொல்காப்பியரே எழுதியுள்ளார். '

**உரியியல்**

சொற்பொருள் கூறும் துறையில் மிகவும் இன்றியமையாத தான உரியியலில் 'உறு' என்னும் சொல் முதலாக 'எறுழ்' என்னும் சொல் ஈறாக நூற்றிருபது உரிச் சொற்கட்குப் பொருள் கூறியுள்ளார். தொல்காப்பியர். மாதிரிக்காகச் சில சொற்களின் பொருள்கள் வருமாறு:

உறு, தவ, நனி என்னும் மூன்று உரிச்சொற்களும் 'மிகுதி' (அதிகம்) என்னும் பொருள் உடையனவாம்:

"உறுதவ நனியென வரூஉ மூன்றும்

மிகுதி செய்யும் பொருள என்ப.

என்பது நூற்பா. குரு, கெழு என்னும் சொற்கட்கு நிறம் என்று பொருளாம். செல்லல், இன்னல் என்னுஞ் சொற்கட்கு இன்னாமை (துன்பம்) என்று பொருளாம்:

"குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே."

"செல்லல் இன்னல் இன்னா மையே."

என்பன நூற்பாக்கள். மேலும் சில சொற்பொருள் அறிவிக்கும் நூற்பாக்கள் வருமாறு:

"மல்லல் வளனே." (மல்லல்-வளம்)

"மழவும் குழவும் இளமைப் பொருள."

"சீர்த்தி மிகுபுகழ்!"

"மாலை இயல்பே"

"கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்." (உள்ளது சிறத்தல்-Evolution)

"கதழ்வும் துனைவும் விரைவின் பொருள."

"தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்"

"தடவும் கயவும் நளியும் பெருமை."

"பழுது பயம் இன்றே." (பயம்-நன்மை)

"முழுது என்கிளவி எஞ்சாப் பொருட்டே."

"வம்பு நிலையின்மை."

“மாதர் காதல்’

"புலம்பே தனிமை,

வெம்மை வேண்டல்." (விருப்பம்)

"வறிது சிறிது ஆகும்."

"ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்."

"பையுளும் சிறுமையும் நோயின் பொருள."

"எய்யாமையே அறியாமையே."

"தெவ்வுப் பகையாகும்."

"செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்."

"விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்."

"கருவி தொகுதி." (கூட்டம்)

"இலம்பாடு, ஒற்கம் ஆயிரண்டும் வறுமை."

"பே நாம் உரும் என வரூஉங் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள."

"வாள் ஒளியாகும்."

"உசாவே சூழ்ச்சி." (ஆலோசனை)

"வயா என்கிளவி வேட்கைப் பெருக்கம்."

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்."

"புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி."

(யாணர்-புதுவருவாய்)

"யாணுக் கவினாம்." (யாணு -அழகு)

"ஐ வியப்பு ஆகும்."

"வையே கூர்மை"

"எறுழ் வலி ஆகும்."

மேலுள்ள நூற்பாக்களில் பல வளமான அரிய அழகிய புதிய சொற்களையும் அவற்றின் பொருள்களையும் கண்டோம்; அரிய சொற்கட்கிடையே தீர்தல், தீர்த்தல், பழுது, முழுது, செழுமை ஆகிய எளிய சொற்களையும் கண்டோம்; நமக்கு எளியனவாகத் தோன்றும் இச்சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் அரியனவாகக் கருதப்பட்டன போலும். மற்றும், தொல்காப்பியர் 'கடி' என்னும் ஓர் உரிச் சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்:

கடி என் கிளவி வரைவே

கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்சம் முன்தேற்று ஆயீ ரைந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கு

ம்மே ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே."

இந் நூற்பாவில் கடி என்னும் சொற்கு உரியை பன்னிரு பொருள்களைக் காணலாம்.

இப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள சொற்களுள் சில சொற்கட்கு எல்லாரும் அறிந்த பொருள் கூறப்படவில்லையே என்று சிலர் கேட்கலாம் ; எடுத்துக் காட்டாக,-கடி என்னும் சொல்லுக்குக் 'கடித்தல்' என ஒரு பொருளும் உண்டே-அது தொல்காப்பிய நூற்பாவில் கூறப்படவில்லையே என்றும், மாலை என்னும் சொல்லுக்கு மாலை நேரம் எனவும் ஒரு பொருள் உண்டே அது கூறப்படவில்லையே 'மாலை இயல்பே' என இயல்பு (தன்மை) என்னும் பொருள் மட்டுந்தானே கூறப்பட்டிருக்கிறது என்றும் கேட்கலாமல்லவா? இதற்குத் தக்க விடை வருமாறு:

கடித்தல் எனப் பொருள்படும் இடத்தில் கடி என்னும் சொல் வினைச்சொல்லாகும்; வரைவு, கூர்மை முதலிய பொருள் படும்போது கடி என்னும் சொல் உரிச்சொல்லாகும். மாலை நேரம் எனப் பொருள்படும்

இடத்தில் மாலை என்னும் சொல் காலப் பெயர்ச்சொல்லாகும்; இயல்பு என்று பொருள்படும் போது மாலை என்பது உரிச்சொல்லாகும். இந்தப் பகுதியோ உரியியல் எனவே, சொற்கள் உரிச்சொற்களாக இருக்கும் நிலைக்கு மட்டுமே உரியியலில் பொருள் கூறப்படும்.

தொல்காப்பியர் உரியியலில் நூற்றிருபது சொற்களையும் அவற்றிற்குப் பொருளாகப் (அர்த்தமாகப்) பல சொற்களையும் கூறிவிட்டு, இறுதியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"எடுத்துக் கூறியுள்ள சொற்களைப் புரிந்துகொள்வதற்காக அவற்றின் பொருள்களாகச் சொல்லப்பட்டுள்ள சொற்களும் சிலருக்குப் புரியவில்லையென்றால், அவற்றிற்கும் நான் பொருள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது; அப்படிச் சொல்வதானால் அதற்கு எல்லையேயிராது; எனவே, ஒருவனுக்கு ஒரு சொல்லும் அதன் பொருளும் புரியவில்லை என்றால், அவனுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர், நன்றாகத் தெரிந்த வேறு ஓர் எளிய சொல்லின் துணைகொண்டோ- அல்லது- கண்ணுக்குத் தெரியும் ஓர் உருவப்பொருளைக் காட்டி அதன் துணை கொண்டோ விளக்கலாம் ஆசிரியர் எவ்வளவுதான் முயன்று உணரும் ஆற்றலையும் உணர்த்தினும், கற்பவரின் பொறுத்தே பொருள் புலப்பாட்டில் வெற்றி கிடைக்கும்."- என்று தொல்காப்பியர் மொழிந்துள்ளார். இதனை.

"பொருட்குப் பொருள் தெரியின் அதுலரம் பின்றே."

"பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்."

"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே."

என்னும் உரியியல் நூற்பாக்களால், உணரலாம். இக்காலக் கல்வியில் சொல்லுக்குப் பொருள் கூறும் முறைபற்றிப் பயிற்று முறை (போதனாமுறை) நூல்களுள் பல வழிகள் கூறப்பட்டுள்ளன; அவற்றுடன், மேலுள்ள தொல்காப்பிய நூற்பாக்களையும் கருத்திற் கொள்வது கல்வியுலகத்திற்குக் கடமையாகும்.

**மரபியல்**

மரபியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதியில் உள்ளது. இன்னும் கேட்டால், தொல்காப்பிய முழு நூலின் இறுதிப் பகுதியே மரபியல்தான், மரபியலிலும் சொற்பொருள் கூறும் துறைக் கூறு அமைந்துள்ளது. மரபு என்னும் சொல்லுக்கு ஈண்டு முறைமை அல்லது வழக்கமுறை என்று பொருள் கொள்ளலாம்; அஃதாவது, இதையிதை இப்படியிப்படித்தான் சொல்வது முறை - இதையிதை இப்படியிப்படித்தான் செய்வது வழக்கம் என்று வகுத்துக்கொண்டு உலக வழக்கில் பின்பற்றி வருகிறோமல்லவா? அதற்குத்தான் மரபு என்று பெயராம். எடுத்துக்காட்டாக, மிகச் சிறிய கோழியைக் கோழிக் குஞ்சு என்று சொல்வதுதான் மரபே தவிர, கோழிக் குட்டி என்று சொல்வது மரபன்று; மிகச் சிறிய யானையை யானைக் குட்டி என்று சொல்வது மரபே தவிர, யானைக்குஞ்சு என்று சொல்வது மரபன்று.

தொல்காப்பியர் மரபியலில் இதையிதை இப்படி யிப்படித் தான் சொல்லவேண்டும் என்ற முறையில் பலவகைப் பொருள் கட்குரிய மரபுச் சொற்களைக் கூறியுள்ளார். ஆனால், ஆசிரியர் காலத்தில் வழங்கிய சில மரபு முறைகள் பிற்காலத்தில் மாறிப்போக, வேறு விதமாகவும் வழங்கப்படுகின்றன. ஆம்! கால வெள்ளத்தில் மிதந்து கலித்துச் செல்லும் உயிருள்ள மொழியின் போக்கை முற்றிலும் யாரே தடுக்க முடியும்?

இனி மரபியலின் மாதிரிக்காகச் சில மரபுச் சொற்களைக் காணலாம். பறவை-விலங்குகளின் இளமை நிலையைக் குறிக்கும் பெயர்கள் முதல் நூற்பாவில் கூறப்பட்டுள்ளன. அப் பா வருமாறு:

"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்

பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்

கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று

ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே"

இவற்றுள்ளும், பார்ப்பு, பிள்ளை என்னும் இரு பெயர்களும் பறவை, ஊர்வன என்னும் இரண்டு இனங்களின் இளமை நிலையைக் குறிக்கும் பெயர்களாம்:

"அவற்றுள்,

பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை."

"தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன."

என்பன நூற்பாக்கள், மூங்கா (கீரி), வெருகு (பூனை), எலி, அணில் இந்நான்கிற்கும் குட்டி, பறழ் என்னும் இளமைப் பெயர்கள் உரியனவாம்.

"மூங்கா வெருகுஎலி மூவரி அணிலொடு

ஆங்கவை நான்கும் குட்டிக்கு உரிய."

"பறழ் எனப்படினும் உறழாண் டில்லை."

என்பன நூற்பாக்கள். நாய், பன்றி, புலி,முயல்,நரி ஆகியவற்றுக்குக் குருளை, குட்டி, பறழ் என்னும் இளமைப் பெயர்கள் உரியனவாம். இவற்றுள் நாய் தவிர மற்றவற்றிற்குப் பிள்ளை என்னும் இளமைப் பெயரும் உரியதாம்:

"நாயே பன்றி புலி முயல் நான்கும்

ஆயுங் காலைக் குருளை என்ப"

"நரியும் அற்றே நாடினர் கொளினே."

"குட்டியும் பறழும் கூற்றவண் வரையார்."

"பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை

கொள்ளுங் காலை நாயலங் கடையே."

என்பன நூற்பாக்கள். இப்படியே மற்ற மற்ற விலங்குகட்குரிய மற்ற மற்ற இளமைநிலைப் பெயர்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பின்வரும் நூற்பாவில் பறவை-விலங்குகளின் ஆண்பாற் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன:

"எருதும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும் சேவும் சேவலும் இரலையும் கலையும் மோத்தையும் தகரும் உதளும் அப்பரும் போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும் யாத்த ஆண்பாற் பெயரென மொழிப."

பின்வரும் நூற்பாவில் பறவை விலங்குகளின் பெண்பாற பெயர்கள் பேசப்பட்டுள்ளன:

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்

மூடும் நாகும் கடமையும் அளகும்

மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்

அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே."

இவற்றுள் இந்த இந்தப் பெயர்கள் இந்த இந்த ஆண் பறவைக்கும், ஆண் விலங்கிற்கும் உரியன என்றும், இன்னின்ன பெயர்கள் இன்னின்ன பெண் பறவைக்கும். பெண் விலங்கிற்கும் உரியன என்றும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்னின்ன பறவை விலங்குகளோடு இன்னின்ன மரபுப் பெயர்களைச் சேர்த்துச் சொல்ல தொல்காப்பியரால் கூறப்பட்டிருப்பவற்றுள் வேண்டும் எனத் பல வழக்காறுகள் இக்காலத்தில் இல்லை எனவே, மேலுள்ள தொல்காப்பிய நூற்பாக்களைப் படிக்கும்போது நமக்கு வியப்பும் வேடிக்கையும் தோன்றுகின்றன.

மற்றும், மரபியலில் மரம் புல்வகைகளைப்பற்றியும் சில செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வெளி வயிரம் உடையது 'புல்' எனப்படுமாம். உள் வயிரம் உடையது மரம் எனப்படுமாம். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியன புல்லின் உறுப்புக்களாம். இலை, முறி, தளிர்,தோடு, சினை, குழை, பூ அரும்பு, நனை முதலியன மரத்தின் உறுப்புக்களாம்:

"புறக் காழனவே புல்லெனப் படுமே."

"அகக் காழனவே மரமெனப் படுமே."

"தோடே மடலே ஓலை என்றா ஏடே இதழே பாளை என்றா ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும் புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்."

"இலையே முறியே தளிரே தோடே சினையே குழையே பூவே அரும்பே நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம் மரனொடு வருஉங் கிளவி யென்ப"

என்பன நூற்பாக்கள். இச்சொல் வளங்களை அறியும்போது உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கின்றதன்றோ? தோடு, மடல், ஓலை, ஏடு, இலை, முறி முதலிய சொற்களைக் குறிக்க ஆங்கில மொழியில் Leaf என்னும் ஒரே சொல்தான் உள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று.

மற்றும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் எண்களால் சுட்டப்படும் ஒரு சார் தொகைப்பெயர்கள் மரபியலில் விளக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

ஓர் அறிவு என்பது உற்றறியும் (தொட்டுணரும்) தோல் அறிவு: ஈரறிவு என்பன அதனோடு (தோல் அறிவோடு) நாக்கறிவு; மூவறிவு என்பன அவற்றோடு மூக்கறிவு; நாலறிவு என்பன அவற்றோடு கண்ணறிவு; ஐயறிவு என்பன அவற்றோடு செவியறிவு; ஆறறிவு என்பன அவற்றோடு மன அறிவு:

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."

என்பது நூற்பா. ஓரறிவுடைய உயிர்கள் புல், மரம் முதலியன. ஈரறிவுடையவை நந்து (நத்தை), முரள் (இப்பி) முதலியன. மூவறிவின சிதல் (கறையான்),எறும்பு முதலியன. நாலறிவின நண்டு, தும்பி முதலியன. ஐயறிவின மா (விலங்கு). புள் (பறவை) முதலியன. ஆறறிவின மக்கள், ஒரு சில உயர் அறிவுடைய விலங்குகள் முதலிய உயிர்கள்:

"புல்லும் மானும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

"ஒருசார் விலங்கும் உளவென மொழிப."

என்பன நூற்பாக்கள். இப்படி இன்னும் பல பெயர் விளக்கங்கள் மரபியலில் தரப்பட்டுள்ளன.

**முப்பெரும் பிரிவுகள்**

தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த நிகண்டு நூல்கள் மூன்று பெரும் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றியனவாம். அம் முப்பெரும் பிரிவுகள் தொல்காப்பியத்திலிருந்தே எடுக்கப்பட்டன.

தொல்காப்பிய இடையியல், உரியியல், மரபியல் ஆகியவற்றிலிருந்து சில சொல்-பெயர்-பொருள் விளக்கங்களைக் கண்டோம், கூர்ந்து நோக்குவோர்க்கு, அச்சொல்-பெயர்-பொருள் விளக்கங்களில் மூன்று கூறுகள் இலைமறை காய்களாக மறைந்து கிடப்பது புலனாகும். அவையாவன:

(1) சில விடங்களில் ஒரே பொருளைக் குறிக்கும் பல பெயர்கள் (சொற்கள்) கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, மிகுதி என்னும் ஒரு பொருளைக் குறிக்க, உறு, தவ, நனி என மூன்று சொற்கள் காட்டப்பட்டுள்ளன; பெருமை என்னும் ஒரு பொருளைக் குறிக்க, தட, கய, நளி என்னும் மூன்று சொற்களும், அச்சம் என்னும் ஒரு பொருளைச் சுட்ட, பே, நாம்,உரும் என்னும் மூன்று சொற்களும், கூறப்பட்டுள்ளன. இவை ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயர்கள் (சொற்கள்) ஆகையால் இவற்றிற்கு ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' எனப் பெயர் கொடுக்கலாம்.

(2) சில இடங்களில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,-ஏற்றம் என்னும் ஒரு சொல்லுக்கு நினைவு, துணிவு என்னும் இருபொருள் களும், விழுமம் என்னும் ஒரு சொல்லுக்குச் சீர்மை, சிறப்பு, இடும்பை என்னும் மூன்று பொருள்களும் சொல்லப்பட்டுள்ளன. கடி என்னும் ஒரே சொல்லுக்கு வரைவு, கூர்மை முதலிய பன்னிரண்டு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் இன்னவற்றிற்கு 'ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதி' எனப் பெயர் தரலாம்.

(3)சில இடங்களில் பல பொருள்களின் கூட்டமாகிய தொகைப்பெயர்கள் - அஃதாவது எண்ணிக்கையால் குறிக்கப் படும் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக - மூன்று என்னும் எண்ணால் சுட்டப்படும் 'மூவறிவு' என்னும் தொகைப் பெயர். தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. அதேபோல், தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு, கண்ணறிவு, செவியறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தை 'ஐயறிவு' என்னும் தொகைப் பெயர் குறிக்கிறது. பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கும் ஒரு தொகைப் பெயராக இருத்தலின் இன்னவற்றிற்குப் 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' எனப் பெயர் அளிக்கலாம்.

**நிகண்டுகளுக்கு முந்தைய குறிப்புகள்**

இக்காலத்தில் அரிய சொற்களின் பொருளை அறிய அகராதிகளைப் பயன்படுத்துகிறோம். இவை சொல்லிலுள்ள முதலெழுத்து நெடுங்கணக்கு வரிசையைப் பின்பற்றி, வரிசைப்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளன. தற்கால

அகராதிகளுக்கு முன்னரே சொற்களுக்கு பொருள் எடுத்துக்கூறும் மரபும் நூற்களும் தமிழில் நெடுங்காலம் உண்டு. இவ்வாறு சொற்களுக்குப் பொருள் கூறும் நூலே நிகண்டு எனப்படுகிறது.

நிகண்டு என்னும் நூல்வகைக்கு முன்னோடி போல் அமைந்தது தொல்காப்பியம். தொல்காப்பியர் அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள்கூறிச் செல்கிறார். ஒரு சில எடுத்துக்காட்டுகள்:

- உரியியலில் அருஞ்சொற்களாகத் தோன்றியவற்றுக்குப் பொருள் தருகிறார். "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன" ("பொருள் வெளிப்படையாகத் தெரிகின்ற சொற்களை விட்டுவிட்டு, பொருள் தெளிவற்ற அரிய சொற்களுக்கு மட்டும் பொருள் கூறுவோம்") என்று குறிப்பிடுகிறார்.
- மரபியலில் இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற்பெயர் முதலியவற்றை நிகண்டுகள் போல் தொகுத்துக் கூறி, அவை தமிழ் மரபுப்படி வழங்கும் வழக்கையும் குறிப்பிடுகிறார்.

நிகண்டுகள் செய்யுள் வடிவில் அமைந்தவை. அவற்றில் ஒருபொருட் பல்பெயர், ஒருசொற் பல்பொருள், தொகைப்பெயர் என்னும் மூன்று பெரும் பிரிவுகள் உண்டு. அவை பெரும்பாலும் நூற்பாவினால் அமைந்தவை. வெண்பா, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற பிற பாவகைகளினால் அமைந்த நிகண்டுகளும் உள்ளன.

பண்டைய காலத்தில் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அரிய தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய நிகண்டு நூல்கள் தோன்றின. இவை பாடல்களாக உள்ளன. பாடல்களில் சொற்கள் பொருள் பொருள்நோக்கில் பாகுபடுத்தப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எ.கா: தேவர்-பெயர், மக்கள்-பெயர், இயற்கைப் பொருட்பெயர், செயற்கைப்பொருட்பெயர், செயல் பற்றிய பெயர்கள், பண்பு பற்றிய பெயர்கள் என அவை சொற்களைப் பாகுபடுத்திக் கொண்டுள்ளன. பாடல்களின் அடிகள் பொதுவாக எதுகைத்தொடையாக அமைவது வழக்கம். எனவே சொற்களின் வரிசையும் இரண்டாம் எழுத்து அடுக்கு எதுகை முறையைப் பின்பற்றி அமைந்துள்ளன.

நிகண்டுகளின் வளர்ச்சிப் பாதையில் பிற்கால நிகண்டுகள் ஒரு பொருளைத் தரும் பலசொற்களைத் திரட்டித் தரும் பாங்கினையும் இணைத்துக்கொண்டுள்ளன.

## அலகு 3

## தமிழ் நிகண்டுகள்

### நிகண்டு

நிகண்டு என்பது தமிழ் அகராதிகளின் முன்னோடி, சொற்களின் பொருள்களை விளக்கும் நூல்கள். நிகண்டு என்ற சொல் தொகை, தொகுப்பு, கூட்டம் என பொருள்படும். சொற்களை பொருள் அடிப்படையில் பிரித்து தொகுத்து தருவதால், நிகண்டுகள் அகர முதலிகளாக கருதப்படுகின்றன.

விரிவான விளக்கம்:

- **பொருள்:**

நிகண்டு, சொற்களை வகைப்படுத்தி, அவற்றின் பொருள்களை விளக்கும் நூல்கள். இது அகராதிக்கு முந்தைய கருவி, தமிழ் சொற்களின் பொருளை அறிவதற்கு பயன்படுத்தப்பட்டது.

- **வடிவம்:**

நிகண்டுகள் பெரும்பாலும் செய்யுள் வடிவில் அமைந்தவை. சொற்கள் பொருள் அடிப்படையில் (தெய்வப் பெயர்கள், மக்கட் பெயர்கள்) தொகுக்கப்பட்டு இருக்கும்.

- **நோக்கம்:**

நிகண்டுகள் சொற்களின் பொருள், வழக்கு, மரபு ஆகியவற்றை விளக்குவதே முக்கிய நோக்கம். உதாரணமாக, இளமைப் பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் போன்றவற்றை நிகண்டுகள் தொகுத்து வழங்கும்.

- **நிகண்டுகளின் வகைகள்:**
    - திவாகர நிகண்டு (திவாகர முனிவரால் இயற்றப்பட்டது).
    - பிங்கல நிகண்டு (பிங்கல முனிவரால் இயற்றப்பட்டது).
    - அகராதி நிகண்டு (இரேவண சித்தரால் இயற்றப்பட்டது).
    - உரிச்சொல் நிகண்டு (காங்கேயரால் இயற்றப்பட்டது).

- **பயன்பாடு:**

நிகண்டுகள் கல்வி பயிலவும், மொழி கற்பிக்கும் முறையிலும் பெரிதும் பயன்பட்டன.

- **சமணர்களின் பங்களிப்பு:**

நிகண்டுகளை இயற்றுவதில் சமணர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர், அவர்கள் கல்வி பரப்பவும், மொழியை கற்பிக்கும் நோக்கிலும் நிகண்டுகளை பயன்படுத்தினர்.

நிகண்டு என்னும் சொல் தொகை, தொகுப்பு, கூட்டம் என்னும் பொருள் தரும். நிகண்டு என்பது தமிழ்ச்சொல்.

நிகர் + அண்டு = நிகரண்டு > நிகண்டு. நிகரான சொற்கள் அண்டிக் கிடப்பவை. நிகர் என்னும் சொல்லைத் தொல்காப்பியம் பெயர்ச் சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்துகிறது. சங்கப்பாடல்களில் வரும் 'நிகர்மலர்' என்பது வினைத்தொகை. நிகர் + அண்டவாதி = நிகண்டவாதி

**நிகண்டு**

இலக்கணத்தின், இலக்கணக் கல்வியின் ஒரு பகுதியாக இருந்த சொற்பொருள் கூறும் மரபு தனியொரு பிரிவாக வளர்ந்தது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல், நிகண்டுகள் படைக்கப்பட்டன. இம்மரபும் சங்ககாலம் தொட்டே இருந்து வந்துள்ளது என்கின்றனர் ஆய்வாளர். நற்றிணையின் 382ஆம் பாடலின் ஆசிரியரான நிகண்டன்கலைக்கோட்டுத் 36 தண்டனார் எனும் பெயரே இச்சிந்தனைக்குக் காரணமானது. கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் பெயருக்கு முன்னுள்ள 'நிகண்டன்' என்னும் அடைமொழியைக் கொண்டு அவர் ஒரு திகண்டு நூல் இயற்றியுள்ளார் என்பது வரை உறுதி' என்கிறார் சுந்தரசண்முகனார் (1965:74) 'நிகண்டன்' என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது. அதுவே கலைக்கோட்டுத் தண்டெனப்படுவது அதனை இடுகுறிப்பெயரென்று கொண்டார் களவியலுரைகாரரும் நன்னூல் விருத்தியுரை காரரும் (சூத். 49), அஃது இதுகாறும் வெளிவந்திலது' (1976:51) என்கிறார் நற்றிணை உரைகாரர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

நிகண்டன் நிகண்டு நூல் செய்தமையால் வந்த பெயர் அன்று. நிர்க்கந்தன் என்ற வடசொல் வடிவம் நிகண்டன் என்று வரும். நிர்க்கந்தன் கந்தமில்லாதவன், அருகக்கடவுள். கந்தம் ஐந்து, உருவம், வேதனை, குறிப்பு. பாவனை. விஞ்ஞானம்; இவை ஒவ்வொன்றும் பல பிரிவுகள். 'கந்தமைந்தும் அறு முத்தி' என்பது சிவப்பிரகாசம் (50). இது நிகண்டவாதமெனப்படும் ஆகவே இங்கு நிகண்டன் என்பது நிகண்டவாதப் பிரிவைச் சேர்ந்த சைனன் என்று பொருள்படுமேயன்றி, நிகண்டு நூல் செய்தவன் என்று பொருள்படாது' என முற்கருத்தை மறுக்கிறார் மு.அருணாசலம் (1975:109). முற்கூறப்பட்ட கருத்துகள் நிகண்டு எனும் சொல்லைத் தமிழ்ச் சொல்லாய்க் காட்ட முனைந்த முயற்சியின் விளைவும், நிகண்டு மரபின் தமிழ்ப் பழமை காட்ட விரும்பிய ஆர்வ வெளிப்பாடுமே ஆகும். சங்கத் தொகை நூல்களில் சமண பௌத்தச் செல்வாக்கு ஓரளவு இருந்ததையும் சமணமதக் கருத்துக்கள் தாங்கிய பாடல்கள் சங்கத் தொகுப்பில் இருப்பதையும் காணுகின்ற பொழுது மு. அருணாசலத்தின் கருத்து ஏற்கத்தக்கதாகவே அமைகின்றது.

ஒன்பதாம் நூற்றாண்டில் திவாகரம் தோன்றுவதற்கு முன்னர் நிகண்டுகள் இருந்தன என்கின்றனர் ஆய்வாளர். களவியல் உரை குறிப்பிடுகின்ற நிகண்டு ஒன்று உண்மையாகவே இருந்தது என்று கொள்ள வேண்டியிருக்கிறது (1975 120) எனும் மு. அருணாகலம் யாப்பருங்கள் விருத்திக் குறிப்புகள், யா 37 யாப்பருங்கல விருத்தி உரைகாரர் திரிசொல்லிற்குக் காட்டும் மேற்கோள் நூற்பா. இவ்வாறே கலிப்பாவிற்குக் காட்டும் மேற்கோள் நூற்பா, பாரதவெண் பாலில் பெருந்தேவனார் அக்குரோணிக்குக் காட்டும் நூற்பா என்பனவற்றுடன் இளம்பூரணர் உரையில் காட்டப்படும் நூற்பாக்கள் (1975 118,119) என்பனவற்றையும் காட்டி இவையெல்லாம் முற்பட்ட நிகண்டு நூற்பாக்கள் என்கிறார். திவாகரத்தில் இடம்பெற்றுள்ள 'வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தை' எனத் தொடங்கும் நூற்பாவை எடுத்துக்காட்டி 'இது' முன்னமே இருந்த ஒரு தனிப்பாடல் அல்லது வேறு ஒரு நிகண்டின் பகுதி என்றே கருதத் தோன்றுகிறது' (1975:118) எனக் கூறுகிறார்.'ஆதி திவாகரமும் சேந்தன் நிவாகரமும் ஒன்றாக இருக்க முடியாது; திவாகரம் என்னும் பெயரில் இரண்டு நிகண்டுகள் இருந்ததனால்தான். இரண்டிற்கும் வேறுபாடு தெரிய, முந்தியதை ஆதிதிவாகரம் என்றும் சேந்தனால் தூண்டி எழுதப்பட்ட பிந்தியதைச் சேந்தன் திவாகரம் என்றும் அழைத்தனர் என்னும் முதல் சாராரின் கருத்தே சரியானது என்பது புலப்படும்' (1965:80) எனச்

சுந்தரசண்முகனார் ஆதிதிவாகரம் எனும் நிகண்டொன்று இருந்தது என்பவருடன் உடன்படுகிறார். இவை எல்லாமே திவாகரத்துக்கு முன்பே நிகண்டு நூல்கள் தமிழில் படைக்கப்பட்டிருந்தன என்பதைக் காட்டும் எண்ண வெளிப்பாடுகளாகவே உள்ளன.

சோழ மன்னர்கள் தங்கள் அரசுரிமையைப் பலவாறாக விருத்திசெய்யத் தலைப்பட்டனர். பல நாடுகளை வென்று அடிப்படுத்தார்கள். தமிழவரசராதிக்கியம் குறைவுற்ற பின்னர், மகமதியர்களும், தெலுங்க வரசர்களும், இவர்கட்குப்பின் மீண்டும் மகமதியர்களும் தமிழ்நாட்டில் வலிமிக்கு விளங்கினார்கள். பிறமொழி பேசுமக்கள் தமிழ் மக்களோடு பெரிதுங் கலந்து உறவாடத் தொடங்கினர். அன்றியும், ஏராளமான வடமொழிச் சொற்களும் இம்மொழியோடு கலந்து புத்துயிர் பெற்று நிலவத் தொடங்கின. இக்காரணங்களாற் சொற் பொருளுணர்த்தும் நூல்கள் அடிக்கடி தோன்ற வேண்டும் ஆவசியகம் ஏற்பட்டது. இவ் வாவசியகத்திற் கேற்பப் பல நிகண்டுகள் பல்வேறு காலத்தில் இயற்றப் பெற்றுப் பிரசாரமெய்தியிருந்தன' (1985:IV,V) எனப் பிற

நாட்டவர் ஆட்சியாலஏற்பட்ட மொழிக்கலபே திகண்டு தோன்றக் காரணம் என்கிறார் வையாபுரிப்பிள்ளை. தொல்காப்பியரது காலத்திற்குப்பின் தமிழ் இலக்கியப் பரபபில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. செய்யுள் நடையிலும் கவிதைப் பண்பிலும் சொற்களின் தன்மையிலும் வடிவங்களிலும் பொருளிலும் நேர்ந்த மாற்றங்கள் நிகண்டு போன்ற சுருவிநூல்களின் தேவைக்கும். இவற்றின் தோற்றத்திற்கும் வழிவகுத்தன எனலாம்' என்கிறார் வ.ஜெயதேவன் (1985:4). ஆட்சியிலும் மொழியிலும் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டுமல்ல வேறுபிற அடிப்படைக் காரணங்களும் இருந்திருத்தல் வேண்டும்.

அரசியல், சமய, சமுதாயக் காரணங்களையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும். களப்பிரர் காலத்திலும் பல்லவர் காலத்திலும் சமண பௌத்த மதச் செல்வாக்கை மிகுதியாய்க் காண்கிறோம். வடமொழிக் கல்வியின் பெருக்கத்தை மிகுந்த அளவில் காணலாம். பல்லவர் காலத்தில் வடமொழி நூல்கள் பலவும் படைக்கப்பட்டுள்ளன. வடமொழி மரபுகள் பலவும் தமிழில் புகுந்தன. 'தமிழ் யாப்பிலக்கண முறையிலேயே வடமொழிக் கலப்பு உண்டான காலம் பல்லவர் காலமே ஆகும் என்பது கி.பி. 11-ஆம்

நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த அமிதசாகரர் செய்த யாப்பருங்கல விருத்தியுரையால் நன்குணரப்படுகிறது' (1944:292) என மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுவதைப் போல் யாப்பிலேயே பெருமாற்றம் ஏற்பட்டுள்ளது. சங்கம் மருவிய காலந்தொட்டு வடமொழிக் கலப்பின் மிகுதியைப் பரவலாய்க் காண்கிறோம். மணிமேகலை போன்றவற்றில் பௌத்த மதம் தொடர்பான பல்வேறு கலைச்சொற்களும் மிகுதியாய் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அரசியல், மதம், இலக்கியப்படைப்பு, சொற்றொகுதி எனும் பல்வேறு நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் சொற்பொருள் கூறும் நிகண்டு நூல் படைப்பிற்குக் காரணங் களாயின.

**நிகண்டு சொல்மூலம்**

'நிகண்டு' எனும் சொல்லை வடசொல் எனவும் தமிழ்ச்சொல் எனவும் நிறுவ முயலும் முயற்சிகள் தமிழ் அகராதியியல் ஆய்வறிஞரிடம் காணப்படுகின்றன. 'நிகண்டு' என்பது முதன்முதலில் வடமொழி வேதத்திற்கு அங்கமாய் அதன்கண்ணே பயின்றுவருஞ் சொற்களின் பொருளுணர்த்துங்கருவி நூலொன்றனுக்கே சிறப்பாசு வழங்கப்பட்டது பின்னர், சொற்பொருளுணர்த்தும் இப்பெயர் ஏற்புடையதாயக கொள்ளப்பட்டது' (1985) எனக் குறிப்பிடும் எஸ். வையாபுரிப்பிள்ளை இச்சொல்பொருள் இன்னும் முடிவுசெய்யப் படாததாகவே உள்ளது என்கிறார். சென்னைப் பல்கலை கழக அகராதியில் நிகண்டு எனும் சொல்லுக்கு nighantu எனும் வடசொல்லே மூலமாய்க் காட்டப் பட்டுள்ளது. வடமொழி நிருக்தத்தின் மூன்று காண்டங்களில் (நைகண்டுகம், நைகமம், தைவதம் என்பன) நைகண்டுகம் என்பதே நிகண்டாகும்' என்கிறார் மு அருணாசலம் (1975-92). 'புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப் போல 'நிகண்டு! என்னும் வடமொழிப் பெயர் தமிழ் உலகில் பெருக. வழங்கி நிலைபெற்று விட்டது. யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் 'நிகண்டு' என்னும் பொதுப் பெயரால் வழங்கப்படுகின்றன' (1985-61) என்கிறார் வ.ஜெயதேவன்.

ஆறங்கம் மந்திரம் வியாகரணம் நிகண்டு

சந்தோ பிசிதி நிருத்தம் சோதிடம(ப. 292)

எனத் திவாகரம் ஆறங்கப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. இது இச்சொற்களின் அக்காலப் பயிற்சி மிகுதியைக் காட்டுவதாய் உள்ளது.

வடமொழிச் செல்வாக்கு மிகுந்த சோழர் காலகட்டத்தில் தமிழுலகில் புகுந்த இச்சொல் வடசொல் எனும் மேற்கருத்துகள் பொருத்தமானவையே ஆகும்.

சொற்கள் நீளத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் 'நிகண்டு' எனப்பட்டது. இப்படிப் பொருள்கொள்ளின்., நிகண்டு என்னும் சொல் தமிழ்ச் சொல்லே என்பது பெறப்படும். நிகண்டு என்பதை வடசொல்லெனக் கொண்டு பார்த்தால், தொகுதி, கூட்டம் என்பது அதன் பொருளாகும். எனவே, சொற்கள் தொகுதியாக-கூட்டமாகக் கொடுக்கப் பட்டிருக்கும் நூல் நிகண்டு என்பது பெறப்படும்; இந்தப் பெயர்க்காரணம் பொருந்துமென்றால், நிகண்டு என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு, சொற்கள் ஒரு பட்டியல் போல நீளத்தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் நிகண்டு எனக் கூறும் பெயர்க்காரணம் மட்டும் ஏன் பொருந்தமுடியாது. எனவே நிகளுவது நிகண்டு எனும் முடிவுக்கு வரலாம் என, சுந்தரசண்முகனார் (1965.28) இதைத் தமிழ்ச்சொல் எனவே வாதிடுகின்றார். நிகண்டு மரபைத் தமிழ்மரபு எனக்காட்ட முயன்றதன் நோக்கமாகவே இது தோன்றுகின்றது. பட்டியல் நிகண்டு (நீண்டு) கொண்டு போதலின் நிகண்டு என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை வினையெச்சம் பெயரலித்தொழில் ஆகுபெயராகப் பயன்படுத்தப்பட்டது. என்று விளக்க வேண்டும். இங்கு இரண்டு கேளவிகள் எழுகின்றன. பெயரை மூலமாகக் கொண்டாலும் மூலவடிவமே வினையெச்சம் என்று கொள்ள வேண்டும். வினையெச்சம் தொழிற்பெயராகி ஆகுபெயராய் நூலை உணர்த்த வேண்டும். இதற்கு வேறு ஆதாரம் உண்டா? உண்டா?' எனச் சொல்லமைப்பு பற்றிய கேள்வியை எழுப்புகிறார் செ.வை. சண்முகம். (1994-102) 'தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கு என்பதோடு எல்லாவற்றுக்கும் தமிழ் இனமே முதன்மை உடையது என்ற இனமுதன்மை (Ethnocentrism) என்னும் வரலாற்றுத் திரிபுணர்ச்சியால் ஏற்பட்டதாகும் (1994:102) என அவர் இதற்கான காரணத்தைச் சுட்டுகிறார். மேற்குறிப்பிட்ட படி நம் எண்ணங்களுக்கு ஏற்பச் சொற்பிறப்பைக் காட்ட முனைந்ததன் விளைவே நிகண்டு என்பதைத் தமிழ்ச் சொல்லாய்க் காட்ட முயன்ற முயற்சிகள் ஆகும்.

நாம் எவ்வளவு முயன்று இதைத் தமிழ்ச் சொல்லாய்க் காட்ட முயன்றாலும் மொழி வரலாறு நமக்குக் கைகொடுக்க வில்லை. வடமொழியில் இதற்கான மூல வரலாறு காணப் படுகிறது. வேதநூல்களை

அறிந்துகொள்ள அவற்றை முறையாக உச்சரித்து இறைவழிபாட்டுச் சூழல்களில் பின்பற்றத் தேவையான வேதாங்கம் எனப்படும் ஆறுவகைக் கருவிநூல்கள் படைக்கப்பட்டன. 1. ஒலிப்புமுறை பற்றிய தான சிட்சை (Siksa), 2. யாப்பு பற்றியதான சந்தசு (Chandas), 3. சொற்பிறப்பு, சொல்மூலம் பற்றியதான நிருத்தம் (Nirukta), 4. இலக்கணம் பற்றியதான வியாகரணம் (Vyakarana), 5.சுருதி ஸ்மிருதிகள் கூறும் கருமம் பற்றிய செயல் விளக்கமுறைகூறும் கற்பம் (Kalpa), 6.சோதிடம் (Jyotisa) என்பன அந்த ஆறு அங்கங்கள். இவை ஒவ்வொன்றும் தனித்தனி நோக்கங் களுடன் படைக்கப்பட்டவை. இவ்வாறனுள் நிருத்தம் என்பதே நிகண்டோடு தொடர்புடையது. நிருத்தம் என்றால் வழக்கில் இல்லாதது என்பது பொருள். வேதமொழி மிக முற்பட்ட காலத்தது என்பதால் அதன் மொழிப் பொருளை விளங்கி கொள்வது கடினமாய் இருந்தது. ஆதலால் வேதச்சொ களுக்குப் பொருள் கூறும் நூல் நிருத்தம் எனப் பெயர்பெற்றது.

கி.மு.5.ஆம் நூற்றாண்டில் யாஸ்கரால் படைக்கப்பட்ட திருத்தம் 1. நைகண்டுகம், 3. நைகமம், 3. தைவதம் எனும் மூன்று காண்டங்களைக் கொண்டது. இலவற்றுள் முதலாவது காண்டம் ஒருபொருட் பலசொற்களின் தொகுதியாய் உள்ளது. இரண்டாவது வது காண்டத்தில ஒருசொல்லின் பல்வேறு பொருட்களும் திரட்டித் தரப்பட்டுள்ளன. மூன்றாவது காண்டம் வைதிக தேவதை பற்றிய ஆராய்ச்சியாய உள்ளது. இம் மூன்றனுள் நைகண்டுகம் என்பது நிகண்டு எனும் மூலச் சொல்லிலிருந்து பிறந்தது. எனவே இவ்வட சொல்லே தமிழிலும் வழக்குப் பெற்று நிலைத்துவிட்டது எனக் கருதுதல் வேண்டும். தமிழில் இவ்வாறு மூலம் எதையும் மொழி வரலாற்றில் காட்ட இயலாத தன்மையே அது வடசொல் என்பதைக் காட்டுகிறது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஒருபொருட் பலசொற்களையும் பல்பொருட் சொற்களையும் திரட்டித் தந்த இம்முறையே கி.பி.9-ஆம் நூற்றாண்டுத் தமிழ் நிகண்டுகளில் பின்பற்றப் பட்டுள்ளது. இந்நூலமைப்பு முறையும் நிருத்தமே தமிழ் நிகண்டுகளுக்கு முன்னோடி என்பதைக் காட்டுகிறது.

கிரிகரி ஜேம்ஸ் (Gregory James) தமிழ் மற்றும் வடமொழி நிகண்டுகள் ஒரு பொதுக் கூறிலிருந்து வந்தவை என்கின்றார் (1991:34,35). இவ்வாறு ஒரு பொது மூலத்திலிருந்து கொண்டுவர வேண்டியதில்லை. இதற்கு அடிப்படை ஆதாரம் ஏதும் இல்லை. வடமொழியின் நிருத்தம், அமரகோசம் எனும் இரண்டின் பொருட்புலப் பாகுபாடு தமிழ் நிகண்டுகளின் பொருட்புலப் பாகுபாட்டிற்கு

அடிப்படையாய் அமைந்திருக்கின்ற நிலையில் இவற்றிற்குப் பொதுமூலம் காட்டுவது பொருத்தமாய்ப் படவில்லை எனலாம்.

**நிகண்டு (கலைக்கோட்டுத் தண்டு)**

நன்னூல் என்னும் இலக்கண நூலின் பாயிரப் பகுதியில் நூல்கட்குப் பெயர் வைப்பதற்குரிய பல பொருட்டுக்கள் (காரணங்கள்) சொல்லப்பட்டுள்ளன; இறுதியில், இடுகுறியாகப் பெயர் வைப்பதும் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. இடுகுறி என்றால், ஒரு பொருட்டும் (காரணமும்) இன்றி, ஏதாவது ஒரு பெயர் வைத்துத் தீரவேண்டுமே என்பதற்காக இடப்பட்ட பெயர் ஆகும். நமக்கு ஒரு பொருளினது பெயரின் பொருட்டுத் தெரிய வில்லையென்றால், அதை இடுகுறிப் பெயர் என்று சொல்ல வேண்டியதுதான் போலும்! இது பற்றிய நன்னூல் நூற்பா வருமாறு

"முதனூல் கருத்தன் அளவு மிகுதி

பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்

இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே"

இந்நூற்பாவிற்கு உரை யெழுதிய மயிலைநாதர் என்னும் உரையாசிரியர், முதனூல், கருத்தன், அளவு, மிகுதி,பொருள், செய்வித்தோன், தன்மை ஆகிய நிமித்தங்களால் (காரணங்களால்) பெயர் பெற்றமைக்கு எடுத்துக்காட்டாகச் சிற்சில நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுவிட்டு, இடுகுறியால் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு நூல், கலைக் கோட்டுத் தண்டு முதலாயின"

இதே நூற்பாவின் உரையில் சங்கர நமச்சிவாயர் என்னும் உரையாசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார்:-

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு கலைக் கோட்டுத் தண்டு முதலாயின."

நன்னூலின் உரைகளிலேயன்றி, 'இறையனார் அகப்பொருள்' என்னும் களவியல் இலக்கண நூலின் உரையிலும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:-

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு நூல் கலைக் கோட்டுத் தண்டு என இவை."

இவ்வாறு நன்னூல் உரையிலும், இறையனார் அகப்பொருள் என்னும் களவியல் உரையிலும் எழுதப்பட்டிருப்பதற்குத் தக்க சான்று பகர்வதுபோல், 'நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனாரி என்னும் சங்க காலப் புலவர் ஒருவரின் பெயர் அடிபடுகிறது. நற்றிணை என்னும் சங்க இலக்கியத்திலுள்ள "கானல் மாலைக் கழிநீர் மல்க" என்று தொடங்கும் 382 ஆம் பாடல் இவர் பாடியதே இப்பாடல் ஒன்றின் வாயிலாகத்தான் இவர் தமிழ் மக்கட்கு அறிமுகமாகியுள்ளார் நற்றிணைக்குப் பின்னத்தூர் அ. நாராயண சாமி ஐயர் அவர்கள் எழுதிய உரை நூற் பதிப்பின் முற்பகுதியில், பாடினோர் வரலாறு என்னும் தலைப்பில், நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"மான் கொம்பை நிமிர்த்திக் கைக் கோலாகக் கொண்டமையால் இவர் கலைக் கோட்டுத் தண்டன் எனப்பட்டார். இவரது இயற்பெயர் புலப்படவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது; அதுவே கலைக் கோட்டுத் தண்டு எனப்படுவது. இதனை இடுகுறிப் பெயரென்று கொண்டார் களவிய லுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும் (சூத. 49), அஃது இதுகாறும் வெளிவந்திலது. இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற்றிணை 382ஆம் பாட்டு."

இந்தப் பகுதி அப்படியே 'அபிதான சிந்தாமணி' என்னும் நூலிலும் உள்ளது. 'கலைக் களஞ்சியம்' என்னும் நூலிலோ பின்வருமாறுள்ளது:

"நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார்: சங்க காலப் புலவர். நிகண்டு, கலைக் கோட்டுத் தண்டு என்பவை இடு குறியாற் பெயர் பெற்ற நூல்களென நன்னூல் விருத்தியுரை (நன். பாயிரம்: 49) கூறும். இந்த நூல்களுக்கும் இவருக்கும் ஏதாவது தொடர்புண்டோ என்பது ஆராயத்தக்கது. (நற். 382.")

மேலே எடுத்துக் காட்டப்பட்டவற்றுள் நன்னூல் உரையும் களவியல் உரையும், 'நிகண்டு நூல் என்பது ஒரு தனி நூல்; கலைக் கோட்டுத் தண்டு என்பது மற்றொரு தனி நூல்' என்னும் பொருள் பட உள்ளன. அபிதான சிந்தாமணி, நற்றிணை உரையின் முற்பகுதி ஆகியவையோ, நிகண்டு

என்பதும் கலைக்கோட்டுத் தண்டு என்பதும் ஒரே நூல்தான்-அஃதாவது-கலைக்கோட்டுத் தண்டு என்பது ஒரு நிகண்டு நூல்' என்னும் கருத்துப்படக் கூறியுள்ளன. இவ்விரு வேறு கருத்துக்களுள் எது உண்மையானது?

நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்பது ஒரு புலவரைச் சுட்டுவதால், அவர் நிகண்டு நூல் என ஒரு நிகண்டு நூலும், கலைக் கோட்டுத் தண்டு, என ஒரு நிகண்டு நூலுமாக இரண்டு நிகண்டுகள் எழுதியிருக்கமாட்டார்; அல்லது, இரண்டும் ஒரே நிகண்டு நூலாகவும் இருக்க முடியாது. நிகண்டன், கலைக் கோட்டுத் தண்டன் என்னும் இரண்டு ஆண்பாற் பெயர்களின் முடிபைக் கொண்டு, இரண்டும் தனித் தனி நூல்களே என்று துணியலாம். அப்படியிரண்டும் வெவ்வேறு நூல்களின் பெயர்தனே யெனின், நிகண்டு என்பது நிகண்டுத் துறை நூவாகவும், கலைக் கோட்டுத் தண்டு என்பது வேறு துறை நூலாகவுந்தான் இருக்க வேண்டும்; ஒருவரே இரண்டு நிகண்டு நூல்கள் எழுதியிருக்க மாட்டார்.

இதில் இன்னுமொரு சிக்கல் உள்ளது:- கலை என்றால் மான்; கோடு என்றால் கொம்பு; தண்டு என்றால் தடி; எனவே, மான் கொம்பை நிமிர்த்தித் தடியாக ஊன்றிச் சென்றதனால் கலைக் கோட்டுத் தண்டனார் என ஆசிரியர் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் கருத்துப்பட நற்றிணையுரையின் முற்பகுதியும் அபிதான சிந்தாமணியும் கூறுகின்றன. இதன்படி நோக்கின், கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் பெயருடைய ஆசிரியரால் இயற்றப் பட்ட நூல், அவர் பெயராலேயே கலைக் கோட்டுத் தண்டு என அழைக்கப்பட்டது என்னும் கருத்து உறுதிப்படும்; படவே, நன்னூல் உரைகாரரும், களவியல் உரைகாரரும், கருத்தனால் (ஆசிரியனால்) பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாக இந்நூலைக் குறிப்பிடாமல், இடுகுறியால் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாக இந்நூலைக் குறிப்பிட்டிருப்பது பொருத்தமற்ற தாகும். ஆனால், இவ்வுரையாசிரியர்கள், கலைக்கோட்டுத் தண்டு என்னும் நூலை இயற்றியதால் ஆசிரியர் கலைக்கோட்டுத் தண்ட னார் என்னும் பெயர் பெற்றார் என்னும் கருத்துடையவர்களாக இருந்திருக்கலாம். அப்படியெனில், கலைக்கோட்டுத் தண்டை ஊன்றியதனால்தான் ஆசிரியர் கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் பெயர் பெற்றார் என்னும் கருத்து பொருத்தமற்றதாகப் போய்விடும்.

சங்க காலப் புலவர்களுள் 'தொடித்தலை விழுத்தண்டினார்' என்பவர் ஒருவர். இவரது பாடலொன்று புறநானூற்றில் உள்ளது. அஃது, 'இனிநினைந் திரக்கமாகின்று' என்று தொடங்கும் (243ஆம்) பாடலாகும். அப்பாடலில் புலவர், 'ஆழமான மடுவில் குதித்து மணலெடுத்து வந்த இளமை போய்விட்டதே; தண்டு (தடி) ஊன்றி நடுங்கி நடக்கும் முதுமை வந்து விட்டதே' என்று இரங்குகிறார். அப்பாடற் பகுதியாவது:

"இனிநினைந்து இரக்க மாகின்று-...

நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து

குளித்து மணற்கொண்ட கல்லா இளமை

அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ

தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று

இருவிடை மிடைந்த சிவசொற்

பெருறு தாளரேம் ஆகிய எமக்கே"

இப்பாடலிலுள்ள தொடித்தலை விழுத்தண்டு' என்னும் தொடர் கவனிக்கற்பாற்று புலவர் ஊன்றிய தண்டு (தடி) விழுத் (தண்டாம்; அதன் தலையில் (உச்சியில்) தொடி (பூண் போடப்பட்டுள்ளதாம்; அதனால் புலவர் தமது தடியைத் 'தொடித்தலை விழுத்தண்டு' என்று விதந்து கூறியுள்ளார்; இப்பாடலில் 'தொடித் தலை விழுத் தண்டு' என்னும் தொடர் கவர்ச்சியுடையதாகக் காணப்படுவதால் இத்தொடராலேயே தொடித்தலை விழுத்தண்டினார் எனப் புலவர் அழைக்கப்பட்டார். இது போலவே, குறுந்தொகை என்னும் சங்க நூலில் ஒரு பாடலில் அணிலாடு முன்றில்' என்னும் தொடர் சிறந்து காணப்பட்டதால் அப்பாடலைப் பாடிய புலவர் 'அணிலாடு முன்றிலார்' என அழைக்கப்பட்டார்; இன்னொரு பாடலில் 'ஓர் இல் பிச்சை என்னும் தொடர் சிறந்து காணப்பட்டதால் அப்பாடலைப் பாடியவர் 'ஓரில் பிச்சையார்' என அழைக்கப்பட்டார்; மற்றொரு பாடலில் 'ஓர் ஏர் உழவன்' என்னும் தொடர் சிறந்து தோன்றியதால் அதன் ஆசிரியர் 'ஓர் ஏர் உழவனார்' என அழைக்கப்பட்டார். இவ்வாறே தாம் பாடிய பாடலிலுள்ள தொடரால் பெயர் பெற்ற சங்கப் புலவர்கள் இன்னும் பலருளர். இஃது

அக்காலத்து மரபு; அஃதாவது, ஒரு பாடலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை யென்றால், அப்பாடலிலுள்ள சிறந்த தொடரால் ஆசிரியரை அழைப்பது அக்கால வழக்கம். இம் மரபையொட்டிக் கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் பெயரையும் ஏன் ஆராயக்கூடாது?

மான் கொம்பை நிமிர்த்தி எவரும் தடியாகக் கொள்ளார்; எனவே, தாம் பாடிய பாடலிலுள்ள தொடரால் பெயர்பெற்ற தொடித்தலை விழுத்தண்டினார் போலவே, கலைக்கோட்டுத் தண்டனாரும் தொடரால் பெயர் பெற்றிருக்கலாம். தனித்தனி நூலாக மதிக்கப்படுகின்ற திருமுருகாற்றுப்படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு முதலிய நீளமான பத்துப்பாட்டுக்களைப் போல ஒரு நீளமான பாடல் இருந்திருக்கலாம்; அதற்கு நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் கிடைக்காமல் விடுபட்டுப் போயிருக்காலாம். இந்நிலை பழங்கால நூல்கள் சிலவற்றிற்கு உள்ளதுதானே! எனவே நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் தெரியாத அந்நெடும்பாட்டு நூலில் 'கலைக் கோட்டுத் தண்டு, என்னும் தொடர் சிறப்பிடம் பெற்றிருக்கலாம் அதனால், அத்தொடராலேயே நூலையும் ஆசிரியரையும் பெயர் சுட்டி அழைத்திருக்கலாம். ஆகவே, அந்நூலுக்குக் கலைக்கோட்டுத் தண்டு என்னும் பெயர் எந்த நிமித்தம் (காரணம்) கருதியும் வைக்கப்பட்டதன்று; ஏதேனும் ஒரு பெயர் வேண்டுமே என்பதற்காக இடுகுறியாக இடப்பட்ட பெயரே யென்பது புலனாகலாம். இதனால்தான் நன்னூல் உரைகாரரும் களவியல் உரைகாரரும் இடுகுறியாற் பெயர்பெற்ற நூலுக்கு எடுத்துக் காட்டாகக் கலைக்கோட்டுத் தண்டைக் காட்டியுள்ளனர். எனவே, கலைக்கோட்டுத் தண்டு என்பது நிகண்டு நூலன்று; வேறு துறையைச் சேர்ந்த நூலேயாகும். இதனை ஒரு நிகண்டு நூலின் பெயரென அபிதான சிந்தாமணியாரும் நற்றிணை உரையாளரும் கூறியிருப்பது பொருத்தமுடைத்தன்று. புலவரது நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் பெயரைக் கொண்டு, அவர் ஒரு நிகண்டுநூல் இயற்றியுள்ளார் என்பது புலப்படினும், அந்நிகண்டின் பெயர் தெளிவாகத் தெரியாததால் அது கலைக்கோட்டுத் தண்டாகத்தான் இருக்கவேண்டும் என்று கற்பனை செய்துவிடக் கூடாது.

கலைக்கோட்டுத் தண்டைப்பற்றிய செய்தி எப்படியிருந்த போதிலும், கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் பெயருக்கு முன்னாலுள்ள 'நிகண்டன்'

என்னும் அடைமொழியைக் கொண்டு அவர் ஒரு நிகண்டுநூல் இயற்றியுள்ளார் என்பது வரை உறுதி.

இந்நிகண்டு, ஏனைய நிகண்டுகட்கெல்லாம் முற்பட்ட முதல் நிகண்டாகவும் இருக்கலாம்; அதனால், அந்த நிகண்டு-இந்த நிகண்டு என ஆசிரியர் எந்தப் பெயரும் வைக்காமல், வெறும் 'நிகண்டு' எனவே தம் நூலை அழைத்திருக்கலாம். திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியனபோலன்றி, வெற்றுப்படியாக நிகண்டு என்னும் பெயர்மட்டும் உள்ளதால், ஆசிரியர் ஒரு நிமித்தமும் கருதி ஒரு பெயரும் வைக்கவில்லை; ஏதேனும் ஒரு பெயர் இருக்க வேண்டுமே என்பதற்காக நிகண்டு என இடுகுறியாக வாளா அழைத்துக்கொண்டார்' என்று நன்னூல் உரைகாரரும் களவியல் உரைகாரரும் எண்ணி, இடு குறியாற் பெயர்பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாக இந்நிகண்டு நூலைக் காட்டியிருக்கவேண்டும்.

நன்னூல்-களவியல் உரைகாரர்கள் காட்டியுள்ள நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு என்னும் இரு நூல் கட்கும். நற்றிணையின் 382ஆம் பாடலைப் பாடிய நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் புலவர்க்கும் தொடர்பில்லை யென்று எவரேனும் கட்டவிழ்த்து விடுவார்களோ என்னவோ? நன்னூல்-களவியல் உரைகளில் நிகண்டு-கலைக்கோட்டுத்தண்டு என்னும் பெயர்கள் பக்கத்தில் பக்கத்தில் இணைந்திருப்பதாலும், நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் பெயரிலும்

அவ்வாறே இணைப்புக் காணப்படுவதாலும் அவ்விரு நூல்களையும் இயற்றியவர் அவரேயெனப் புனைந்துரைக்கப் பட்டுள்ளது.

**நிகண்டு நூலமைப்பு**

நிகண்டுகள் அகராதி அமைப்புடையன அல்ல. இவை பலவகைப் பொருட்புல வகைப்பாடு (Semantic Field) உடையன வாய் உள்ளன. ஒருபொருட் பலசொற்கள் அனைத் தும் பொருட்புல அடிப்படையில் திரட்டித் தரப்பட்டுள்ளன. யாஸ்கர் நிருத்தத்தின் முதலாவது காண்டத்தில் மூன்று பகுதிகள் உண்டு. முதலாவது பகுதியில் பூமி, காற்று, நீர்,மேகம், விடியல், பகல், இரவு போன்றவைகுறித்த ஒருபொருட பல சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**தமிழ் நிகண்டுகளின் வளர்ச்சி வரலாறு**

தமிழ் நிகண்டு என்ற சொல்லாட்சி இறையனாரகப் பொருள் உரையில் தான் முதலில் கையாளப்பெற்றுள்ளது. நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சிவஞான முனிவரும் இடுகுறியால் பெயர் பெற்ற நூல்களுக்கு எடுத்துக்காட்டு கூறும் இடத்தில் இடுகுறியால் பெயர் பெற்ற நிகண்டு கலைக்கோட்டுத்தண்டு முதலாயின் என்று கூறுவார்.

முதனூல் கருத்தன் அளவு மிகுதி

பொருள் செய் வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்

இடுகுறி வானுநூற் கெய்தும் பெய்ர்ரே

நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருள் "சொற்கள் தொகுதியாக கூட்டமாக-அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டிருத்தலால் நிகண்டு என்று பெயர் பெற்றது." நிகண்டு என்பதனைத் தமிழ்ச் சொல் எனக் கொள்வோரும் உள்ளனர். நிகண்டு என்னும் சொல்லின் பொருள் உண்மை இன்ன சொல்லுக்கு இன்ன பொருள் இன்ன பொருளுக்கு இன்ன பெயர் எனக் கண்டு அவ்வுண்மையை வரைந்த நூல்தான் நிகண்டு எனப் பெயர் பெற்றது.

**பெயர்க்காரணம்**

தமிழ் நிகண்டு என்னும் சொல்லிற்கு இணையாக உரிச்சொல் உரிச்சொற்பனுவல் எனும் சொற்களும் வழக்கிலிருந்துள்ளன. பிற்காலத்து எழுந்த சொற்பொருள் விளக்கும் நூல்கள் உரிச்சொற்களுக்கு மட்டுமின்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறியிருப்பினும் அவை உரிச்சொற் பனுவல் என்றே வழங்கப்பட்டன "வைதிகச் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் முதலில் நிகண்டு என வழங்கப்பட்டது. உரிச்சொற்களுக்கு மட்டுமின்றிப் பிற சொற்களுக்கும் பொருள் கூறும் நூலும் உரிச்சொல் அல்லது உரிச்சொற்பனுவல்"" என வழங்கப்பட்டது.

.

**நிகண்டு நூலின் காலம்**

நற்றிணை கடைச்சங்க நூலாகும்; நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனாரும் கடைச்சங்கப் புலவரே; எனவே, அவரியற்றிய நிகண்டு நூலும் கடைச்சங்க காலத்ததாகும். கடைச் சங்க காலம், கி.மு. ஐந்நூற்றிலிருந்து கி.பி. ஐந்நூறுவரை தலைக்குத் தலையொருவிதமாக ஆராய்ச்சியாளரால் பந்தாடப்படுவது தெரிந்த செய்தியே ஆகும்.

நிகண்டு நூல் கற்பது மிகவும் இன்றியமையாததாக அந்நாளில் கருதி வந்தனர் என்பது தெரியவரும். முன்பெல்லாம் தமிழ் பயில் முற்பட்டோர் முதற்கண் சூடாமணி நிகண்டு நூலை மனப்பாடம் செய்ய வேண்டும் என வலியுறுத்திவந்தனர். திவாகரம், பிங்கலம் முதலிய பழைய நிகண்டுகளையும் மனப்பாடம் செய்வது அந்நாளைய சுவ்வி முறையாக அமைந்திருந்தது.

**நிகண்டும், பாவகையும்**

திவாகரமும், பிங்கலமும் தொல்காப்பியரின் பெருநூல் போல நூற்பா அகவல் என்னும் சூத்திரயாப்பினால் அமைந்தவை. இச்சூத்திரங்கள் எதுகை நயம்பற்றிய ஓர் ஒழுங்கால் உள்ளன. என்றாலும் மனப்பாடம் செய்து நினைவில் பதிய வைத்தல் சற்றுக் கடினமாயிருந்தது இக்குறையை நீக்கக்கருதிப்பின் வந்த நிகண்டாசிரியன்மார் வெண்பா. கட்டளைக் கலித்துறை. ஆசிரியவிருத்தம் என்றும் பாவகைகளில் நிகண்டு நூல்களை இயற்றி வரலாயினர்.

**தொல்காப்பியமும், நிகண்டும்**

நிகண்டுகளின் தோற்றத்திற்குத் தொல்காப்பியம் அடிப்படையாக இருந்தது, தமிழ் அகராதியில் வரலாற்றில் சொற்பொருள் கூறும் வகையினைச் சார்ந்த நிகண்டுகளுக்குத் தொல்காப்பியம் மூலநூலாகத் திகழ்ந்தது எனலாம். தொல்காப்பிய நூற்பாக்கள் பலவும் திவாகரத்தில் கருப்பொருள்கள் விளக்கம் கூறும். இடம்பெற்றுள்ளன.

தெய்வம் உணாவே மாமரம் புள்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைத்

அவ்வகை பிறவும் கருவென மொழிய

என்றும் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் திவாகர நிகண்டுத் தொகுதிகள் அமைந்தன என்பர்..!

தொல்காப்பியம் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, யாழ் என ஏழு வகை சுருப்பொருள்களைக் குறிக்கின்றது,இவற்றுள் தெய்வம் திலாசுரம் தெய்வப் பெயர்த் தொகுதியிலும், உணவு

பல்பொருள் பெயர்த் தொகுதியிலும், மாவும் புள்ளும் விலங்கின் பெயர்த் தொகுதியிலும், மரம் மரப்பெயர்த் தொகுதியிலும், பறையும் யாழும் செயற்கை வடிவப் பெயர்த்தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. வினையியல் செயல் பற்றிய பெயர்த் தொகுதிக்கு அடிப்படையாகலாம். உரியியலில் அமைந்துள்ள பல்வேறு சொற்களும் ஒரு சொல் பல்பொருள். பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதிக்கும் மூலமாய் அமைந்தன எனலாம். எனவே நிகண்டுகளின் தோற்றத்திற்கு மூலமாய்த் தொல்காப்பியம் அமைந்து விளங்குவதை நன்குணரமுடிகின்றது.

**தமிழில் தோன்றிய நிகண்டுகள்**

| **நிகண்டின் பெயர்** | **ஆசியர்** | **காலம்** |
|---|---|---|
| 1.திவாகரம் | திவாகரர் | 9 நூ |
| 2.பிங்கலம் | பிங்கலர் | 10 நூ |
| 3.உரிச்சொல் நிகண்டு | காங்கேயர் | 14 நூ |
| 4.கயாதரம் | கயாதரர் | 15 நூ |
| 5.பாரதிதீபம் | திருவேங்கடபாரதி | 15 நூ |
| 6.சூடாமணி நிகண்டு | மண்டலபுருடர் | 16 நூ |
| 7.அகராதி நிகண்டு | இரவேண சித்தர் | 1594 |
| 8.கைலாச நிகண்டு | கைலாசம் | 16நூ |
| 9.ஆசிரிய நிகண்டு | ஆண்டிப்புலவர் | 17 நூ |

| | | |
|---|---|---|
| 10.பல்பொருள் சூடாமணி நிகண்டு | ஈசூரபாரதி | 1700 |
| 11.சதுரகராதி | வீரமாமுனிவர் | 1732 |
| 12.பொதிகை நிகண்டு | சுவாமிநாத கவிராயர் | 18 நூ |

மேற்கண்ட நிகண்டுகள் 9-ஆம் நூற்றாண்டு தொடங்கி அனைவராலும் போற்றப்படக்கூடிய வகையில் பல நிகண்டுகள் தோன்றலாயின.

**ஆதி திவாகரம்**

இப்பொழுது கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் முந்தியது "சேந்தன் திவாகரம்' என்னும் நிகண்டாகும். இது, சேந்தன் என்னும் சிற்றரசனது வேண்டுகோட்படி திவாகரர் என்பவரால் இயற்றப் பட்டதாகலின், இயற்றுவித்தோன் பெயரையும் இயற்றியவர் பெயரையும் இணைத்துச் சேந்தன் திவாகரம் என அழைக்கப் பட்டது. இந்தத் திவாகரருக்கு முன்னாலேயே இன்னொரு திவாகரர் தம் பெயரால் 'திவாகரம்' என ஒரு நிகண்டு இயற்றியிருந்தார். இப்படியாக இரண்டு திவாகரங்கள் தோன்றி விடவே, இரண்டிற்கும் வேறுபாடு தெரிவதற்காக, முதலில் தோன்றிய திவாகரம் 'ஆதி திவாகரம்' எனவும், சேந்தனது தூண்டுதலால் இரண்டாவதாகத் தோன்றிய திவாகரம் 'சேந்தன் திவாகரம்' எனவும் அழைக்கப்பட்டன. ஆனால் எப்படியோ ஆதி திவாகரம் அழிந்து போயிற்று. சிலர், இந்த இரு திவாகரங்களையும் தனித்தனி நூலாகக் கொள்ளாமல், ஒரே நிகண்டெனக் கூறுகின்றனர். இவர் கூற்றுப் பொருத்தமுடையதாகப் புலப்படவில்லை. இது குறித்துச் 'சேந்தன் திவாகரம்' என்னும் தனித் தலைப்பில் விரிவாக ஆராயப்படும்; அதனை அடுத்து வரும் இரண்டாம் பாகத்தின் தொடக்கத்திலேயே காணலாம்.

தமிழ் நிகண்டுகள், அகரமுதலி எனப்படும் அகராதிகளுக்கு முன்னோடியாக இருந்த நூல்களாகும். தொல்காப்பியத்தில் சொற்களஞ்சிய உருவாக்கம் பற்றிய கருத்து சுட்டப்பட்டிருந்தாலும், கி.பி. எட்டாம் நூற்றாண்டில் திவாகரம் என்ற நிகண்டு ஆக்கப்பட்டதே அகராதி கலையில் ஒரு தொன்மையான நிகழ்வு என்பதாகும்.

**சூடாமணி நிகண்டு**

திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டுக்கும் அடுத்தபடியாக, கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் காலத்தாலும் தகுதியாலும் முதன்மை பெறுவது சூடாமணி நிகண்டு. இந்நிகண்டு எழுந்ததும் திவாகரமும் பிங்கலமுங்கூட மங்கத் தொடங்கிவிட்டன. சூடா மணிக்குப் பின்னர்ப் பற்பல நிகண்டுகள் தோன்றியும், அவற்றுள் ஒன்றாலும் சூடாமணியின் இடத்தைப் பிடிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு இந்நிகண்டு பிற்காலத்தவரால் பெரிதும் பயிலப்பட்டது. நிகண்டு என்றால் சூடாமணி தான் - நிகண்டு படித்தவர் என்றால் சூடாமணி படித்தவர் தாம் என்று

பொருள்கொள்ளும் அளவுக்கு இந்நிகண்டு தமிழ் மக்களிடையே 165 மிகவும் பரவி மிளிர்ந்தது.

பெயர்க் காரணம்

சூடாமணி என்பது, தலையில் அணியும் ஒருவகை அணியின் (நகையின்) பெயராம். மற்ற உறுப்புக்களில் அணியும் அணியினும் மணியினும் தலைமேல் அணியும் மணியணி மிகவும் சிறப் புடைத்து. எனவே, அணிகளுக்குள் சிறந்த தலைமணியான சூடா மணியைப் போல, நிகண்டுகளுக்குள் தலைசிறந்தது இந்நூல் என்னும் கருத்தில் இஃது சூடாமணி நிகண்டு என அழைக்கப் பட்டிருக்கவேண்டும். தலைமணியாகிய சூடாமணியைச் சூளாமணி என அழைக்கும் வழக்கம் இருப்பது போல, சூடாமணி நிகண்டைச் சூளாமணி நிகண்டு என அழைக்கும் ஒருசார் வழக்கமும் உண்டு. இந்நிகண்டு பன்னிரண்டு தொகுதிகளை உடையதாதலின், 'சூடாமணி பன்னிரண்டு நிகண்டு' என்றும் இதனை அழைப்பதுண்டு.

**அகராதி நிகண்டு**

பெயர்க் காரணம்

இந்தக் காலத்தில் சொற்பொருள் கூறும் (டிக்ஷனரி) நூலை அகராதி என வழங்குகிறோம் நாம் அகராதி என்னும் இந்தச் சொல்லை முதல்முதல் அறிமுகப்படுத்தியது இந்த அகரா நிகண்டுதான். சொற்பொருள் கூறும் நூலை மக்கள் பண்டைக் காலத்தில் 'உரிச்சொல்' என்னும் பெயரால் அழைத்தார்கள்: இடைக்காலத்தில் 'நிகண்டு' என்னும் பெயரால் அழைத்தார்கள். இக்காலத்தில் அகராதி என்னும் பெயரால் அழைக்கின்றார்கள். அகராதி, நிகண்டு என்னும் இரண்டு பெயர்களையும் இணைத்துக் கொண்டு இந்த அகராதி நிகண்டு காட்சியளிப்பது ஒரு புதுமையே! அஃதாவது, தமிழ் அகராதிக் கலை (Tamil Lexicography) வளர்ச்சியில் இஃது ஒரு புதுத் திருப்பமேயாகும்.

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் இரேவண சித்தர் எனப்படுபவர். இவர் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் என நீளமாகவும் அழைக்கப்படுகிறார். புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) வழிபட்ட ஊராதலின் சிதம்பாத்திற்குப் புலியூர் என்ற பெயரும் உண்டு. எனவே, ஆசிரியரது ஊர் சிதம்பரம் என்பது புலனாகும். இவர் சைவ வேளாள மரபினர் எனவும், வீரசைவச் சமயத்தினர் எனவும் சொல்லப்படுகிறார். ஆசிரியர் பல பாக்களில் பட்டீசுரரைத் தொழு திருப்பதால்,திருப்பட்டீசுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனைக் குலதெய்வமாகக் கொண்டவர் என்பது புலப்படும்.

அகராதி நிகண்டேயன்றி, திருப்பட்டீசுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம் ஆகிய புராண நூல்களும் ஆசிரியர் இயற்றியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக, முதல் முதல் அகராதி முறையில் நிகண்டு இயற்றிய திறனொன்றே. ஆசிரியரின் அறிவு நுட்பத்திற்கும் புலமையின் தலைமைக்கும் போதிய சான்றாகும்.

**நிகண்டுகளின் தொடக்கம்:**

- தொல்காப்பியத்தில் சொற்களைப் பற்றிய ஆய்வு, சொற்களஞ்சிய உருவாக்கம் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.
- கி.பி. எட்டாம் நூற்றாண்டில் திவாகரம் என்ற நிகண்டு ஆக்கப்பட்டது, இது அகராதி கலையில் தொன்மையானது.

- திவாகர நிகண்டு, இக்கால அகராதி போன்று சொற்களை அகர வரிசையில் அடுக்கி வைத்துக்கொண்டு சொற்களை விளக்கும் வேறு சொற்களைத் தொகுத்துத் தருகிறது.

**முக்கிய நிகண்டுகள்:**

- **திவாகரம்:**

நிகண்டுகளின் தொடக்கத்தை குறிக்கும் ஒரு முக்கிய நூல், இது அகரவரிசையில் சொற்களை அடுக்கி பொருள் விளக்குகிறது.

- **பிங்கல நிகண்டு:**

பிங்கலந்தையாரால் ஆக்கப்பட்ட நிகண்டு, முதலெழுத்தை அடுத்து நிற்கும் எதுகை எழுத்து அடிப்படையில் சொற்களை அடுக்கும்.

- **சூடாமணி நிகண்டு:**

மண்டல புருடரால் ஆக்கப்பட்ட நிகண்டு, இதுவும் ஒரு முக்கிய நிகண்டு ஆகும்.

- **அகராதி நிகண்டு:**

இரேவண சித்தாரால் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட அகராதி நிகண்டு, 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 12,000 சொற்களுக்கு பொருள் விளக்கம் தருகிறது, தமிழ் விக்கிப்பீடியா.

**நிகண்டுகளின் வளர்ச்சி:**

- திவாகர நிகண்டின் அடிப்படையிலான பிற நிகண்டுகள் தோன்றின, அவை திவாகரத்தை அடிப்படையாகக் கொண்டு சொற்களை தொகுத்திருந்தன.
- பல நிகண்டுகள் அகராதிகளாகவும், கலைக்களஞ்சியங்களாகவும் வளர்ச்சி பெற்றன.
- சில நிகண்டுகள் அச்சாகாமலும், அச்சிடப்பட்டவற்றுள் சில அருகிப் போயிருந்தாலும், சில நிகண்டுகள் மட்டுமே பலமுறை பதிப்பிக்கப் பெற்றன, விக்கிமூலம்.

**நிகண்டுகளின் முக்கியத்துவம்:**

- தமிழில் அகராதிகளுக்கு ஆதார நூல்களாக இருந்தவை நிகண்டுகள்.
- நிகண்டுகள், சொற்களுக்கான பொருள்களைத் தருவதற்காக ஆக்கப்பட்ட நூல் வகையாகும்.
- நிகண்டு என்ற சொல் தொகை, தொகுப்பு, கூட்டம் என்னும் பொருள் தரும்.

**நிகண்டுகளின் பொது அமைப்பு**

நிகண்டுகள் அகராதிகளின் ஒரு முன்னோடி வடிவமாகும், இதில் சொற்களுக்கான பொருள்களைக் தொகுத்துத் தரப்படுகிறது. நிகண்டுகள் சொற்களைத் தொகுக்கும் முறைகளில், திவாகர நிகண்டு அகர வரிசையில் அடுக்கியுள்ளது, மற்ற நிகண்டுகள் முதல் எழுத்து மற்றும் அடுத்து வரும் எதுகை எழுத்து அடிப்படையில் தொகுத்து வழங்குகின்றன.

- **சொற்களைத் தொகுத்தல்:**

நிகண்டுகள் சொற்களைத் தொகுத்து, சொற்களின் பொருள்களைக் கொடுக்கின்றன.

- **அகர வரிசை:**

திவாகர நிகண்டு சொற்களை அகர வரிசையில் அடுக்கியுள்ளது.

- **எதுகை எழுத்து:**

பிற நிகண்டுகள் சொற்களை முதல் எழுத்து மற்றும் அடுத்து வரும் எதுகை எழுத்து அடிப்படையில் தொகுத்து வழங்குகின்றன.

- **தொகுதிகள்:**

சில நிகண்டுகள் பல தொகுதிகளைக் கொண்டுள்ளன, எடுத்துக்காட்டாக, சூடாமணி நிகண்டு 12 தொகுதிகளைக் கொண்டுள்ளது.

- **பலபொருள் சொற்கள்:**

சில நிகண்டுகள் பலபொருள் சொற்களையும் விளக்குகின்றன.

நிகண்டுகள் தமிழில் அகராதிகளின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தவை. தமிழ் இணைய கல்விக்கழகம் நிகண்டுகளைப் பற்றி மேலும் அறியலாம்.

குறிப்பு: திவாகர நிகண்டு பழமையான நிகண்டுகளில் ஒன்றாகும், மேலும் இது இக்கால அகராதி போல சொற்களை அகர வரிசையில் அடுக்கி வைத்துக்கொண்டு சொற்களை விளக்கும் வேறு சொற்களைத் தொகுத்துத் தருகிறது.

நிகண்டுகள் என்பது சொற்களுக்கான பொருள்களைத் தொகுத்து வழங்கும் ஒரு வகை நூல். இவை செய்யுள் வடிவில் அமைந்தவை. ஒருபொருட் பல்பெயர், ஒருசொற் பல்பொருள், தொகைப்பெயர் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**தமிழ் நிகண்டுகளும் யாப்பும்**

தமிழில் உள்ள நிகண்டு நூல்களின் பாவகை அமைப்பும் அவை எவ்வாறு மன்னம் செய்வதற்குரிய நிலையிலுள்ளன என்பது பற்றியும் மு. சண்முகம் பிள்ளை கூறும் கருத்துரையாகும்.

முதலில் வந்த நிகண்டு நூல்கள் நூற்பாவினால் அமைக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் மனப்பாடஞ் செய்வதற்கு எளிதாக இருத்தலைக் கருதி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் முதலிய பாவகைகளாலும் நிகண்டு நூல் செய்வாராயினர். வெண்பா யாப்பில் அமைந்தவை உரிச்சொல் நிகண்டும் நாமதீப நிகண்டும் ஆகும். கட்டளைக் கலித்துறையில் இரண்டு நிகண்டுகள் உள. ஒன்று சுயாதரம் மற்றொன்று பாரத்தீபம் நிகண்டுகளுள். சூடாமணி விருத்தப் பாவில் அமைந்த முதன்மையாகக் கொள்ளத்தக்கது அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, நாநார்த்த தீபிகை போன்றவை இவ்வகையில் (1982 23-24)

தமிழ் இலக்கணங்கள் பெரும்பாலும் நூற்பா யாப்புைம். பயன்படுத்தியதைப் போலவே தொடக்ககால் நிகண்டுகளும் நூற்பா யாப்பைப் பின்பற்றியுள்ளன. பின்னர்ப் படிப்படியாக வெண்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, பல்வகை யாப்பு எனக் கால மாற்றத்திற்கு

ஏற்றாற் போல் நிகண்டுகள் பா வளகபிளையும் பாவினத்தையும் பயன்படுத்தியுள்ளன.

இத்தகைய பாவகைப் பயன்பாடுகள் அக்காலத்தைய கல்வியின் மனப்பாடப் பயிற்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாக அமைந்தன. மனப்பாடப் பயிற்சியில் சொற்களை எளிதில் பயில எதுகை என்ற யாப்பியல் கூறு பேருதவி புரிந்தது. கவி பாடும் மரபில் கடைப்பிடிக்கப்பட்ட இவ்வகையான யாப்பியல் சர்இலணக்கூறுகள் நிகண்டுகளை உருவாக்குவதற்கு வழி வகுத்தன. இதைப் போலde பாவகை இசைப்பா வடிவங்கள் ஊர் புதிவுகளும் இடம்பெற்றுள்ளன

**நிகண்டுகளில் யாப்பியல் பதிவுகள்**

நிகண்டு உருவாக்க மரபில் வெண்பா, நூற்பா யாப்பு முதல் பல்வகையான யாப்பு வகைகளைப் பயன்படுத்தினாலும் எதுகை அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. யாப்பிலக்கண மரபில் ஒரு விகற்பம், இருவிகற்பம், வருக்கம் என எதுகை அமையும் இல்மரபு நிகண்டுகளிலும் ஆட்சி பெற்றுள்ளது நிகண்டு ஆசிரியர்கள் பலரும் எதுகை அமைப்பை ஒழுக்க நெறியாகக் கடைப்பிடித்துள்ளனர். இதுபோல் இல்லாமல் சிலர் கலப்பின எதுகையைப் பயன்படுத்தி உள்ளமையும் நிகண்டமைப்பில் கண்ணுற முடிகிறது.

ஊறே யிடையூறும் உற்ற்றி புலனும்

தூறே பொடியும் நாறு மாகும்'

. 2187, 2186

வெள்ளாடு வெண்பா, வெள்ளை நிறத்தன்

வெள்ளை என்னும் பெயரொடு விரியும்"

2249

எனத் திவாகரர் எதுகை நயமிக்க நூற்பா யாப்பை அமைத்துள்ளார். எதுகை நயமிக்க வகையில் பாவமைப்புகளைக் கையாண்டு நூற்பாக்களை வரைந்த நிகண்டாசிரியர்கள் எதுகை என்பதற்கான இலக்கணத்தைச் சுட்டவில்லை இது கவனிக்கத் தக்கதாகும்

நிகண்டுகளில் அமைந்துள்ள யாப்பில் சார இலக்கண பதிவுகளைக் கீழகாணும் தன்மையில் வகைப்படுத்தலாம்.

**யாப்பு என்பதன் பொருள்**

செய்யுள் உறுப்புகள்

(அசை, சீர், தொடை (மோனை, இயைபு)

இசைப்பா வடிவம் (வண்ணம் சந்தம், தாண்டகமி

இப்பதிவுகள் பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி முதலியவற்றில் இடம்பெற்றுள்ளன

**நிகண்டுகளின் யாப்பு:**

- நிகண்டுகள் பொதுவாக செய்யுள் வடிவில் உள்ளன.
- வெண்பா, அகராதி, நூற்பா போன்ற யாப்பு வகைகளில் எழுதப்பட்டுள்ளன.

**நிகண்டுகளின் பொருட்பாகுபாடு:**

- **ஒருபொருட் பல்பெயர்:** ஒரு பொருளுக்குரிய பல பெயர்களைக் கூறுவது. உதாரணமாக, "பகவன்" என்ற சொல் சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தர் ஆகிய பல பொருள்களைத் தரும்.
- **ஒருசொற் பல்பொருள்:** ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களைக் கூறுவது. உதாரணமாக, "பார்" என்ற சொல் பார்வை, ஆட்டம், துளி போன்ற பல பொருள்களைத் தரும்.

- **தொகைப்பெயர்:** ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் தருவது. உதாரணமாக, "மாலை" என்ற சொல் தாமரை, மாலை, மாலை போன்ற பல பொருள்களைத் தரும்.
- நிகண்டுகள் தெய்வப் பெயர்கள், மக்கட் பெயர்கள், விலங்குப் பெயர்கள், முதலியனவாகத் தொகுத்து விளக்கம் தருகின்றன.
- சொற்களைக் கடினப் பதங்களுக்கு மட்டும் பொருள் கூறுவது வழக்கம்.

## அலகு 4

## தமிழ் அகராதிகள்.

### அகராதிகள்

சொற்களைப் பற்றிய ஆய்வும் சொற்களஞ்சிய உருவாக்கமும் பற்றிய கருத்தும் தொல்காப்பியத்தில் சுடடப்பட்டுள்ளன. காலப்போக்கில் சொற்றொகுதியின் தேவையை அறிந்து நிகண்டுகள் உருவாக்கப்பட்டன. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நிகண்டு ஆக்கம் தமிழ் அகராதிக்கலை வளர்ச்சியில் தொன்மையானது. நிகண்டுகளில் மிகவும் பழமையானது திவாகரம் ஆகும். பின்னர் உருவாக்கப்பட்ட நிகண்டுகள் எல்லாம் திவாகரத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பொதுவாக நிகண்டுகளில் ஒரு தலைப்புச் சொல்லின் கீழ் ஒரு பொருள் பன்மொழிகள் தொகுத்துத் தரப்பட்டிருக்கும். அதாவது, ஒரே பொருளைக் குறிப்பிடுகின்ற பல சொற்கள். எடுத்துக்காட்டாக, யானை. இதனைக் குறிப்பிடுவதற்கு, வேழம், கைம்மா, களிறு, மா, கரி போன்ற பல சொற்கள் தரப்படும். நிகண்டில் பொருண்மைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. மேலும் அவற்றில் வழக்கிறந்த சொற்கள் அதிகமாக இருந்தன; இக்காலத் தமிழுக்குத் தேவைப்படும் சொற்கள் இல்லை. இந்நிலையில் சிதம்பர இரேவணச்சித்தர் 1594இல் தொகுத்துத் தந்துள்ள அகராதி நிகண்டு, சொற்களை அகராதி அடிப்படையில் தந்துள்ளது.

### தமிழில் அகராதியின் தோற்றம்

சொற்களை அகர வரிசையில் தொகுத்துப் பொருள் தரும் முறையானது, இந்தியாவிற்கு வந்த மேலைநாட்டாரின் தொடர்பால் ஏற்பட்டதாகும். மேலைநாட்டினர் இந்தியாவுடன் அரசியல், வணிகத் தொடர்புடன், கிறிஸ்தவ சமயப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் தாய்மொழியைக் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்நிலையில் அவர்கள் இந்திய மொழிகளை அறிந்துகொள்ள, அம்மொழிகளின் இலக்கணத்தை மேலைநாட்டு மொழிகளில் எழுதினர். அப்பொழுது குறிப்பு நூல்களாக அகராதிகளைத் தயாரித்தனர். இதனால்தான் தொடக்க காலத்தில் அகராதிகள் பெரும்பாலும் மேலைநாட்டவரால் உருவாக்கப்பட்டுள்ளன.

கி.பி.1679ஆம் ஆண்டில் அந்தோணி பிரயோன்சா அடிகளார் போர்த்துகீசிய-தமிழ் அகராதியை உருவாக்கினார் வீரமா முனிவர் சதுரகராதியை 1732இல் வெளியிட்டார். மேலும் அவர் தமிழ்-லத்தீன் அகராதி, போர்த்துகீசியம்-தமிழ்-லத்தீன் அகராதி ஆகியவற்றையும் வெளியிட்டார். இன்றுவரை தமிழில் நூற்றுக்கணக்கான அகராதிகள் வெளியாகியுள்ளன.

அறிவியல் வளர்ச்சி காரணமாகத் தமிழில் உருவாக்கப்பட்ட கலைச் சொற்களின் தொகுப்பான அகராதிகளும் ஆட்சிமொழி அகராதிகளும் பல்துறை சார்ந்த அகராதிகளும் இன்று அதிக அளவில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தமிழ் அகராதித் துறையின் வளர்ச்சி, பல நூற்றாண்டுகளாக, சொற்றொகுதியையும், அதன் பயன்பாடுகளையும் அறியும் ஒரு கலையாக வளர்ந்துள்ளது. தொல்காப்பியம் முதல் நிகண்டுகள், ஐரோப்பிய பாதிரிகளின் அகராதி முயற்சிகள், இணைய அகராதிகள் வரை அகராதித் துறையின் வளர்ச்சி தொடர்ச்சியாக நடந்துள்ளது.

**அகராதித் துறை**

- **தொல்காப்பியம்:**

தமிழ் அகராதித் துறையின் ஆரம்பம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களில் காணப்படுகிறது.

- **நிகண்டுகள்:**

அகராதித் துறையின் வளர்ச்சிக்கு நிகண்டுகள் (lexicons) ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. நிகண்டுகள், சொற்களை வரிசைப்படுத்தி, அதன் பொருள், பயன்பாடு போன்றவற்றை விளக்கும் நூல்கள்.

- **திவாகரம்:**

நிகண்டுகளுள் மிகவும் பழமையானது திவாகரம் ஆகும்.

ஐரோப்பிய பாதிரிகளின் பங்கு:

- ஐரோப்பிய பாதிரிகள், தமிழ் அகராதித் துறையில் ஒரு முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தமிழ்-ஆங்கில அகராதிகள், ஆங்கில-தமிழ் அகராதிகள் போன்றவற்றை உருவாக்கினர்.

**அகர வரிசைப்படி அகராதிகள்:**

- அகர வரிசைப்படி சொற்களை அமைத்த முதல் அகராதி, பதினெட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாக ஒரு வலைத்தளம் குறிப்பிடுகிறது.

**இணைய அகராதிகள்:**

- இணையத்தின் வருகை, தமிழ் அகராதித் துறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. பல இணைய அகராதிகள், தமிழ் மொழியின் சொற்களின் பொருள், பயன்பாடு, எழுத்துப்பிழைகள் போன்றவற்றை விளக்குகின்றன.

**தற்கால வளர்ச்சி:**

- தற்போது, தமிழ் அகராதித் துறை, பல இணைய தளங்கள், மொழிபெயர்ப்பு கருவிகள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றுடன் இணைந்து வளர்ச்சி அடைந்துள்ளது.

நிகண்டு நூல்களைப்போல் செய்யுள் வடிவில் இல்லாமல், தனித் தனிச் சொற்களை ஒன்றன் பின் ஒன்றாக அகர வரிசையில் நிறுத்திப் பொருள் கூறிச் செல்லும் நூல் அகராதி எனப்படும். இத்தகைய தமிழ் அகராதி நூல்கள் பதினேழாம் நூற்றாண் டிலேயே தோன்றத் தொடங்கி விட்டன. பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இந்த அகராதிக் குழந்தை. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் முன்னிளமைப் பருவத்தையும் பின்னிளமைப் பருவத்தையும் கடந்து இவ்விருபதாம் நூற்றாண்டில் குமரப் பருவத்தை எட்டியுள்ளது. இன்னும்

அடைய வேண்டிய வளர்ச்சிகள் பெற வேண்டிய நிறைவுகள் எவ்வளவோ உள்ளன.

பதினேழாம் நூற்றாண்டில் தமிழுக்குத் தமிழ் அகராதிகளும் (அஃதாவது, தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள் கூறும் அகராதிகளும்) தமிழுக்குப் போர்ச்சுகீசிய அகராதியும் தோன்றின 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளிலோ, இவற்றுடன், போர்ச்சுகீசிய - தமிழ் அகராதியும் (போர்ச்சுகீசியச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் கொடுப்பது). இவ்வாறே தமிழ் இலத்தீன் - இலத்தீன் தமிழ் அகராதிகளும், தமிழ் பிரெஞ்சு -பிரெஞ்சு தமிழ் அகராதிகளும், தமிழ் செர்மனி-செர்மனி தமிழ் அகராதிகளும், தமிழ் ருஷ்யன் - ருஷ்யன் தமிழ் அகராதிகளும், தமிழ் ஆங்கிலம் ஆங்கிலம் தமிழ் அகராதிகளும், சம்சுகிருதம் தமிழ-தமிழ் சமசுகிருதம் அகராதிகளும், தமிழ் இந்தி - இந்தி தமிழ் அகராதிகளும், கிரந்தம்-தமிழ் அகராதிகளும், இந்துஸ்தானி- தமிழ் அகராதியும், தமிழ்-சிங்களம் அகராதிகளும். மலாய்- தமிழ் அகராதிகளும், பர்மா-தமிழ் அகராதியும், ஆங்கிலம் - தெலுங்கு-தமிழ் அகராதியும், இந்தி-மராத்தி-தெலுங்கு-தமிழ் அகராதியும் மற்றும் பலவகை அகராதிகளும் தோன்றின. இருபதாம் நூற்றாண்டில் இன்னும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன

இந்த நூற்றாண்டுகளில், போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர்களின் ஆட்சியும் செல்வாக்கும் நம் நாட்டில் நிலவியதால் அவர்தம் மொழிகளோடு பிணைந்த

தமிழகராதிகள் பல தோனறின இருபதாம் நூற்றாண்டி ஐரோப்பியர்களின் செல்வாக்கு மங்கியதால், அத்தகைய அகராதிகள் புதியனவாகத் தோன்ற இடமில்லாது போயிற்று அந்தப் பழைய அகராதிகளும் மறுபதிப்புக்கள் பெறவில்லை. ஆனால், ஆங்கில மொழி மட்டும் இன்னும் நம் நாட்டில் நடமாடுவதால், ஆங்கிலத்தோடு தமிழ் பிணைந்த அகராதிகள் மட்டும் புதிது புதிதாகத் தோன்றுகின்றன. பழைய அகராதிகள் சிலவும் புதுப் புதுப் பதிப்புக்கள் பெற்று

வருகின்றன. அது போலவே, பிரெஞ்சு மொழி நடமாடும் புதுச்சேரியில், பிரெஞ்சோடு தமிழ் பிணைந்த பழைய அகராதிகள், புதுவை மாதா கோயில் அச்சகத்தில் புதுப் பதிப்புக்கள் பெற்று வருகின்றன

மற்றும், நீண்டநாளாக நம் நாட்டில் நிலவுகிற வடமொழியோடு தமிழ் பிணைந்த அகராதியும், பின் வந்த இந்தி மொழியோடு தமிழ் பிணைந்த அகராதியும் தோன்றி யிருப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

## தமிழ் அகராதிகளின் வளர்ச்சி வரலாறு

### பதினேழாம் நூற்றாண்டு அகராதிகள்

அகராதி மோனைக்கு அகராதி எதுகை

முதல் எழுத்து ஒன்றியிருப்பது மோனை என்பதும் இரண்டாம் எழுத்து ஒன்றியிருப்பது எதுகை என்பதும் முன்பே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, 'அகராதி மோனைக்கு அகராதி எதுகை என்பது, சொற்களின் முதல் எழுத்தை ஒட்டிமட்டும் அகரவரிசைப் படுத்துவதை நிறுத்திக் கொள்ளாமல், இரண்டாம் எழுத்தை ஒட்டியும் சொற்களை அகர வரிசைப் படுத்திப் பொருள் கூறும் நூல் இஃது என்று அறியலாம். இவ்வகராதியில், சொற்பொருள் விளக்கம் செய்யுளாயில்லாவிடினும் கிட்டத்தட்ட நிகண்டு நடையில் உள்ளது.

இந்த அகராதியின் ஆசிரியர் பற்றியோ, காலம் பற்றியோ உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. இது பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி யிருக்கலாம் என உய்த்துணரப்படுகிறது.

இச் சிறுநூலில், ஏறக்குறைய 7500 சொற்கள் பொருள் விளக்கம் செய்யப்பெற்றுள்ளன. எளிய சொற்கள் பல இதில் காணப்பட வில்லை. 'அகல்வுற்று' என்பது போன்ற எச்சச் சொற்களும், 'செய்பொழில்' என்பது போன்ற தொடர்களும், 'காண்போதல் உற்றார்' என்பது போன்ற வாக்கிய உருவங்களும் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாம்.

**பத்துச் சொல் அகராதி**

இந்த அகராதியில், திவாகரம், சூடாமணி முதலிய உள்ள சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டுப் ள்கூறப்பட்டுள்இது பத்துத் தொகுதிகளையுடையது. முதல் தொந்தியில் ஓரே எழுத்தாக உள்ள சொற்களும், இரண்டாந் தொகுதியில் இரண்டு எழுத்துக்களாலான சொற்களும் இப்படியே தொகுதியில் பத்து எழுத்துக்களாலான சொற்களும் இடம் ஒரு சொல்லுக்குப் பொருள் அறியவேண்டுமாயின், அச்சோல்லில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன என்று எண்ணிப் த்து அத்தனையாவது தொகுதியில் சென்று அகர வரிசைப்படி தேடினால் மிக எளிதில் அச்சொல்லையும் பொருளையும் கண்டு பிடித்து விடலாம் ஆனால், பத்துக்கு மேற்பட்ட எழுத்துக் களையுடைய சொல்லுருவங்கள் இந்த அகராதியில் இல்லை.

**வைணவ விளக்கவுரை அருஞ்சொல் அகராதி**

திருவாய் மொழி போன்ற வைணவத் திவ்யப் பிரபந்தங் உரு மணிப் பிரவாள தமிழ்ச் சொல்லும் வட சொல்லும் கலந்து கடையில் விரிவான விளக்கவுரை எழுதப்பட்டிருப்பது பலரும் அறிந்த செய்தி அவ்வுரையில் உள்ள அருஞ்சொற்கள் அகர வரிசைப் படுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ள நூல்தான் இந்த அகராதி பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் பேச்சு வழக்கில் இருந்த சொற்கள் பலவற்றை இதில் காணலாம்.

இவ்வகராதியே யன்றி, சம்பிரதாய அகராதி என ஒன்றும் உள்ளது வைணவச் சார்புடைய இந்தச் சம்பிரதாய அகராதி இருபதாம் நூற்றாண்டில் அச்சிடப்பட்டாலும், தோன்றிய காலம் திட்டமாகத் தெரியவில்லை.

**தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி**

பதினேழாம் நூற்றாண்டில் நம் நாட்டில் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக ஐரோப்பாவிலிருந்து கிறித்துவத் துறவியர் பலர் திருந்தனர். அவர்கள் இலத்தீன், போர்ச்சுகீசியம், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளை அறிந்தவர்கள். தம் தமிழ்மக்களிடையே பரப்ப வேண்டுமாயின் அவர்கள் தமிழ்மொழியில் பேசினால்தான் மக்களைக் கவர முடியும். அதற்காகத் தமிழ் கற்றார்கள்; தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தார்கள்; சொற் பொருள் களஞ்சியமான அகராதிகளும் ஒரு மொழிக்கு ஒரு மொழியில் படைத்தார்கள். இவ்விதமாக ஐரோப்பிய வழிகளோடு தமிழ் பிணைந்த அகராதிகள் பல தோன்றின, தமிழ்

மக்கள் ஐரோப்பிய மாழிகளை அறிந்து கொள்ளவும், புதிதாக வரும் ஐரோப்பியர்கள் தமிழ்மொழியை அறிந்து கொள்ளவும் இவ்வகராதிகள் பெருந்துணை புரித்தன இவற்றுள் காலத்தால் முத்தியது தமிழ் மோர்ச்சுசிய அகராதியாகும்.

தமிழ் போர்ச்சுசிய அகராதி என்பது, தமிழ்ச் சொற்களை அகர வரிசையில் முத சயில் முதலில் நிறுத்தி, அவற்றிற்கு நேரான போர்ச்சியச் சொற்களை எதிர்ப்பக்கத்தில் கொடுத்திருக்கும் அகராதியாகும் இதன் ஆசிரியா 'ஆத்தம் தெ பரோயன்சா' (Fr. Antem de Proenca) என்னும் மேலைப் புலத் துறவியார் இது தோனறிய காலம் கி.பி. 1679 ஆகும். மலையாளத்திலுள்ள அம்பலக்காடு என்னும் இடத்தில் இது பதிப்பிக்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் ஏறக்குறையத் தமிழ்மொழியும் மலையாளமொழியும் ஒன்றேயாதலின், மேலைப் புலத் துறவியார் இவ்வகராதியை மலையாளப் பகுதியில் உருவாக்கியதில் வியப்பொன்றுமில்லை.

இஃதொன்று தவிர. ஐரோப்பிய மொழிகளோடு தமிழ் பிணைந்த மற்ற அகராதிகள் பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் தோன்றின.

## பதினெட்டாம் நூற்றாண்டு அகராதிகள்

திக்சியனரியம் தமுலிசம்

'திக்சியனரியம் தமுலிசம்' (Dictionarium Tamulicum) என்னும் இந்தத் தமிழ் அகராதியை, பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் அகராதியாகக் கொள்ளலாம். இதன் ஆசிரியர் யர்தோல்மாஸ் சியஜன்பல்க்' (Bartholmaeus Ziegenbalg) என்னும் வெள்ளையர். எழுதப்பட்ட காலம் கி.பி.1712 ஆகும்.இவ்வகராதி ஒன்றும் பரவியதாகத் தெரியவில்லை.

சீகன் பால்க்

## தமிழ் - இலத்தீன் அகராதி

தமிழ்ச்சொல்லுக்கு இலத்தீன் சொல்லால் பொருள் விளக்கும் இந்த அகராதியின் தொகுப்பாசிரியர் 'சீகன் பால்க்' என்னும் செர்மானியராவார். இவர் தரங்கம்பாடியில் தங்கி அச்சுக் கூடமும் காகிதத் தொழிற்சாலையும் நடத்தியவர். (1715-16ஆம் ஆண்டளவில் இவர் இந்த அகராதியை வெளியிட்டார்.

## பெஸ்கி தமிழ்-இலத்தீன் அகராதி

சதுர் அகராதியேயன்றி, ஐரோப்பிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த வேறு சில அகராதிகளும் வீரமா முனிவர் இயற்றினார். அவற்றுள், தமிழ்ச் சொல்லுக்கு நேரே இலத்தீன் சொல்லால் பொருள்கூறும் அகராதியும் ஒன்று. இஃது எழுதப்பட்ட காலம் கி.பி. 1742. இதில் 9000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**இலத்தீன் - தமிழ் அகராதி**

இலத்தீன் சொல்லுக்கு நேரே தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதி யிது. ஆசிரியர் வீரமாமுனிவர் (பெஸ்கி).

**தமிழ்-பிரெஞ்சு அகராதி**

தமிழ்ச் சொல்லுக்கு நேரே பிரெஞ்சுச் சொல்லால் பொருள்கூறும் அகராதி யிது. ஆசிரியர் (பெஸ்கி) வீரமாமுனிவர் காலம்: கி.பி. 1744.

இந்த அகராதி மிகவும் அழகாகக் கையால் எழுதப்பட்டு, 1806ஆம் ஆண்டில், எழுதியதை அப்படியே படியெடுக்கும் 'சைகிளோஸ்டைல்' (Cyclostyle) பொறி மூலம் பதிப்பிக்கப் பட்டுள்ளது. மிகமிக நீளமாகவும் அகலமாகவும் உயரமாகவும் உள்ள இந்த 'சைகிளோஸ்டைல்' பதிப்பு, பார்க்கப் பார்க்க மிகவும் நோத்தியா யிருக்கிறது. அவ்வளவு அழகாகப் பொறுமையுடன் எழுதிய கை யாருடையதோ? அந்தக் கைக்கு என்ன பரிசளிப்பது !

**தமிழ்-ஆங்கில அகராதி**

இது, தமிழ்ச் சொல்லுக்கு நேரே ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறுவது. ஆசிரியர் வீரமாமுனிவர் (பெஸ்கி)

**போர்ச்சுகீசியம்-இலத்தீன்-தமிழ் அகராதி**

போர்ச்சுகீசியச் சொல்லுக்கு நேரே இலத்தீன் சொல்லாலும் அதனையடுத்துத் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறும் அகராதியிது. ஆசிரியர் வீரமாமுனிவர். காலம்: 1744.

**வட்டார வழக்குத் தமிழ் அகராதி**

பொதுமக்கள் பேசும் வழக்குச் சொற்களுக்குத் தமிழாலேயே பொருள் கூறும் அகராதியிது. ஆசிரியர் வீரமா முனிவர்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள அகராதிகளை ஆராயுங்கால். வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டு மிகவும் பரந்துபட்டது என்பது புலனாகும்.

**ஃபாபிரிசியஸ் தமிழ்-ஆங்கில அகராதி**

இது தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதி. 'ஜான் பிலிப் ஃபாபிரிசியஸ்' (John Philip Fabricius), 'ஜான் கிறிஸ்தியன் ப்ரெய்தாப்ட்' (John Christian Breithaupt) என்னும் செர்மானியக் கிறித்துவச் சங்கத்தார் இருவரால் இவ்வகராதி இயற்றப்பட்டது. இருவருள் முதல்வர் பெயரால் இவ்வகராதி அழைக்கப்படுகிறது. அச்சிடப்பட்ட காலம் கி.பி. 1779.

**சதுர் அகராதி**

**ஆசிரியர் வரலாறு**

சதுர் அகராதியின் ஆசிரியர் 'பெஸ்கி' (Father Beschi) என்னும் மேலைப்புலக் கிறித்துவத் துறவியார். இவர் கிறித்துவ மதம் பரப்ப இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாடு போந்து கி.பி. 1710 ஆம் ஆண்டிலிருந்து 1747 வரை வாழ்ந்தார்.

இவர் தமிழ்மக்களின் உள்ளக் கவர்வதற்காகக் காவியுடுத்துச் குறடு அணித்து புலாலும் நீத்தார் எதரிய தாதகவாமி எனவும் வீரமா முனிவர் எனவும் அழைக்கப்பட்டார்

இலத்தீன், போர்ச்சுசியம் முதலிய ஐரோப்பிய மொழிகளை இந்த வீரமாமுனிவர் தமிழ்மொழியினையும் நன்கு கற்று சதுர் அகராஜு முதலிய பல அகராதிகள் இயற்றினார். அகராதிலிள வன்தி, கொடுந்தமிழ், தேம்பாவணி, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், வாமன் கதை முதலிய நூல்களும் இயற்றினார். இருக்குறளின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் இலத்தின் மொழியில் பெயர்த்தார்.

இவருடைய படைப்புக்களும் மிக்க பயனுள்ளது 'சதுர் அகராதி யாகும். இஃது எழுதப்பட்ட காலம் 1732 ஆகும்.

**நூல் அமைப்பு**

இக்காலத்தில் காணப்படும் தமிழ் அகராதிகட்கெல்லாம் முன்மாதிரியாக உள்ளது சதுர் அகராதியே முதல் எழுத்து அல்லது இரண்டாம் எழுத்தோடு நின்று விடாமல் சொற்கள் கடைசி எழுத்து வரைக்கும் அகரவரிசைப்படுத்தப்பட்டு, தமிழுக்கு நேரே தமிழ்ச் சொல்லிலேயே பொருள் கூறும் முதல் அகராதி இதுவே! அதனால் இதனை இயற்றிய வீரமாமுனிவர் 'தமிழகராதியின் தந்தை' எனச் சிறப்பிக்கப் பெற்றார். இந்நூல் 'தமிழ் என்னும் பெருங்கடலைக் கடக்க உதவும் ஒரு மரக்கலமாகத் திகழ்கிறது என இதன் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

சதுர் என்றால் நான்கு என்று பொருள் இவ்வகராதி பெயரகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடை யகராதி என்னும் நான்கு பிரிவுகள் உடையதாதலின் 'சதுர் அகராதி' என்னும் பெயர் பெற்றது) பெயர் அகராதி என்னும் பிரிவில், ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பலப்பல பொருள்கள் (அர்த்தங்கள்) கூறப்பட்டுள்ளன. இதில் 12000 சொற்கடகு மேல் இடம் பெற்றுள்ளன. பொருளகராதியில், சிவன், திருமால், நிலம் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் உரிய பலப்பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தொகையகராதியில் இருசுடர், முக்குணம் என்பன போலத் தொகைப்பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. தொடையகராதியில், அகம்-இகம் உகம் என்பன போலவும், ஊற்றம் ஏற்றம் கூற்றம் என்பன போலவும், முதல் எழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் ஒத்து வந்து, செய்யுட்கு உதவக்கூடிய எதுகைத் தொடைச் சொற்கள் (Rhyming words)-அகரவரிசையில் பொருள் விளக்கப்பட்டுள்ளன.

**பதிப்புக்கள்**

சதுரகராதி பதினெட்டாம் நூற்றாண்டில் (1732) எழுதப்பட் டாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் அச்சிடப்பட்டது. இதன் இரண்டாம் தொகுதியாகிய பொருளகராதி மட்டும் திருச்சிம்பல ஐயர் என்னும் அறிஞரின் உதவியுடன் 'எல்லிஸ்' (Es) என்னும் வெள்ளையரால் 1819 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்டது பின்னர் நான்கு தொகுதிகளும் கொண்ட நூல் முழுவதுமேரிச்சாடு கிளர்க்' (Richard Clarke) என்பவரின் ஆணைப்படி, தாண்டமுதலியார், இராமச்சந்திரக் கவிராயர் ஆகியோரின் மேற்பாரவைவயில் 1824 ஆம் ஆண்டில் அச்சிடப் பட்டது இதன் இரண்டாம் பதிப்பு 1838 ஆம் ஆண்டில் 'ரெவரன்ட் ஜே. ஸ்மித்' (Rev. J Smith) என்பவரால் வெளியிடப்பட்டது. பின் வந்த பதிப்பாசிரியர்கள் வீரமாமுனிவர் அமைத்த சொற்களுக்கு மேலும் சில சொற்களைப் புதியனவாகச் சேர்த்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது மற்றும் ஆசிரியரால் ஒரு சொல்லுக்கு உரிய பொருள்களாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் பதிப்பாசிரியர்கள் அகரவரிசைப்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது.

இந்த அகராதியின் மாதிரிக்காக, தாரம், ஊர்தி என்னும் இரு சொற்கட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் பொருள்கள் வருமாறு:

தாரம் அரும்பண்டம், நாக்கு, மனைவி, உச்சவிசை, பொன், மூக்காற் பாடுமிசை, யாழ் நரம்பிலொன்று, விண்மீன், வெள்ளி, வெண்கலம், நல்ல பணியாரம், வில், ஓசை, கண்.

**சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) அமைப்பு**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) என்பது சென்னைப் பல்கலைக்கழகத்தால் தொகுத்து வெளியிடப்பட்ட ஒரு தமிழ் அகராதி. இது 1920 களில் ஏழு தொகுதிகளாக வெளிவந்தது. முதல் பதிப்பில் 117,762 சொற்கள் இருந்தன.

**அமைப்பு:**

- தமிழ்-தமிழ் அகராதி:

இது ஒரு தமிழ்-தமிழ் அகராதி ஆகும், அதாவது தமிழ் சொற்களின் பொருள், விளக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை தமிழில்வே விளக்குகிறது.

- கலைச் சொற்கள்:

இதில் பல நூல்களிலிருந்து தொகுக்கப்பட புதிய சொற்களுக்கு உடுக்குறி (*) இட்டுக் காட்டியுள்ளார்.

- விளக்கங்கள்:

சொற்களின் பொருள், உரை, வரலாறு, மற்றும் பயன்பாடுகள் ஆகியவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

வரலாறு:

- 1899ல் நா. கதிரவேற்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட இராமசாமி நாயுடுவின் பேரகராதியின் விரிவு ஆகும்.
- 1920 களில் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது.
- 117,762 சொற்கள் முதல் பதிப்பில் இடம்பெற்றன.

பயன்பாடுகள்:

- தமிழ் மொழி இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தை அறிய உதவும்.
- தமிழ் சொற்களின் பொருள் மற்றும் பயன்பாட்டை அறிய உதவும்.
- தமிழ் மொழி ஆராய்ச்சிக்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது.

**க்ரியாவின் தற்காலத் தமிழகராதி**

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி என்பது, தற்காலத் தமிழ் மொழி, குறிப்பாக பொது எழுத்துத் தமிழில் பயன்படுத்தப்படும்

சொற்களைக் கொண்ட அகராதியாகும். இது 1992 இல் முதன்முதலில் வெளியிடப்பட்டது. அகராதி, தற்காலத் தமிழின் சொல்வளத்தை பிரதிபலிக்கும் வகையில், பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் என இருவழிகளில் உள்ள சொற்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த அகராதி, தற்காலப் பொது எழுத்துத் தமிழில் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுத்து வழங்குகிறது. மேலும், இலங்கைத் தமிழ் சொற்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன, அவை கலாநிதி எம். ஏ. நுஃமான் என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளன.

**அகராதியின் சிறப்பம்சங்கள்:**

- தற்காலத் தமிழ்: தற்காலத் தமிழ் மொழியில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கொண்டுள்ளது.
- பேச்சுத் தமிழ்: பேச்சுத் தமிழில் பயன்படுத்தப்படும் சொற்களையும் உள்ளடக்கியுள்ளது.
- இலங்கைத் தமிழ்: இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களையும் தொகுத்துள்ளது.
- தலைச்சொற்கள்: 23,800 தலைச்சொற்கள் உள்ளன.
- எடுத்துக்காட்டு வாக்கியங்கள்: 40,130 எடுத்துக்காட்டு வாக்கியங்கள் உள்ளன.
- படங்கள்: 311 படங்கள் உள்ளன.
- புதிதாக சேர்க்கப்பட்ட அம்சங்கள்: திருநர் வழக்குச் சொற்கள், தொடர்புச் சொற்கள் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த அகராதி, தமிழ் மொழி கற்போர், மொழிபெயர்ப்போர், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் மொழி ஆர்வலர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**துறைசார் அகராதி**

துறைசார் அகராதி என்பது குறிப்பிட்ட துறை அல்லது துறைகளுக்குப் பயன்படுத்தப்படும் சொற்களைப் பட்டியலிடும் அகராதியாகும். உதாரணமாக, மருத்துவ அகராதி, பொறியியல் அகராதி, சட்ட அகராதி போன்றவைகளை கூறலாம்.

**துறைசார் அகராதிகள்:**

- ஒரு குறிப்பிட்ட துறை அல்லது தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் சொற்கள், சொற்றொடர்கள் மற்றும் வரையறைகளை உள்ளடக்கிய அகராதிகள் ஆகும்.
- இவை பொதுவான அகராதிகளிலிருந்து வேறுபட்டவை, ஏனெனில் அவை ஒரு குறிப்பிட்ட துறைக்குரிய சொற்களை மட்டுமே கொண்டுள்ளன.
- துறைசார் அகராதிகள், அந்தந்த துறையில் பணிபுரியும் நபர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும், ஏனெனில் அவை அவர்களுக்குப் புரியாத சொற்களைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

**எடுத்துக்காட்டுகள்:**

- **மருத்துவ அகராதி:** மருத்துவம், மருத்துவம் தொடர்பான சொற்கள், உபகரணங்கள், நோய்கள், சிகிச்சை முறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய அகராதி.
- **பொறியியல் அகராதி:** பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் சொற்கள், உத்திகள், கருவிகள், வரையறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய அகராதி.
- **சட்ட அகராதி:** சட்டத் துறையில் பயன்படுத்தப்படும் சொற்கள், விதிகள், சொற்கள், வழக்குகள் போன்றவற்றை உள்ளடக்கிய அகராதி.

- **விளைவு:** துறைசார் அகராதிகள், அந்தந்த துறையில் பணிபுரியும் நபர்களுக்குத் துல்லியமான மொழிபெயர்ப்பு, விளக்கம், மற்றும் தகவல் ஆகியவற்றை வழங்குகின்றன.

**பொதுவான அகராதிகளிலிருந்து வேறுபாடு:**

- பொதுவான அகராதிகள் அனைத்து வகையான சொற்களையும் உள்ளடக்கியிருக்கும், ஆனால் துறைசார் அகராதிகள் ஒரு குறிப்பிட்ட துறையில் உள்ள சொற்களை மட்டுமே கொண்டவை.
- பொதுவான அகராதிகள், பொதுவான சொற்களின் அர்த்தங்களை விளக்குகின்றன, ஆனால் துறைசார் அகராதிகள், அந்தந்த துறையில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தங்களை விளக்குகின்றன.

**துறைசார் அகராதிகளின் பயன்கள்:**

துறைசார் சொற்களைப் புரிந்துகொள்ள உதவுகின்றன, மொழிபெயர்ப்பு மற்றும் தகவல்களைத் துல்லியமாக்குகின்றன, துறையில் பணிபுரியும் நபர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றன, கற்றல் மற்றும் புரிந்துகொள்ளுதலை மேம்படுத்துகின்றன.

**கலைச்சொல் அகராதி**

கலைச்சொல் அகராதி என்பது, குறிப்பிட்ட ஒரு துறை அல்லது கலையில் பயன்படுத்தப்படும் சொற்களின் விளக்கங்களைக் கொண்ட அகராதி ஆகும். இது, அந்த துறையின் கலைச்சொற்களின் சரியான அர்த்தம், விளக்கம், மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தருவதால், அந்த துறையில் ஈடுபடுவோருக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

கலைச்சொல் அகராதிகள் ஏன் முக்கியம்?

- புரியாத சொற்களைப் புரிந்துகொள்ள:

கலைச்சொல் அகராதிகள், ஒரு துறையில் பயன்படுத்தப்படும் சொற்களைப் பற்றி அறிய உதவுகின்றன. இதனால், அந்த துறையில் உள்ள சொற்களைப் புரிந்துகொள்ளவும், அதைப் பற்றி மேலும் அறியவும் உதவுகின்றன.

- சரியான சொற்களைப் பயன்படுத்துதல்:

ஒரு துறையில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொல் அகராதி மூலம் தெரிந்துகொள்வதால், சரியான சொற்களைப் பயன்படுத்த முடியும். இது தகவல்தொடர்புகளின் போது குழப்பத்தைத் தவிர்த்து, துல்லியத்தை உறுதி செய்கிறது.

- ஒரு துறையின் அறிவை மேம்படுத்துதல்:

கலைச்சொல் அகராதிகள் ஒரு துறையின் அறிவை மேம்படுத்துவதற்கு உதவுகின்றன. ஒரு துறையின் சொற்களைப் பற்றி தெரிந்து கொள்வதால், அந்த துறையில் உள்ள கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும், அதைப் பற்றி மேலும் அறியவும் உதவுகின்றன.

கலைச்சொல் அகராதிகளின் வகைகள்:

- பொதுவான கலைச்சொல் அகராதிகள்:

பல துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான கலைச்சொற்களைக் கொண்ட அகராதிகள்.

- துறைக்குரிய கலைச்சொல் அகராதிகள்:

ஒரு குறிப்பிட்ட துறைக்குரிய கலைச்சொற்களைக் கொண்ட அகராதிகள், உதாரணமாக, பொறியியல், மருத்துவம், கணினி போன்ற துறைகளில்.

- மொழிக்குரிய கலைச்சொல் அகராதிகள்:

ஒரு மொழிக்குரிய கலைச்சொற்களைக் கொண்ட அகராதிகள், உதாரணமாக, ஆங்கிலம்-தமிழ் கலைச்சொல் அகராதி.

கலைச்சொல் அகராதிகளின் பயன்பாடு:

கலைச்சொல் அகராதிகள், மாணவர்கள், பேராசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள் என பலதரப்பட்ட மக்களால் பயன்படுத்தப்படுகின்றன.

## அலகு 5

## தொகுப்புப் பணிகள்

**அகராதி வகைகள்**

அகராதி பல வகைகளாக பிரிக்கப்படுகின்றன. ஒரு மொழி அகராதி, இரு மொழி அகராதி மற்றும் பன்மொழி அகராதி ஆகியவை அடங்கும்,.

ஒரு மொழியிலுள்ள சொற்களின் பொருள் அதே மொழியில் விளக்கப்படும் அகராதி. எடுத்துக்காட்டாக, தமிழ் அகராதி தமிழ் சொற்களின் பொருளை தமிழிலேயே விளக்கும்.

- **இருமொழி அகராதி (Bilingual Dictionary):**
- ஒரு மொழி சொற்களின் பொருளை பிற மொழியில் விளக்கும் அகராதி. எடுத்துக்காட்டாக, தமிழ்-ஆங்கிலம் அகராதி.
- **பன்மொழி அகராதி (Multilingual Dictionary):**
- பல மொழிகளின் சொற்களின் பொருளை ஒரே அகராதியில் பல மொழிகளில் விளக்கும் அகராதி.
- **கலைச்சொல் அகராதி (Technical Dictionary):**
- ஒரு குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த சொற்களின் விளக்கங்களை வழங்கும் அகராதி.
- **பொது அகராதி (General Dictionary):**
- பொதுவான பயன்பாட்டில் உள்ள சொற்களின் விளக்கங்களை வழங்கும் அகராதி.
- **சதுரகராதி (Caturakaraati):**
- வீரமாமுனிவரால் எழுதப்பட்ட முதல் தமிழ்-தமிழ் அகராதி.
- **மின்னணு அகராதி (Electronic Dictionary):**
- டிஜிட்டல் வடிவத்தில் உள்ள அகராதி, மொபைல் போன் அல்லது கணினி மூலம் அணுக முடியும்.

- **அரை இருமொழி அகராதி (Semi-bilingual Dictionary):**
- ஒரு மொழி மற்றும் இருமொழி தகவல்களை ஒருங்கிணைத்த கலப்பின அகராதி.
- **புதிய அகராதி (New Dictionary):**
- சொற்களஞ்சிய அகராதி, மொழி அகராதி, கலைக்களஞ்சிய அகராதி, அகராதி மாதிரி அகராதி என்று பல வகைகளாக பிரிக்கலாம்.

## மொழி அகராதிகள்

கலைக்களஞ்சியம் தகவல் தொகுப்பாய் அமைய மொழி அகராதிகள் சொற்றொகுப்பாய், சொற்களஞ்சியமாய் அமைகின்றன. கலைக்களஞ்சியத்தில் பதிவுச்சொல்லின் மொழியிலேயே பொருள்விளக்கம் அமைந்திருக்க அகராதியில் இரண்டும் வெவ்வேறு மொழியில் அமைந் திருக்கலாம். இதனால் அகராதிகள் சொற்றொகுதி இடம்பெறும் மொழிகள் ஆகிய அடிப்படையில் பலவாய் வகைப்படுகின்றன. அகராதிகளில் இடம்பெறும் மொழி எண்ணிக்கை அடிப்படையில் அவற்றை ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனப் பொதுவாய் வகைப்படுத்தலாம்.

## ஒருமொழி அகராதி

பதிவுகளுக்குப் பதிவுச் சொல்லின் மொழியிலேயே பொருள்விளக்கம் தரும் அகராதிகள் ஒருமொழி அகராதிகள். தமிழ்-தமிழ், ஆங்கிலம் – ஆங்கிலம், இந்தி - இந்தி என அமையும் அகராதிகள் இவ்வகையுள் அடங்குகின்றன. தமிழில் சதுரக ராதிக் காலந்தொட்டு வரும் ஒருமொழி அகராதிகள் பொருளை மட்டுமே தருதலில் ஆர்வம் காட்டியுள்ளன.

## இருமொழி அகராதி

பதிவுச் சொற்களுக்கு வேறு பிற மொழியில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் இருமொழி அகராதிகள் எனப் பெறுகின்றன. இவ்வகையில் தமிழ் - ஆங்கிலம். ஆங்கிலம் - தமிழ், தமிழ்-மலையாளம், மலையாளம் -தமிழ், தமிழ் - தெலுங்கு, தெலுங்கு-தமிழ், வடமொழி-தமிழ், தமிழ் - வடமொழி என அகராதிகள் உருவாகும். அகராதியில் இடம்பெறும் இவ்விரு மொழிகளைப் பதிவுச்சொல் மொழி. பொருட்சொல் மொழி எனப் பொதுவாய்க் குறிப்பிடலாம். அகராதியியலில் இவற்றுக்கெனத் தனிக் கலைச்சொற்கள் உள்ளன. பதிவுச்சொல் மொழி மூலமொழி (Source language) எனவும் பொருட்சொல் மொழி இலக்குமொழி (Target language) எனவும் குறிப்பிடப் பெறுகின்றன.

1. தமிழ்-ஆங்கிலம். 2. ஆங்கிலம் - தமிழ் எனும் இருமொழி அகராதிகளில் முதலாவது அகராதியில் தமிழ் மூலமொழி ஆங்கிலம் இலக்குமொழி. இரண்டாவதில் ஆங்கிலம் மூலமொழி தமிழ் இலக்குமொழி. பதிவுச் சொற்களுக்கு இணையான பிறமொழிச் சொற்களை. பிறமொழிப் பொருளை அறிந்து கொள்வதே இவ்வகை அகராதிகளின் அடிப்படை நோக்கம். பயன்பாட்டாளரின் இலக்கு பொருட்பகுதியில் இடம்பெறும் மொழியே என்பதால் அது இலக்குமொழி எனப்பட்டது.

## பன்மொழி அகராதி

இலக்குமொழி ஒன்றற்கு மேற்பட்டதாய் இருந்தால் அவ்வகராதிகள் இலக்கு மொழிகளின் எண்ணிக்கைக்கேற்ப மும்மொழி அகராதி (Trilingual Dictionary) நான்குமொழி அகராதி(Quadrilingual Dictionary) என வகைப்படுத்தப் படுகின்றன. இவை எல்லாமே பொதுவாய்ப் பன்மொழி அகராதிகள் (Multilingual Dictionaries) எனக் குறிப்பிடப் பெறுகின்றன. இவ்வகையில் பல சொற்றொகுதிகள் தமிழில் 1851-2 A Polyglot Vocabulary in the English, Teloogoo and Tamil Languages எனும் சொற்றொகுதி வெளிவந்துள்ளது. எல்.எஸ். டியூபியஸ் (L.S. Dupuis),

எல்.எம். மௌசெட் (L.M. Mousset) இருவராலும் 1846-இல் இலத்தீன் - பிரெஞ்சு-தமிழ் அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. 1780-இல் உருவாக்கப்பட்ட பிரெஞ்சு - தமிழ்-தெலுங்கு அகராதியின் கையெழுத்துப்படி பாரிஸ் நூலகத்தில் உள்ளது. வீரமாமுனிவர் 1742-லேயே போர்ச்சுகீசு-இலத்தீன் - தமிழ் அகராதியைத் தொகுத்துள்ளார். இவ்வாறே நான்குமொழி அகராதிகளும் ஐந்து, ஆறு, ஏழுமொழி அகராதிகளும் வெளிவந்துள்ளன. பதினான்கு, பதினாறு, பதினேழு மொழிச் சொற்றொகுதிகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

**காலமுறை அகராதிகள்**

மொழி அகராதிகள் கால அடிப்படையில் 1. வரலாற்று அகராதி (Diachronic Dictionary), 2. குறித்த கால நிலை அகராதி (SynchronicDictionary) என இரண்டாய் வகைப்படுத்தப் பெறும் இவற்றுள் வரலாற்று அகராதி வரலாற்றுப் பொருள்நிலை அகராதி (Historical Dictionary), சொற்பிறப்பியல் அகராதி (Etymological Dictionary) வகைப்படுத்தப்பெறும். ST GOT மேலும் இரண்டாய்

**வரலாற்று அகராதி**

"வரலாற்று அகராதிகள் அடிப்படையில் வரலாற்றோடு தொடர்புடையன. சொற்களின் வடிவம் அவற்றின் பொருள் எனும் இரண்டின் வளர்ச்சியிலும் அவை வரலாற்றோடு தொடர்புடையன என்கிறார் சுகுஸ்தா (1971:200). இவ் வகையில் வரலாற்று அகராதிக்கான தரவுகள் குறிப்பிட்ட ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தொடங்குகின்றன. ஆரம்ப காலம் முதல் இக்காலம் வரையில் அனைத்துக்கால மொழித் தரவுகளும் அடிப்படையாய்க் கொள்ளப் பெறும். தமிழில் ஒரு வரலாற்று அகராதியை உருவாக்குகையில் சங்ககாலந் தொட்டு இக்காலம் வரையிலான இலக்கியம், கல்வெட்டு, உரைநடை, தகவல்தொடர்பு சாதனங்கள், வட்டார வழக்கு, நாட்டுப்புற இலக்கியம் என அனைத்தும் தரவு மூலங்களாய்க் கொள்ளப்படல்

வேண்டும். இவ்வகை அகராதி இதுவரை தமிழில் உருவாகவில்லை. இதற்கான முயற்சி தமிழில் நடந்துள்ளது.

**சொற்பிறப்பு அகராதி**

'Etymos' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள் உண்மை என்பதாகும். Etymology எனும் சொல் 'சொல்லின் உண்மை வரலாற்றைக் கூறுதல்' எனப் பொருள்படுகிறது. இவ்வடிப் படையில் பார்க்கின்ற பொழுது ஒருசொல்லின் பிறப்பு வரலாற்றை, பிறப்பு மூலத்தைச் சுட்டுவதே சொற்பிறப்பியல் என்பது புலனாகின்றது. 'காலத்தால் முற்பட்ட சொற்பயன் பாடு நோக்கிச் சொற்களின் தொன்மை வடிவத்தைத் தீர்மானிக்க வேண்டும்' என ஸ்கீட் (W.W.Skeet) (செ.சொ.பே. ப.42) கூறும் கருத்து சொற்பிறப்பியல், சொல்லின் தொல் வடிவத்தில் கவனம் காட்டும் நிலையை வெளிப்படுத்துகிறது.

1. சொற்பிறப்பியல் அகரமுதலி ஏனை அகரமுதலிகளைப் போலன்றிச் சொல்லுக்கு மூலமும் கூறும்.

2.சொற்பிறப்பியல் அகரமுதலியில் இனச்சொற்கள் தவறாது காட்டப்படும்.

3. சொற்பிறப்பியல் நெறியீடுகளைத் தழுவிச் சொல்லின் மூலம் அமைந்திருக்கும்.

4.தெளிவான உறுதிப்படாதபோது ஓரளவுக்குச் சரியெனப் பட்ட மூலம்

ஒரு குறித்த காலநிலை அகராதி

குறித்த காலநிலை அகராதிகளைப் பொது,சிறப்பு என இரண்டாய்ப் பாகுபடுத்தலாம். பொதுவகையுள் அடங்கும் அகராதிகள் தகுமொழிவிளக்க அகராதி (Standard descriptive dictionary), பொதுமொழி அல்லது மீவிளக்க அகராதி (Overall descriptive dictionary) எனவும் இரண்டாய் வகைப்படுத்தப் பெறும்.

## தகுமொழி விளக்க அகராதி

குறிப்பிட்ட மொழிச் சமூகத்தில் பேசப்படும் மொழிக்குள் வட்டாரவழக்கு, கிளைமொழி வழக்கு, கொச்சை வழக்கு, குழூஉக்குறி. இடக்கரடக்கல், மங்கலவழக்கு, பழமொழி, மரபுத்தொடர் மரூஉவழக்கு, துறைவழக்கு, நாட்டுப்புறவழக்கு எனப் பலவகை

கா (ஒரு கால்) என்னும் முன்னடையோடு குறிப்பிடப்படும்.

## குறிப்பிட்ட வழக்கு பற்றிய அகராதிகள்

நிலஎல்லை, துறை, தொழில் போன்றவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் அகராதிகள் இவ்வகையுள் அடங்குகின்றன. வட்டாரவழக்கு அல்லது கிளைமொழி அகராதி, கலைச்சொல்லகராதி, கைவினைக்கலைச்சொல் அகராதி, கொச்சைவழக்கு, மங்கலவழக்கு, குழூஉக்குறி பற்றிய அகராதிகள் இவ்வகையுள் அடங்கும் சிறப்பு அகராதிகள்.

## வட்டாரவழக்கு/கிளைமொழி அகராதி

மிகப்பரந்த நிலப்பரப்பில் பேசப்படும் மொழியில் அவ்வவ் வட்டாரஞ்சார்ந்த சிறப்பு வழக்குகள் மிகுதியும் உண்டு. குறிப்பிட்ட வட்டாரத்தின் தனித்தன்மை வாய்ந்த சொற்பயன்பாடுகள் அகராதித் தரவுகளாய்க் கொள்ளப்படும். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தென்னார்காடு, திருநெல் வேலி, கன்னியாகுமரி, கோவை போன்ற பல மாவட்டங்களில் பொதுவழக்கில் இடம்பெறாத தனித்தன்மை வாய்ந்த பலசொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை அடுத்த வட்டாரஞ் சார்ந்தோர்க்குப் பொருள் விளங்காச் சொற்களாயுள்ளன. சென்னை வழக்கில் உடைத்தகடலை என்பது பொட்டுக்கடலையைக் குறிக்கும். கோவை வழக்கில் மலார் என்பது விரைவுப் பொருளைத் தரும் சொல்லாய்ப் பயன்படுத்தப்படுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் எம்பளது எண்பது எனும் பொருளிலும் மலாட்டை என்பது நிலக்கடலை

எனும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆச்சி செட்டிநாட்டு வழக்காய் உள்ளது. அப்பத்தாள்- தந்தையின் தாய்,அம்மாத்தாள், அம்மாச்சி, அம்மாய் - தாயின் தாய். அப்பாயி - தந்தையின் தாய், அப்பச்சி -அப்பா, அலம்பல்-கொள்ளை நோய், சவரிமெத்தை கால்மிதி, சவங்கல்- வலிமையற்றவர், சவாரிக்கட்டை-ரவள்ளி என்பன போன்ற பலவகைச் சொற்களும் வட்டார ழக்குகளில் உண்டு. மிகப்பெரிய அகராதிகளில் இவை திவுகளாய்த் தரப்பட்டு வட்டாரக் குறிப்பான் (label)தரவுகளாய் உருவாக்கப்படும் அகராதியே வட்டாரவழக்கு அகராதி ஆகும் .

இவ்வகராதியையும் பொது, சிறப்பு என என இருவகைளில் தொகுக்கலாம். அனைத்து வட்டார வழக்குகளையும் பற்றிய அகராதியைப் பொது எனவும், குறிப்பிட்ட வட்டாரச் சொற்களை மட்டுமே தரும் அகராதியைச் சிறப்பு எனவும் வகைப்படுத்தலாம். வட்டார வழக்குகளுக்கான பொது அகராதியில் எவ்வட்டார வழக்கு எனும் குறிப்புகள் தரப்பெறும்.

தமிழில் ஒரே ஒரு வட்டார வழக்குச் சொல்லகராதி மட்டுமே வந்துள்ளது. கி. ராஜநாராயணனின் 'வட்டார வழக்குச் சொல்லகராதி' யில் அடியான்-வரவு, ஆதாட்டியம்-வலிமை என ஒருபொருட் பலசொல் பொருட் சொல்லாய்த் தரப்பட்டிருப்பதுடன்

இளவட்டவெத்தலை - மூனுமாச விருந்து உண்ட புதுமாப்பிள்ளை இளவட்டக்கல்லைத் தூக்க முடியாவிட்டால் அவரிடமிருந்து வசூலிக்கும் வெற்றிலை

என விளக்கச் சொற்பொருட்களும் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியில் பல சொற்களுக்கு மேற்கோள் தொடர்களும் காட்டப்பட்டுள்ளன. எட்டுக்கும் கூடுவான் எழவுக்கும் கூடுவான், முகத்தாட்சயண்யத்துக்கு முண்டச்சி முந்தி விரிச்ச மாதிரி, நெளுசல் எடுத்துட்டான் எனும் மரபுப் பயன் பாடுகளும் பதிவுகளாய்த்

தரப்பட்டுள்ளன. தரவுகளின் அடிப்படையிலேயே இவ்வகராதி உருவாக்கப்பட்டதை இப்பதிவுகள் காட்டுகின்றன. எனவே இவ்வகராதி உருவாக்கத்திற்குக் களஆய்வின் மூலம் தரவுகள் திரட்டப்பட வேண்டுவது அவசியமாகும்.

இருபதாம் நூற்றாண்டு அகராதிகளைப் பற்றி இந்நூற்றாண்டினர் நன்கறிவர். இந்நூற்றாண்டில், போர்ச்சுகீசியம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகள் புதிதாகத் தோன்றுவது நின்றுவிட, தமிழுக்குத் தமிழ் அகராதிகளும் ஆங்கிலத்தோடு தமிழ் பிணைந்த அகராதிகளும் மட்டுமே புதிது புதிதாகத் தோன்றலாயின. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றின பிரெஞ்சோடு தமிழ் பிணைந்த பழைய அகராதிகள் மட்டும், இருபதாம் நூற்றாண்டில், புதுச்சேரி மாதாகோவில் அச்சகத்தாரால் மறுபதிப்பு செய்யப் பெற்றன.

உரிமை பெற்ற இந்தியாவில் வேற்று நாட்டு மொழிகளின் ஆட்சி மறைய, இந்திய மொழிகள் தலைதூக்கத் தொடங்கியதால், சம்சுகிருதம், இந்தி, மராட்டி, தெலுங்கு போன்ற இந்திய மொழி களுடன் தமிழ் பிணைந்த அகராதிகள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றத் தொடங்கின. தமிழுக்குத் தமிழிலுங்ட, பல்துறை யகராதி வகைகள் பல்கலாயின. இனி, இவ்விருபதாம் நூற்றாண்டு அகராதிகளைக் காலவாரியாக ஆய்வாம்.

**அபிதான கோசம்**

ஆசிரியர்- யாழ்ப்பாணம்-மானிப்பாய் ஆமுத்துத் தம்பிப்பிள்ளையவர்கள். யாழ்ப்பாண வெளியீடு. 1902. இந்நூலை, அளவையும், அமைப்பையும் நோக்க அபிதான சிந்தாமணியின் தம்பி எனலாம்: காலத்தை நோக்க அதன் தமையன் எனலாம். 'அபிதானம்' என்றால் 'பெயர்' என்று பொருளாம். 'கோசம்' என்றால் 'தொகுதி' என்று பொருளாம். சொல்லுக்குச் சொல் நேர்ப்பொருள் கூறும் ஒரு சொல்

விளக்க அகராதியன்று இது. பல்வேறு சிறப்புப் பெயர்களை அகரவரிசையில் நிறுத்தி, அவற்றை ஒவ்வொரு பத்தியில் விளக்குவது இந்நூல். கலைக் களஞ்சியத்திற்கு முன்னோடி போன்றது அபிதான சிந்தாமணி எனில், அதற்கும் முன்னோடியாகத் திகழ்வது இது

**பதினெண் சித்தர் அகராதிகள்**

பதினெண் சித்தர் என்னும் பெயரால் பின்வரும் அகராதிகள் காணப்படுகின்றன:

வைத்திய மூலிகை யகராதி

வைத்திய மூலிகை விரிவகராதி

வைத்திய மலையகராதி

**நா. கதிரைவேற் பிள்ளையகராதி**

இது தமிழுக்குத் தமிழ் அகராதியாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நா. கதிரைவேற் பிள்ளையவர்களால் ஆக்கப் பட்டது.

**தமிழ்ச் சொல்லகராதி**

இது தமிழுக்குத் தமிழ் அகராதி. சங்க அகராதி, தமிழ்ச் சங்க அகராதி என்றுங்கூட இஃது அழைக்கப்படும். ஆசிரியர் இலங்கை சி. டபுள்யூ கதிரைவேற் பிள்ளையவர்கள் காலம் 1904. தலையணை போன்ற பெரிய இவ்வகராதி மூன்று பாகங்கள் உடையது; ஏறத்தாழ 1800 பெரிய பக்கங்களைக் கொண்டுள்ளது. இக்காலத்தில் வளர்ந்துள்ள பல்வகைக் கலைச் சொற்கள் உட்பட ஏறக்குறைய 63,900 சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் அடுத்த பதிப்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப்பெற்றது.

இலங்கை சி. டபிள்யூ கதிரைவேற் பிள்ளையின் இவ்வகராதி 1904ஆம் ஆண்டிலேயே அச்சாயினும், அடுத்த பதிப்பாக இதன் முதல் பாகம் 1910இலும், இரண்டாம் பாகம் 1912இலும், மூன்றாம் பாகம் 1923இலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அச்சேறின. இப்போது இதன் முழு உருவத்தையும் ஒருசேரக் காணலாம்.

### தமிழ்ப் பேரகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதியும் மிகப்பெரியது; சதுர் அகராதிபோல் நான்கு தொகுதிகள் உடையது; த. குப்புசாமி நாயுடு என்பவரால் தொகுக்கப் பெற்றது; சென்னை கோபால விலாச அச்சியந்திர சாலையில் 1906இல் பதிப்பிக்கப்பட்டது.

A Classified Glossary of Tamil Words With Explanatory Meaning

பல்வேறு கலைத்துறைகள் பற்றிய தமிழ்ச் சொற்கட்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கம் தருவது இந்நூல், சென்னைப் பதிப்பு 1908. முகப்புப் பக்கம் இன்மையால் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. ஆசிரியர் முன்னுரையின் இறுதியில் 'C. S. Madras. September 21, 1908' என உள்ளது. C. S. என்னும் பெயரின் முழு உருவம் தெரியவில்லை.

### அகராதியால் விளையும் பயன்கள்

அகராதி (dictionary) என்பது ஒரு மொழியில் உள்ள சொற்களை அகர வரிசையில் தொகுத்து, அதற்கான பொருள் மற்றும் வேறு தகவல்களை அளிக்கும் ஒரு நூல் ஆகும். அகராதிகள் மூலம் பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன.

- **பொருள் தெரிதல்:**
- அகராதி மூலம் தெரியாத சொற்களின் பொருளை தெரிந்து கொள்ள முடியும்.

- **வார்த்தைகளை அடையாளம் காணுதல்:**
- அகராதி மூலம் வார்த்தைகளின் சரியான வடிவம், எழுத்துப்பிழை இல்லாத வடிவம் ஆகியவற்றை அறியலாம்.
- **சொற்களின் பயன்பாட்டை அறிதல்:**
- அகராதி மூலம் சொற்களின் பயன்பாடு, சொற்களின் வேர் சொற்கள், சொற்றொடர்கள், போன்றவை பற்றி அறியலாம்.
- **மொழியைப் புரிந்துகொள்ளுதல்:**
- அகராதி மூலம் ஒரு மொழியின் சொற்கள், சொற்பொருள் மற்றும் இலக்கியம் பற்றி அறிய முடியும்.
- **மொழிபெயர்ப்புக்கு உதவுதல்:**
- அகராதி மூலம் ஒரு மொழியை இன்னொரு மொழியில் மொழிபெயர்க்க உதவும்.
- **அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சொற்களை அறிதல்:**
- அகராதி மூலம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சொற்களின் பொருளை தெரிந்து கொள்ளலாம்.
- **கலைக்களஞ்சிய அகராதிகள்:**
- கலைக்களஞ்சிய அகராதிகள் மூலம் ஒரு துறையைச் சார்ந்த சொற்களின் விரிவான பொருளை அறியலாம்.
- **அகராதியியல் துறையில் பயனுள்ளவை:**
- அகராதியியல் துறையில் படிக்கும் மாணவர்கள், அகராதிகள் மூலம் சொற்களின் பொருண்மை மற்றும் அமைப்பு பற்றி தெரிந்து கொள்ளலாம்.
- **மொழி வளர்ப்பு:**

அகராதி மூலம் ஒரு மொழி வளர உதவுகிறது. புதிய சொற்களை அறிந்து, மொழி பயன்பாட்டை விரிவாக்குகிறோம்.

அகராதிகள் மொழிப் புரிதல், மொழிபெயர்ப்பு, எழுதுதல் மற்றும் தகவல் தேடும் போன்ற பல செயல்பாடுகளுக்கு பெரிதும் உதவுகின்றன.

**கலைக்களஞ்சியம்**

கலைக்களஞ்சியம் என்பது, பல துறைகள் அல்லது ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த தகவல்களைக் கொண்ட ஒரு விரிவான அறிவுத்தொகுப்பு ஆகும். இது எழுத்து வடிவில் அல்லது மின்னணு வடிவில் இருக்கலாம்.

தமிழில் கலைக்களஞ்சிய முயற்சி 1902-ஆம் ஆண்டிலேயே துவங்கிவிட்டது. இம் முயற்சி யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையால் செய்யப்பட்டது. அபிதானகோசம் எனும் வடமொழிப் பெயருடன் வந்த இக் கலைக்களஞ்சியத்தில் பெயர்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கலைக்களஞ்சியப் பண்பும் மொழி அகராதிக் கூறுகளும் கலந்ததாய் இது அமைந்துள்ளது. பின்வரும் பதிவுகள் இதற்குச் சான்று.

அக்கினி சயனம் - இஃதோர் யாககருமம். யாக கருத்தா அடைய வேண்டிய பயனைத் தபன் என்னும் அக்கினியினது புத்திரர் பதினெழுவரும் அபகரித்துக் கோடலின் பரிகாரமாகச் செய்யப்படுவது

அக்கினிசுவோத்தர் - இவர்கள் ஒருபாற் பிதிர்கள

ககுபு தேவி - தர்மன்பாரி, தக்ஷின் மகள்

ககேந்தரன் - புள்ளரசு

திருஷ்டகேது - 1. (மி) சத்தியதிருதன் புத்திரன்,

2. (பா) திருஷ்டத்துயுமனன் மகன்,

3. (கா) சுகுமாரன் மகன்

இதற்கடுத்த நிலையில் தமிழகத்தில் 1910-இல் அபிதான சிந்தாமணி உருவாக்கப்பட்டது. இதைத் தொகுத்தவர் ஆ சிங்காரவேலு முதலியார்

ஆவார். இதில் இலக்கண இலக்கியம், புராணம், இதிகாசம். காப்பியம் தொடர்பான பெயர்கள் பலவும் இடம்பெற்றுள்ளன.

வி.ஐ. சுப்பிரமணியத்தைப் பதிப்பாசிரியராய்க் கொண்ட Dravidian Encyclopaedia வின் இரண்டு தொகுதிகள் ISDL ஆல்வெளியிடப் பட்டுள்ளன (1993). தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (3 தொகுதிகள்) 1974-89) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளி யிடப்பட்டுள்ளது. வீ.ப.கா. சுந்தரம் உருவாக்கிய தமிழிசைக் கலைக்களஞ்சியத்தின் முதலாம் தொகுதி (1993) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஆசியவியல் Encyclopaedia of Tamil Literature பெயரில் (1991,92) இரண்டு தொகுதிகளை வெளி யிட்டுள்ளது. குஉறிகோசாகா, ஜான் சாமுவேல் இருவரும் இதன் பதிப்பாசிரியர்கள்.

1981-இல் உருவான தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிய அளவில் கலைக்களஞ்சிய முயற்சி 1983-ஆம் பெரிய ஆண்டில் தொடங்கப்பட்டது. வாழ்வியல் (Humanity), அறிவியல் எனும் இரண்டனுக்கும் தனித்தனிக் கலைக்களஞ் சியங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டன. வாழ்வியல் களஞ்சியத்தை 15 தொகுதிகளாயும் அறிவியல் களஞ்சியத்தை 20 தொகுதிகளாயும் வெளியிட முடிவெடுக்கப்பட்டது. 1995 ஆகஸ்ட் வரையில் வாழ்வியலில் 13 தொகுதிகளும் அறிவியலில் 9 தொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

**கலைக்களஞ்சியத்தின் முக்கிய அம்சங்கள்:**

கலைக்களஞ்சியங்கள், ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிய விரிவான விளக்கத்தை வழங்குகின்றன.

- அறிவியல்:

பல அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சொற்களின் விளக்கங்களை வழங்குகின்றன.

- அறிவியல் அறிவுகள்:

பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிவுகளைக் கொண்டுள்ளன.

- கலாச்சாரம்:

கலை, இலக்கியம், வரலாறு, புவியியல் போன்ற கலாச்சார அம்சங்களையும் உள்ளடக்கியவை.

- பல்வேறு வடிவங்கள்:

கலைக்களஞ்சியங்கள் புத்தகங்கள், இணையதளங்கள், பயன்பாடுகள் போன்ற பல வடிவங்களில் கிடைக்கின்றன.

கலைக்களஞ்சியத்தின் வகைகள்:

- பொது கலைக்களஞ்சியங்கள்:

பல துறைகளைச் சார்ந்த தகவல்களைக் கொண்டவை.

- துறைசார் கலைக்களஞ்சியங்கள்:

ஒரு குறிப்பிட்ட துறையை மட்டும் சார்ந்தவை (எ.கா: மருத்துவ கலைக்களஞ்சியம்).

கலைக்களஞ்சியத்தின் பயன்கள்:

- பயிற்சி:

புதிய தகவல்களைப் பெற்று அறிவை வளர்க்க உதவுகின்றன.

- ஆய்வு:

ஆராய்ச்சிக்குத் தேவையான தகவல்களைக் கிடைக்கின்றன.

- விசாரணை:

ஒரு பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றன.

- தகவல்:

பொதுவான மற்றும் சிறப்புத் தகவல்களைப் பெற உதவுகின்றன.

**பேரகராதி ஒற்றுமை வேற்றுமைகள்**

பேராகராதி என்றால் அகராதி (dictionary) என்று பொருள். "ஒற்றுமை" என்றால் ஒருமித்த தன்மை, ஒருத்தன்மை, அல்லது பொதுவான தன்மை என்று பொருள். "வேற்றுமை" என்றால் வேறுபாடு அல்லது வித்தியாசங்கள் என்று பொருள். எனவே, அகராதி ஒற்றுமை வேற்றுமைகள் என்றால் அகராதியில் சொற்கள், பொருள்கள், இலக்கணம், போன்றவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது காணப்படும் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் குறிப்பது.

- **ஒற்றுமை ( ஒற்றுமை):**

இது ஒரு சொல்லைப் பொறுத்தவரை, பல அகராதிகளில் அதன் பொருள், பயன்பாடு, இலக்கணம் ஆகியவை ஒரே மாதிரியாக இருக்கக்கூடும். இது போல பல சொற்களுக்கு ஒற்றுமை காணப்படலாம்.

- **வேற்றுமை (வேற்றுமை):**

இது ஒரு சொல்லைப் பொறுத்தவரை, பல அகராதிகளில் அதன் பொருள், பயன்பாடு, இலக்கணம் ஆகியவை வேறுபடலாம். சில சொற்களைப் பொறுத்தவரை அகராதிகளில் வேறுபடும் விளக்கங்கள், அர்த்தங்கள் காணப்படலாம்.

**பேராகராதி :**

இது பல அகராதிகள், குறிப்பாக தமிழ் அகராதிகள் ஒன்றுக்கு ஒன்று வேறுபடும் விதங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு சொல்லின் பொருள் ஒரு அகராதியில் ஒரு மாதிரி கொடுக்கப்பட்டால், மற்றொன்றில் வேறொரு மாதிரி கொடுக்கப்படலாம். சில அகராதிகள் ஒரு சொல்லின் இலக்கணப் பாகுபாடுகளை விரிவாக விளக்கும்போது, மற்றவை அதைச் செய்யாமல் இருக்கலாம். இப்படி பல அகராதிகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மொழி பற்றிய புரிதல், இலக்கணம் பற்றிய புரிதல், சொல் பொருள்கள் பற்றிய புரிதல் ஆகியவற்றை அதிகமாக்க உதவுகிறது.

அகராதி தொகுப்புப் பணிகள் என்பது, ஒரு மொழியில் உள்ள சொற்களை அகர வரிசையில் ஒழுங்குபடுத்தி, அவற்றின் பொருள், பயன்பாடு, சொற்பிறப்பு போன்ற விவரங்களை அளிக்கும் பணியாகும். இது அகராதியியல் (lexicography) என்ற துறையில் அடங்கும்.

**அகராதி தொகுப்புப் பணிகள்**

- **சொற்களைச் சேகரித்தல்:**

அகராதி தொகுப்பாளர்கள், பல்வேறு இலக்கியங்கள், உரையாடல்கள், செய்திகள் போன்ற மூலங்களிலிருந்து சொற்களைச் சேகரிக்கின்றனர்.

- **சொற்களை ஒழுங்குபடுத்துதல்:**

சேகரிக்கப்பட்ட சொற்கள் அகர வரிசையில் (alphabetical order) ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

- **சொற்களின் பொருள் விளக்கம்:**

ஒவ்வொரு சொல்லின் பொருளையும், அது பயன்படும் விதத்தையும், சொற்பிறப்பை (etymology) போன்றவற்றை விளக்குகின்றனர்.

- **பொருத்தமான உதாரணங்கள்:**

சொற்களின் பயன்பாட்டை விளக்குவதற்காக, பொருத்தமான உதாரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

- **பயன்பாட்டு விதிகள்:**

சில சொற்கள் எந்தெந்த சூழலில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய விதிகளையும் அகராதியில் காணலாம்.

அகராதி தொகுப்பாளர்கள்:

மொழி அறிஞர்கள் (linguists), பழைய மொழி ஆய்வாளர்கள் (ancient linguists), சொற்பொருள் ஆய்வாளர்கள் (lexicographers), நூலகத் துறை சார்ந்தவர்கள் (library professionals).

அகராதி தொகுப்புப் பணிகளின் வகைகள்:

- **ஒரே மொழி அகராதி:**

ஒரு மொழியில் உள்ள சொற்களின் பொருளை அதே மொழியில் விளக்குவது.

- **இரு மொழி அகராதி:**

ஒரு மொழியில் உள்ள சொற்களின் பொருளை மற்றொரு மொழியில் விளக்குவது.

- **வரலாற்று அகராதி:**

சொற்களின் சொற்பிறப்பு மற்றும் காலப்போக்கு வளர்ச்சி பற்றி விளக்குவது.

- **கலைக்களஞ்சிய அகராதி:**

சொற்களின் வரையறையுடன், கலைகள், அறிவியல் போன்ற பிற தகவல்களையும் அளிப்பது

வட்டாரச் சொல்லகராதி என்பது ஒரு குறிப்பிட்ட வட்டார வழக்கு அல்லது மொழிவடிவத்தில் பயன்படுத்தப்படும் சொற்களைக் குறிக்கும் அகராதி. பழமொழி, விடுகதை, மரபுத் தொடர் அகராதி என்பவை, தமிழ் இலக்கியம் மற்றும் மொழிவழக்கில் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள், பழமொழிகள், விடுகதைகள் மற்றும் மரபுத்தொடர்களைக் குறிக்கும் அகராதிகள் ஆகும்.

**வட்டாரச் சொல்லகராதி:**

- ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கொண்ட அகராதி.
- வட்டார வழக்கு அகராதிகள், கி.ராஜநாராயணன், பெருமாள் முருகன், கண்மணி குணசேகரன் போன்றோரின் படைப்புகளாகும்.
- வட்டார வழக்கு அகராதிகள், அந்தந்தப் பகுதியில் உள்ள சொற்களின் பொருள், பயன்பாடு மற்றும் வேறுபாடுகளை விளக்குகிறது.

**பழமொழி, விடுகதை, மரபுத் தொடர் அகராதி:**

- பழமொழிகள், விடுகதைகள் மற்றும் மரபுத்தொடர்கள் ஆகியவை தமிழ் இலக்கியம் மற்றும் மொழிவழக்கில் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள்.
- பழமொழி அகராதி, பழமொழிகளின் பொருள், தோற்றம் மற்றும் பயன்பாட்டை விளக்குகிறது.
- விடுகதை அகராதி, விடுகதைகளின் பொருள், விடை மற்றும் பயன்பாட்டை விளக்குகிறது.

- மரபுத் தொடர் அகராதி, மரபுத்தொடர்களின் பொருள், பயன்பாடு மற்றும் வேறுபாடுகளை விளக்குகிறது.
- தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதியின் முதன்மை ஆசிரியர் பா.ரா. சுப்பிரமணியன், பழமொழிக்கும் மரபுத்தொடருக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கியுள்ளார்.

பகுதி அ

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக. (10x1=10)**

1. அகராதி – பொருள் தருக.
2. ஒருபொருட்பன்மொழி என்றால் என்ன?
3. சதுரகராதியை உருவாக்கியவர் யார்?
4. மூங்கா என்றழைக்கப்படுவது எது?
5. நிகண்டு என்ற சொல்லின் பொருளை எழுதுக.
6. சூடாமணி நிகண்டின் ஆசிரியர் யார்?
7. நிகண்டுகளுள் மிகவும் பழமையானது எது?
8. சென்னை பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட அகராதி எது?
9. இரு மொழி அகராதி என்றால் என்ன?
10. சொற்பிறப்பு மற்றும் காலப்போக்கு வளர்ச்சி பற்றி கூறும் நூலை எழுதுக.

பகுதி ஆ

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக. (5x5=25)**

11.அ.அகராதி – வரையறை தருக.

12.அ.இலக்கணமும் அகராதியும் - ஆராய்க.

13.அ.நிகண்டு – வரையறுக்க.

14.அ.தமிழ் அகராதிகளின் தோற்றத்தை பற்றி எழுதுக.

15.அ. அகராதிகளின் வகைகளை விளக்குக.

பகுதி இ

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக. (5x8=40)**

16.அ. அகராதியின் சிறப்புப்பொருள்,பொருள் வழக்கு வரையறை விளக்குக.

17.அ.தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகலை விவரி.

18.அ. தமிழ் நிகண்டுகளின் வளர்ச்சி வரலாற்றை விளக்குக.

19.அ.சதுரகாராதி குறித்து விவரி.

20.அ. அகராதி களஞ்சியம், பேரகராதியின் ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்குக.

.

**பார்வை நூல்கள்**

1. தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல் (1992 வரை) -. இரா. திருநாவுக்கரசு
2. தமிழ் மின்சொற் களஞ்சியம் எஸ். இராசேந்திரன், திரு. ச. பாஸ்கரன்
3. சங்க இலக்கியச் சொல்லடைவு - பெ. மாதையன்,
4. தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி - தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை.

**முனைவர் ஆ.உஷா,**

உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,

மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி.

9489303608

ushaskv23@gmail.com